Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 20

# ஈழநாடு

ஈழநாடு
ஆண்டுச் சந்தா
ரூபாய் 10-00
தனிப்பிரதி
சதம் 20

தேசிய வார இதழ்

மலர் 1. யாழ்ப்பாணம், விகாரி, புரட்டாசி 31- ஆம் நாள். ரபியுலானி பிறை 14 (17-10-59) சனிக்கிழமை இதழ் 37.

## கோப்பாய், வவனியா, அத்தனகல்ல இடைத் தேர்தல்கள் நடைபெறுமா?

### அவசரகால சட்டம் தளர்த்தப்பட்டாலன்றி தேர்தல் இல்லை

### வவனியாவில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் போட்டியிடுமா?

— நமது அரசியல் நிருபர் —

கோப்பாய், வவனியா, அத்தனகல்ல இம்மூன்று தொகுதிகளிலும் சமீபத்தில் இடைத் தேர்தல் நடக்குமா? அவசரகால ஆட்சி பிரகடனம் நீடிக்கையில், தேர்தல் பொதுக்கூட்டங்கள் நடாத்த அனுமதிக்கப்படுமா? அல்லது அப்பகுதிகளில் மட்டும் இந்தப் பிரகடனம் தளர்த்தப்படுமா? இன்றேல் அவசர ஆட்சி முடிந்த பிற்பாடே, தேர்தல் நடைபெறுமா?

இதுபற்றி அரசாங்கம் ஆலோசனைசெய்து வருகின்றதாகத் தெரிகிறது. இதை எழுதும்வரை, இத்தொகுதி ஸ்தானங்கள் காலியானதாகக் கெசட்டில் பிரசுரம் செய்யப்படவில்லை. ஸ்தானம் காலியான 4 வாரங்களுக்குள் விளம்பரம் செய்யவேண்டுமென்பது சாதாரண விதி. அவசரகாலச் சட்டத்தின்படி இந்த விதி கட்டுப்படுத்தாது.

இதற்கிடையே, பார்லிமெண்டையே கலைத்துப் பொதுத்தேர்தல்நடாத்தவேண்டும் என்று எதிர்க் கட்சிகள் சேர்ந்து ஒரு தீர்மானம் நிறைவேற்றியுள்ளதாகத் தெரிகிறது. இத்துடன் மந்திரிசபை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்துள்ளதாகப் பார்லிமெண்ட் நிகழ்ச்சி நிரலில் அச்சிட்டுள்ளனர். இத்தீர்மானம் எப்போது விவாதத்துக்கு வருமென்பது தெரியவில்லை. அவசரகால பிரகடனத்தை நீக்கிவிடவேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளதாம்.

பார்லிமெண்டைக் கலைத்துத் தேர்தல் நடாத்த இது சமயம் அல்லவென்றும், தேர்தல் என்றால், கட்சிப் போட்டிகளும், துவேஷப் பிரசாரங்களும் கிளம்பி அமைதியைக் குலைக்கலாமென்றும், பொது மக்கள் விரும்பினால்தான் பொதுத்தேர்தல் நடைபெறும் என்றும், கொழும்பு வானொலிமூலம் அறிவிக்கப்பட்ட அரசியற் குறிப்புகளில் அரசாங்கத்தின் சார்பாகப் பதில் அளிக்கப்பட்டுள்ளது. இதைக் கவனிக்கையில் இப்போது பொதுத்தேர்தல் நடைபெறுமென்று தோன்றவில்லை. இடைத்தேர்தல்கள் பற்றியும் இவ்விதமே அரசாங்கம் கருதுகின்றதா என்பது சீக்கிரத்தில் தெரிந்துவிடும்

[9ஆம் பக்கம் பார்க்க]



## புத்தரக்கித்தவுக்கும் மற்றும் இருவருக்கும் இம்மாதம் 28ந் திகதி வரை விளக்க மறியல்

### சோம ராம இம்மாதம் 20ந்–திகதி ஆஜர் செய்யப்படுவார்

### பண்டாரநாயக்கா படு கொலை வழக்கு

கொழும்பு.

**பொலிசாரால் கீழ்க்கண்ட அறிக்கை வியாழக்கிழமை பகல் 12-30க்கு வெளியிடப்பட்டது:**

வண. மபடிகம புத்தரக்கித்த தேரோ, வேலாம்பிட்டியாவைச் சேர்ந்த திரு. எச். பி. ஜயவர்த்தன, தெமட்டக் கொடை, பேஸ்லைன் ரோட்டைச் சேர்ந்த திரு. ஸி. அமரசிங்க, இவர்கள் காலஞ்சென்ற பிரதம மந்திரி சுடப்பட்டது சம்பந்தமாக நேற்று ரகசிய பொலிசாரால் கைது செய்யப்பட்டு கொழும்பு பிரதம மாஜிஸ்டிரேட் முன் ஆஜர் செய்யப்பட்டனர். அவர்கள் மூவரையும், விளக்க மறியலில் வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

அவர்களை மாஜிஸ்டிரேட் 1959-ம் வருஷம் ஒக்டோபர் மாதம் 28-ந் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இவ்வழக்கு சம்பந்தமாக ஏற்கனவே பிஸ்கால் காவலில் உள்ள வண. தல்துவ சோமராம தேரோ 1959-ம் வருஷம் ஒக்டோபர் மாதம் 20-ந் திகதி நீதி மன்றத்தில் ஆஜர் செய்யப்பட வேண்டும்.

(ஒப்பம்)

தகுதிபெற்ற அதிகாரி

### புதன் இரவு அறிக்கை

சென்ற புதன்கிழமை இரவு பொலீஸ் இலாகா கீழ்க்கண்ட அறிக்கையை வெளியிட்டுள்ளதாக தகுதிபெற்ற அதிகாரி தெரிவிக்கிறார்:


காலஞ்சென்ற பிரதம மந்திரி எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் கொலை சம்பந்தமாக வண. மபடிகம புத்தரக்கித தேரோ, திரு. ஸி. அமரசிங்க, திரு. எச். பி. ஜயவர்த்தன இவர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர். நாளை (வியாழக்கிழமை) காலை மாஜிஸ்டிரேட் முன் இவர்கள் ஆஜர் செய்யப்படுவர்.

### யாழ்ப்பாணத்தில் மத்திய பஸ் நிலையம்

யாழ்ப்பாணத்தில் சென்ற புதன்கிழமை காலை யாழ்ப்பாணம் மேயர் திரு. ஏ. தங்கராஜா துரையப்பா புதிய மத்தியபஸ் நிலையத்தைத் திறந்து வைத்தார்.

புதிய பஸ்நிலையம் ராணி தியேட்டருக்கு எதிராகவுள்ள மைதானத்தில் அமைக்கப் பெற்றிருக்கிறது. இது பழைய நிலையத்திலிருந்து 100 யாருக்கு அப்பால் உள்ளது. பிரயாணிகள் தங்கிநிற்பதற்கான வசதிகள் இங்கு உண்டு.

இந்த பஸ் நிலையம் தற்காலிகமானதே. விசாலமானதும், பல வசதிகளும் நிறைந்த பஸ் நிலையம் 40,000 ரூபாய் செலவில் ஆறுமாத காலத்தில் நிறுவப்படுமென மேயர் தமது பேச்சிற் தெரிவித்தார்.




**Wolseley Pumps**

**"வூல்ஸிலி" பம்புகள்**

தோட்டக்காரர்களினால் பாராட்டப்படுகின்றன.

நீங்கள் நீர் இறைக்கும் இயந்திரம் வாங்க எண்ணினால் வூல்ஸிலியை நம்பி வாங்குங்கள்.

எல்லா உப-பாகங்களும் எப்பொழுதும் கிடைக்கும்.

ஏகவிநியோகஸ்தர்கள்:

**ஒட்டோஸ் லிமிட்டெட்**

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 496 தந்தி: "ஒட்டோஸ்" யாழ்ப்பாணம்

## வரி விளம்பரம்

### கோப்பாய் பாராளுமன்ற உபதேர்தல்

இன ஒற்றுமையை வளர்ப்பதற்காகவும், தமிழ் பேசும் மக்களிடையே ஒத்துழைப்பை விருத்தி செய்வதற்காகவும், தமிழ் பேசும் மக்களின் நன்மைக்காகவும் உதவுகின்ற நோக்கத்துடன், கோப்பாய் உபதேர்தலில் அபேட்சகராக நின்று, மக்களுக்கு எனது சேவைகளை அர்ப்பணிக்க விரும்புகிறேன்.

கோப்பாய்த் தொகுதி வாக்காளரினதும், இலங்கைப் பொது மக்களினதும் ஆதரவை நான் தாழ்மையுடன் வேண்டிக்கொள்கிறேன்.

சு. சிவசுப்பிரமணியம்
புரொக்டர்,
குமாரசூரியர் வளவு,
கோப்பாய்.

103/2, ஹல்ஸ்டார்ப்,
(கோட்டடி)
கொழும்பு 12. Advt 11

### அறிவித்தல்

புற்று நோயைத் தமிழ் மருந்தால் தடையின்றி மாற்றலாம். உலகினிலே கொடிய ரோகம் புற்று நோய் என்பது எல்லோரும் ஒப்புக்கொள்ளும் உண்மை. இந்நோய் சத்திரசிகிச்சை, ஒளிசிகிச்சை மூலமே குணப்படலாமே தவிர தமிழ் மருந்தினாலல்ல என்ற அபிப்பிராயம் இனி நிலவ இடமில்லை. மீட்க முடியாதெனக் கைவிடப்பட்ட அநேகர் **யோகீஸ்வர ரசம்** என்ற பெயருடைய தமிழ்மருந்தினால் குணமடைந்துள்ளனர். இம்மருந்திற்கு அநேக நற்சாட்சிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. புற்று நோயைப் பற்றி என்னுடன் ஆலோசியுங்கள்.

**பொ. செல்லையா**
ஆயுள்வேத வைத்தியர்
கந்தர்மடம், யாழ்ப்பாணம்

### முக்கிய அறிவித்தல்

உங்கள் வீட்டிற்குத் தேவையான பல சரக்கு சாய்ப்புச் சாமான்களுக்கு எம்மிடம் கலந்தாலோசியுங்கள். எவ்வித முற்பணமும் இன்றி, உங்களுக்குச் சிரமமுமின்றி வீட்டிற்கே பொருட்களைக் கொண்டு வந்து தருகிறோம். விபரங்கட்கு, எம். ஏ. டோசாஜீ அன் கோ, 136, ஆஸ்பத்திரி ரோட், யாழ்ப்பாணம் (போன் 459).

சிறந்த
★ சினிமா சிலைட்
★ விளம்பரச் சித்திரங்கள்
★ புளொக்குகள்
முதலியவற்றிற்கு:-
**கலாநிலையப் பதிப்பகம்**
**சிவன் கோவில் மேலை வீதி,**
**யாழ்ப்பாணம்.**


# ஆசிரியருக்கு கடிதங்கள்

## திரு. சுந்தரலிங்கத்தின் ராஜினுமாவும் தமிழ்த் தலைவர்களின் கடமையும்

தமது பார்லிமெண்ட் ராஜினுமாவைப் பற்றித் திரு. சுந்தரலிங்கம் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கை, தமிழருக்கு வருத்தத்தை உண்டாக்கும் வகையில் அமைந்துள்ளது. அவருடைய இந்த அறிக்கை உண்மையிலேயே ஒளிப்பு மறைப்பு அற்றதாகும். அவர்தம் உறுதியான கருத்துக்களைப் பலர் ஏற்காத விடத்தும் அவருடைய நாட்டுப் பற்றையோ, தேசாபிமானத்தையோ, நேர்மை, விசுவாசம் முதலிய குணங்களையோ யாருமே குறை கூற மாட்டார்கள். ஆனால், இன்று தமிழ் மக்களை வருத்தும் பிரச்சினை என்னவெனில், அவர்களின் முக்கியமான சிக்கல்கள் பற்றி, தமிழ்த் தலைவர்கள் வெவ்வேறு அபிப்பிராயங்கள் கொண்டு, பிரிந்து நிற்பதேயாகும். இதற்கு இந்தக் கட்சியையோ அல்லது அந்தக் கட்சியையோ குற்றம் சொல்லிப் பயனில்லை. ஆனால், கடந்த மூன்று வருட காலமாக, தமிழர் தமது உரிமைகளை ஒவ்வொன்றாக இழந்து வந்ததையும் தமிழ்த் தலைவர்களிடையே எவ்வித ஒற்றுமையுமிருக்கவில்லை யென்பதையும் சரித்திரம் தனது ஏட்டில் பொறித்து வைக்க மறந்து விடாது. தமிழ் மக்களின் நிலைமை நாளுக்கு நாள் மோசமடைந்து வருவதாகக் காலஞ்சென்ற திரு. வன்னியசிங்கம் கூட, தமது கட்சிக் கூட்டமொன்றில் சென்ற ஜூன் மாதம் கூறியிருந்தார்.

1956ஆம் ஆண்டு ஜனவரியில் தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமை அத்தியாவசியமென்ற உணர்ச்சி ஏற்பட்டது. பார்லிமெண்ட், செனேட் இரு சபைகளிலுமுள்ள தமிழ் அங்கத்தவர்கள் எல்லோரும் சேர்ந்து, தமிழ் பேசும் மக்களின் மாநாடு ஒன்றைக் கொழும்பில் கூட்டினர். தமிழ் பேசும் மக்களை எதிர்நோக்கி நின்ற ஆபத்தான சூழ்நிலை பற்றி ஆராயவே இக் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டதாக, அதையொட்டி வெளியிடப்பட்ட அறிக்கையொன்று கூறியது. 25-7-56 இல் நடைபெற்ற இரண்டாவது ஒற்றுமை மாநாட்டில் திரு. ச. பேரின்பநாயகம் கூறியதாவது: 'இத்தகைய ஆபத்தான சூழ்நிலையில், தமிழ் பேசும் மக்கள் தமது வாழ்வுக்காகவே போராட வேண்டியிருக்கும் நேரத்தில், தமது சொந்த விருப்பு வெறுப்புக்கள், கட்சி பேதங்கள் முதலியவற்றை மறந்து, தமது இனத்தின் மானத்திற்காகவும், வாழ்வுக்காகவும் ஒருமித்து நின்று போராட வேண்டும்.' அவர் அப்படிக் கூறியிருந்த போதிலும், தமிழ்த் தலைவர்களிடையே ஒற்றுமை ஏற்படுத்தக் கையாளப்பட்ட முயற்சிகள் யாவும் பயனற்றுப் போய்விட்டன. இதன் விளைவாகத் தமிழ் பேசும் மக்களின் நன்மைக்கு எதிராகப் பல காரியங்கள் நடைபெற்று விட்டன. அவற்றை எதிர்க்கவோ அன்றித் தடுக்கவோ பலம் வாய்ந்த சக்தி எம்மிடம் இல்லை.

இனிமேல் தாம் கையாளவிருக்கும் நடவடிக்கை பற்றித் திரு. சுந்தரலிங்கம் திட்டவட்டமாகக் கூறிவிட்டார். தமிழ் பேசும் மக்கள் இதுவரை எந்தவிதமான நடவடிக்கை கையாள வேண்டுமென்று அழைக்கப்பட்டார்களோ, அதற்கு நேர் மாறானதாகும் இது. அவர்கள் தம் தலைவர்களை வீண் கொள்கை வேற்றுமைகளில் சக்தியை விரயம் செய்ய அனுமதிக்கக் கூடாது. கடந்தகால சம்பவங்களை மனத்தில் நிறுத்தி, புனராலோசனையின் மேல், செயலில் இறங்க வேண்டிய சிறந்த ஒரு முடிவுக்கு வர வேண்டிய காலம் நிச்சயமாக வந்து விட்டது. தமிழ் பேசும் மக்களின் எதிர்காலத்தை நிர்ணயிப்பதற்கு தமிழ்த் தலைவர்கள் எல்லோரும் நட்புணர்ச்சியுடன் கூடிக் கலந்தாலோசிப்பதன் மூலமாகவே இதனைச் செய்ய முடியும். இதனைச் செய்வதில் இப்போது தவறினால் இனி எப்போதாவது இத்துறையில் வெற்றி பெறப் போவதில்லை.

**கே. கனகரத்தினம்**
வட்டுக்கோட்டை

---

## இந்து பல்கலைக் கழகம் உடனே நிறுவப்பட வேண்டும்

இலங்கைக்கு இந்துப்பல்கலைக்கழகம் ஒன்றினை உடனே நிறுவுதல் மிக அவசியமாகும். இந்துக்கலாச்சாரத்தை அடிப்படையாகக் கொண்டு இக்காலத் தேவைகளுக்கும் நாட்டு மக்களின் விருப்புக்கும் ஏற்ற கல்வியைப் பரப்புவதற்கான ஒரு பல்கலைக் கழகம் அமைவது இந்துக்களுக்கு மாத்திரமன்றி தமிழினத்தின் முன்னேற்றத்துக்கும் இன்றியமையாததாகும். ஏற்கனவே இரு பௌத்த பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட்டுள்ளன. மூன்றாவதை நிறுவுவதற்கான முயற்சிகளும் நடைபெறுகின்றன. கத்தோலிக்கப் பல்கலைக்கழகம் ஒன்றினை அமைப்பதற்கான ஒழுங்குகளும் நடைபெற்று வருகின்றன. தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கத்தினரின் தமிழ்ப்பல்கலைக் கழகமும் விரைவில் நிறைவேறும்.

இந்துப் பல்கலைக்கழகமானது இங்கு கூறப்பட்ட எந்தப் பல்கலைக்கழகத்துக்கும் முரணானதாக இருக்கமாட்டாது. அறிவு வளர்ச்சியும் பொதுநல விருத்தியுமே அதன் குறிக்கோளாகும். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, பரமேஸ்வரக் கல்லூரி அதிகார சபையினர், சைவவித்தியாவிருத்திச் சங்கத்தார், ஸ்ரீ ராமகிருஷ்ணமடத்தார், யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையார், கொழும்பு விவேகானந்த சபையார் ஆகியோர் அனைவரும் ஒரு முகமாக இந்துப் பல்கலைக்கழகத் திட்டம் ஒன்றினைச் சமர்ப்பிப்பார்கள் என நம்பப்படுகின்றது. இந்துக்கள் அனைவரும் ஒற்றுமையுடன் சமர்ப்பிக்கும் இத்தகையதொரு திட்டத்தைப் பார்லிமெண்டும், அரசினரும், பிறமதத்தினரும் வரவேற்று அது உருவாவதற்கான உதவிகளைச் செய்வார்கள் என்பதில் சந்தேகமில்லை.

எஸ். சிவசுப்பிரமணியம்,
கோட்டடித்தெரு,
கொழும்பு 12.

# மக்களுக்கு சுகாதார வசதிகள்

## அனுராதபுர வைத்திய அதிகாரிகள் முயற்சி

— நமது நிருபர் —

அனுராதபுரம்

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதற்கிணங்க நாடெங்கும் சுகாதாரக் கல்வியைப் போதிக்க அரசாங்கம் தீர்மானித்து வருகையில் அனுராதபுர வைத்திய அதிகாரிகள் பெரும் முயற்சி செய்து, பிற்பட்ட பகுதியினராகிய அனுராதபுர மக்களுக்கு ஆரோக்கிய வசதிகளைச் செய்து தர முயன்று வருகின்றனர்.

நெஞ்சு நோய் ஆஸ்பத்திரியில் இலவசமாக எக்ஸ்—ரே பரிசோதனை செய்து வருவதை இங்கு குறிப்பிடலாம். பொதுவாக டக்டர் ஒருவரின் உத்தரவுச் சீட்டுப் பெற்றால் தான் எக்ஸ்—ரே எடுக்க முடியும் என்ற விதி பல இடங்களில் இருப்பதாகவும், ஆனால் அனுராதபுரத்தில் அந்த விதி கட்டாயமாக அனுசரிக்கப்படுவதில்லை என்றும் தெரிகிறது.

எவரேனும் எப்போதும் போய் இந்த நெஞ்சு நோய் வைத்தியசாலையில் எக்ஸ்—ரே எடுத்துத் தமது உடல் நிலையைச் சோதித்துப் பார்க்கலாம் என்று தெரிகிறது. இதற்கும் ஏராளமான முறையில் பிரசாரங்களைச் செய்து வருகின்றனர் நெஞ்சு நோய் நிலையத்தார்.

### திருமலை சிவானந்தா தபோவனத்திலும்

திருக்கோணமலை சிவானந்தா தபோவனத்திலும் சுகாதாரக் கல்வியைப் போதிக்க சகல ஏற்பாடுகளையும் அனுராதபுரத்தைச் சேர்ந்த சுகாதாரக் கல்வி அதிகாரி திரு. எம். கதிரவேலு செய்துள்ளார்.

அவர் கூறியதாவது: "காலியிலுள்ள நீதிபதி திரு. கிருஷ்ணதாசனின் முன்னோர்கள் வைத்து விட்டுப் போன பெருஞ் சொத்திலிருந்து அவரது சகோதரி மாதாஜி சிவானந்தா சச்சிதானந்தா அந்த சிவானந்தா தபோவனத்தை நடாத்தி வருகின்றார். அங்குள்ள குழந்தைகள் சமயக் கல்வியும் ஒழுக்கக் கல்வியும் பெற்று வந்த போதிலும் சுகாதாரக் கல்வியைப் பற்றி அறியாதிருந்தார்கள். நான் மாதாஜி அவர்களுடன் கலந்து ஆலோசித்து மாதம் இரு முறை அந்த அனைத்துச் சிறுவர்களுக்கு சுகாதாரக் கல்விப் பயிற்சி யளிக்க முடிவு செய்துள்ளேன்!"

இந்த முயற்சிக்குத் திருக்கோணமலை சுகாதார அதிகாரி திரு. நவநாயகமும் உதவி புரிவார் என்றும் தெரிகிறது.

### நவராத்திரி விழா

வழக்கம் போல இவ்வாண்டும் நவராத்திரி விழாவை அனுராதபுரம் விவேகானந்தா சபையினரும் விவேகானந்தா வித்தியாலயத்தினரும் கொண்டாடினார்கள்.

சபையினர் கொண்டாட்டத்தில் கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் உபதலைவர் சுவாமி பிரேமாத்மானந்தாவும் கலந்து கொண்டார். சைவப்புலவர் திரு. சி. அருளம்பலம் "நவராத்திரி பூசை மகிமை" என்ற பொருள் பற்றியும், சென்னை இராமகிருஷ்ண மிஷன் உயர்தர பாடசாலைத் தமிழ்ப் பண்டிதர் திரு. எம். வி. இராகவன் "முருகன்" என்பது பற்றியும் சொற்பொழிவாற்றினர்கள். உதவிக் காரியதரிசி திரு. சி. சின்னத்துரை நன்றியுரை கூறினார்.

விவேகானந்த வித்தியாலய மாணவர்களும் மாணவியரும் சனிக்கிழமை சரஸ்வதி பூசையையும் ஞாயிறன்று விஜயதசமியையும் கொண்டாடினார்கள்.

---

# வவனியாவில் அரிய திருநாள்

## நூல் நிலையத் திறப்புவிழா

வவனியா நகர மக்களுக்கு, சிறப்பாக படிக்கும் வாலிபர்களுக்கு, 8-10-59 வியாழக்கிழமை ஓர் அரிய திருநாளேயாகும். சில ஆண்டுகளாகப் பட்டின சங்கத் தலைவர் திரு. எஸ். சுப்பிரமணியம் பட்டின சங்கத்தினர் சார்பாக ஒரு நூல் நிலையத்தை உருவாக்க வேண்டுமென ஆசைப்பட்டார். அவர் ஆசை இன்று பூர்த்தியடைந்தது.

ஏறத்தாழ 3000 ரூபாய் முதலிட்டு இனிய தமிழ் நூல்களை வரவழைத்திருந்தனர். முதலியார் திரு. செ. சின்னத்தம்பி நூல் நிலையத்தைத் திறந்து வைத்தார். பட்டின சங்க மண்டபத்தில் ஒரு புறம் நூல் நிலையமாகக் காட்சியளிக்கிறது. வருங்காலத்தில் தனிப்பட்ட முறையில் அழகிய கட்டடம் ஒன்று நூல் நிலையமாகத் திகழும் என்ற உறுதி, பட்டின சங்கத் தலைவர் கூற்றால் நன்கு உணர முடிந்தது.

### பெற்றதாயும் பொன்னாடும்

பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் என்றால் எத்தமிழன் இதயமும் பூரிப்படையாமல் இருக்கவே முடியாது.

படிப்பு வாசனையற்ற மக்களை வழிப்படுத்த, ஆயாசத்தைப் போக்க - மனநிறைவை ஆக்க பண்டைத்தமிழர் நாடகத்தைக் கண்ணெனக் காத்துவந்தனர். பின் அது தெருக் கூத்தாக மாறியது. இன்று விஞ்ஞான விந்தைகளால் பேசும் படங்களாகப் பேர் மாறி - நாடகத்தின் மணமே இல்லாதவாறு மாறி வருகிறது. இந்த நிலையில் மட்டக்களப்புத் தமிழகத்து இளம் எழுத்தாளர் திரு. எஸ். இராசதுரை அவர்களின் உணர்ச்சி வேகத்தால் உதயமான பெற்றதாயும் பொன்னாடும் என்ற நாடகம், வவனியா தி. மு. கட்சியினரால் 10-10-59 இல் வவனியா நகர மண்டபத்தில் நடித்துக் காட்டப்பட்டது. நவரசங்களும் நாடகத்திற்கு உயிர்போல்வன— தன்மறப்போடு தன்னம்பிக்கையுடன், உண்மையான ஊக்கத்துடன் ஆற்றும் எப்பணியும் வீண் போவதில்லை. இங்கு நாடகம் நல்ல முறையில் இரசிகர்களின் பாராட்டுக்கு இடமளிக்கவில்லை. நன்கு பயிற்சியடையாத பெருங் குறையைத் தான் மக்கள் காண முடிந்தது.

—ந. நி.

### மரண அறிவித்தல்

வண்ணார்பண்ணை தமிழ், சமஸ்கிருத பண்டிதர் பிரமஸ்ரீ ஆ. சண்முகரத்தினையர் அவர்களின் சகோதரியும், ஆசிரியர் பிரமஸ்ரீ ச. கணேசையரின் மாமியாரும் ஆகிய யோகம்மா 13-10-59 அன்று தமது 85-ம் வயதில் தமது இல்லத்தில் காலமானார். இவர் கோப்பாய் சாமிநாதக்குருக்கள் சதாசிவ ஐயரின் கைம்பெண் ஆவர். ஈமக்கிரியைகள் அடுத்த நாள்வில்லூன்றியில் பிரமஸ்ரீ கணேசையரால் செய்யப்பட்டன.

12

**அரசியல் விழிப்புப் பெற்றுவிட்டாலும் வறுமை, நோய் காரணமாக அநேக ஆசிய-ஆபிரிக்க நாடுகள் தமது பரிபூரண பக்குவமடைய முடியாது தத்தளிக்கின்றன. கல்வியின்மை, வேலையின்மை, பொருளாதார முட்டுக்கட்டை போன்ற பல தொல்லைகளினல் பின்தங்கிய நாடுகள் தமது சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொள்ள முடியாதிருக்கின்றன.**

# ஜனநாயகத்துக்கு ஆபத்து மிகுந்த காலம்

## ஆசிய - ஆபிரிக்க நாடுகளை வாட்டும் வறுமை

### உலக அரசியலும் தனி மனிதனும

— கலைநாதன் —

ருஷியாவுக்குப் பதில் சொல்லக்கூடிய நிலையில் இன்று இருப்பது ஐக்கிய அமெரிக்கா ஒன்றுதான். அமெரிக்காவின் அரசியல்—பொருளாதார வளர்ச்சி மிக நீண்ட வரலாறுடையதாகும். தனி மனித உரிமைக்கும் பொருளுடைமைக்கும் ஊறுவிளையாத வகையில்; ஜனநாயக அடிப்படையில் ஐக்கிய அமெரிக்கா உருவாகியிருக்கிறது. இன்று உலகத்தில் தனிமனித உரிமைக்கும் ஜனநாயகத்திற்கும் உண்மையான பாதுகாவலன் என்று அது தன்னைப் பறைசாற்றிக்கொள்ளுகிறது.

மாறுபட்ட அரசியற் கொள்கைகளையுடைய இவ்விரு நாடுகளும் தமது செல்வாக்கைப் பரப்பப் பெரிதும் முயன்று வருகின்றன. பொருளாதார வளர்ச்சி குன்றிய நாடுகளுக்குப் பண உதவி அளிப்பதன் மூலம் இவற்றின் பலம் நாளொருவண்ணமாக வளருகின்றது. இரண்டு நாடுகளும் போட்டி போட்டுக்கொண்டு பிரசாரத்தில் ஈடுபடுகின்றன. ஆனல் உலக சமாதானத்தைப் பற்றி ஆலோசிக்கும்போது மட்டும் கொஞ்சமும் விட்டுக்கொடுக்காதுமோதிக் கொள்ளுகின்றன. ஆகவே, எதிர்கால உலகின் தலைவிதி இவ் வல்லரசுகளின் போக்கில் தங்கியிருக்கிறதெனின் அது மிகையாகாது. இத்தகைய பெரும் பொறுப்பினையுடைய ருஷியாவும், அமெரிக்காவும் சிலவேளைகளில் நடந்துகொள்ளும் முறையைப் பார்த்தால் எதிர்காலத்தைப்பற்றி நம்பிக்கை ஏற்பட வழியைக் காணேம்.

**வல்லரசுகளும் பின்தங்கிய நாடுகளும்**

ஐக்கிய அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், ருஷியா முதலிய வல்லரசுகள் இந்தியா, பாகிஸ்தான் போன்ற பின்தங்கிய நாடுகளைப் பார்க்கும் முறையில் ஓரளவு மாற்றம் ஏற்பட்டு வருகிறதென்றாலும் உண்மையான நேசமனப்பான்மை இன்னும் வளரவில்லை. பொருளாதார—அரசியல் வாழ்வில் பின்தங்கிய நாடுகள் முன்போல இனிமேலும் வல்லரசுகளுக்கு "வால்பிடிக்கும்" என்ற எண்ணத்தை மறந்துவிடவேண்டும். உலகெங்கும் அரசியல் விழிப்பு ஏற்பட்டிருக்கும் இந்நாளில் அடிமைத்தனத்தை வளர்க்கும் எந்தக் கொள்கையும் நிலைபெறமாட்டாது என்பது உறுதி.

பொருளாதாரத்தில் பின்தங்கிய நாடுகளுக்குப் பொருளுதவி அளித்து அவற்றின் நிலையை உயர்த்துவது மிக மிக அவசியமாகும். வறுமையும் வேலையில்லாமை, நோய் போன்ற கொடுமைகளும் எந்த நாட்டிலிருந்தாலும் அதனல் உலக சமாதானத்துக்குப் பங்கமேற்படவேசெய்யும். இந்த அடிப்படை உண்மையைஒப்புக் கொண்டுள்ள ஐக்கிய நாடுகள் சங்கம் பெருமளவில் பலவித உதவிகளைச் செய்துவருகிறது. ஆனல் வல்லரசுகள் அளித்து வரும் உதவிகளைப் பொறுத்த வரையில் இந்த மலர்ச்சி இன்னமும் ஏற்படவே இல்லை.

அரசியல் விழிப்புப் பெற்றுவிட்டாலும் வறுமை, நோய் காரணமாக அனேக ஆசிய—ஆபிரிக்க நாடுகள் தமது பரிபூரண பக்குவமடைய முடியாது தத்தளிக்கின்றன. கல்வியின்மை, வேலையின்மை, பொருளாதார முட்டுக்கட்டை போன்ற பல தொல்லைகளினல் பின்தங்கிய நாடுகள் தமது சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொள்ள முடியாதிருக்கின்றன். இவற்றிற்குப் பொருளுதவி அளித்து அரசியல்—பொருளாதார—சமூக—கல்வித் துறைகளில் முன்னேற வழிசெய்ய வேண்டும். இந் நாடுகளின் நிலை உரிய முறையில் சீர்பெறுமானல் பழமை மிகுந்த ஆசிய கலாசாரத்தினை உலகம் பகிர்ந்துகொண்டு சீர்பெற வழி ஏற்படும் என்று பேராசிரியர் டபிள்யு. பிரிட்மன் ஓரிடத்தில் குறிப்பிடுகிருர்கள்.

**பின்தங்கிய நாடுகளும் ஜனநாயகமும்**

பின்தங்கிய ஆசிய-ஆபிரிக்க நாடுகளில் சமீபகாலத்தில்ஏற்பட்டுவரும்மாறுதலைக்கவனிக்கும் போது ஜனநாயகத்தின் எதிர் காலத்தைப்பற்றி நம்பிக்கை ஏற்படவழியைக்காணேம். வறுமையும் அடிமைத்தனமும் மிகுந்த நாட்டில் பொதுவுடைமைப் பொருளாதாரமே அனேகமாக விரும்பப்படுகிறது

(13ஆம் பக்கம் பார்க்க)




# செல்லமுத்தூஸ்

## தீபாவளி சிறப்பு விற்பனை

பெருந்தொகையான கையிருப்பு!

அத்தனையும் கவர்ச்சிமிக்க புதிய டிசைன்கள்

### பட்டுச் சேலைகள்

கத்தான் பட்டுச் சேலைகள், மாறு கரைகளில் (கன்ட்ராஸ்ட் பார்டர்) பூப்போன்ற மென்மை, புதினமான டிசைன்களில்

காஞ்சீபுரம், ஆரணி, மணிபுரி, பங்களூர், காஷ்மீர் சேலைகள், சோளிகள், பாவாடைகள்.

### நூல்சேலைகள்

ஹைதராபாத் டெக்கா, கோவை டெக்கா, மணிபுரி டெக்கா, அசல் காஞ்சீபுரம், சேலம், மதுரை, உறையூர் நூல் சேலைகள், சோளிகள், பாவாடைகள், பம்பாய் பிரிண்டட் வாயில், கட்டாவ் வாயில், பர்க்கூசன் வாயில், மதுரை ஜுன்னடி வாயில் சேலைகள்.

### வேஷ்டி சால்வைகள்

சேலம் பட்டு நூல் வேஷ்டி, சால்வைகள், சிறுவர்களுக்கான பஸ்கார வேஷ்டி சால்வைகள், 1703, 22X22, 901 குழல் மல்பீஸ் வேஷ்டிகள், கட்டாவ், அம்பிகா, அரவிந்த் வாயில் வேஷ்டி சால்வைகள்.

### இதர துணி வகைகள்

டுப்ரால்கோ, ரறண்டுயில், டூட்டால் Fபைன்லான் வெம்கோ, டோர்காஸ், ஹொறக்சஸ் சீத்தைகள், கிளேஸ்ட் கொட்டன் துணிகள், கிராப்டன் பேர்க்குசன் சில்க் ரொபியா வாயில், பூப்போட்ட நைலான் துணிகள், பிரஞ்சு நைலோன், ரிசூ பல டிசைன்களில்.

★ ஹென்ட்லஸ் ரெடிமேட் ஆடைகள்

★ பரிசளிப்புக்குரிய லேஞ்சி பெட்டிகள்

★ சிறு பையன்களுக்கான கவ்போய் உடைகள்

மற்றும் ஏராளமான புடவை ரகங்கள்

**தீபாவளி விற்பனைக்காக வரவழைத்திருக்கிறேம்.**

இன்றே நேரில் வந்து பார்வையிட்டு வேண்டியவற்றைத் தெரிவுசெய்யுங்கள்.

## செல்லமுத்தூஸ்,

130, இரண்டாம் குறுக்குத் தெரு, கொழும்பு-11 Phone: 4143.

கிளை: 64, மெயின் வீதி, ஹட்டன்.


# இலங்கையை வளஞ் செய்தோர் இந்தியரே

## அடுத்த தேர்தலில் இவர்களின் பிரச்சினை

### விவசாய, வர்த்தக அபிவிருத்தியே வறுமையை நீக்கும்

நாட்டு நிலைமையை விளக்குகின்ருர் செனேட்டர் நடேசன்

**விவசாய அபிவிருத்தி, வர்த்தக அபிவிருத்தி முதலிய வற்ருல்தான் நாட்டின் வறுமையை ஒழித்துக் கட்டலாம் என்பதை செனேட் சபையில் செனேட்டர் நடேசன் நன்கு விளக்கியுள்ளார். இது அவருடைய பேச்சின் மூன்ருவது பகுதியாகும்.**

இந்தியத் தோட்டத் தொழிலாளர் சம்பந்தப்பட்ட சாதிப் பிரச்சினையை எடுத்துக்கொள்வோம். இந்தியர்கள் எல்லோரையும் கப்பலிலேற்றிக் கடலில் தள்ளி விடவேண்டுமென்று சிலர் கூறுவதை இச்சபையில் இருப்பவர் எவரும் ஒப்புக்கொள்வாரென்று நான்நினைக்கவில்லை.

இலங்கையில் அந்நியர் ஆட்சி ஏற்படு முன், இந்தியாவிலிருந்து ஆயிரக் கணக்கானவர்கள் இலங்கையின் தென் பகுதியிலும் பிற பகுதிகளிலும் குடியேறி, அவ்வப் பகுதிகளிலுள்ள பண்பாட்டையும் பழக்க வழக்கங்களையும் மேற்கொண்டார்கள். ஈற்றில் இவர்கள் எல்லோரும் மாறுபாடின்றி கலக்கப்பட்டுவிட்டனர். அந்நியர் ஆட்சியில் இந்த நல்ல காரியம் தடைபட்டுவிட்டது. பிரிட்டிஷார் தோட்ட வேலைக்கென்று ஆட்களைக் கொண்டு வந்து மலை நாடுகளில் குடியேற்றி அவர்களைச் சிறைவாசிகள் போல் வாழச் செய்தனர்.

தனித்து வாழ்ந்த இத்தோட்டக்காரருக்கு பிற இலங்கை வாசிகளுடன் கலந்து, கொண்டாடும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இலங்கை வாசிகளை வறுமை பிடித்து வாட்டியவுடனே அவர்கள் இந்த அப்பாவி இந்தியர்மீது எல்லாப் பழியையும் போட்டார்கள்.

**அடுத்த தேர்தலில்**

அடுத்த பொதுத் தேர்தலில் இந்த இந்தியப் பிரச்சினைதான் கிளப்பப்படப் போகிறதென்பதை அறிந்துதான் நான் இதைப்பற்றிக் குறிப்பிடுகிறேன். இப்பிரச்சினையைத்தீர்ப்பதற்கும் குறுக்கு வழி எதுவுமில்லை. இந்தியர்கள் எல்லோரையும் ஒரேயடியாகக் கலைத்துவிடுவதற்கு இந்திய அரசாங்கம் ஒத்துவராதென்பதை சில அரசியல் வாதிகள் உணரவேண்டும். இதுவுமன்றி, இதனல் இலங்கையின் பொருளாதாரத்துக்குத்தான் நஷ்டமேற்படும். காடுகளைவெட்டி, தெருக்கள் போட்டு எமது தேசிய வாழ்வைச் சிறக்கச் செய்தவர்கள் இந்தியர்கள். அவர்களுடைய சந்ததியாரில் பலர் இலங்கையிலேயே பிறந்து வளர்ந்தவர்கள். ஆகையால் இதற்கென்ன பரிகாரமுண்டு?

இவர்களைக் கூடிய சீக்கிரத்தில் பிற இலங்கை மக்களுடன் புழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். சகல விதமான தடைகளும் நீக்கப்பட வேண்டும். இதனல் இந் நாட்டில் வாழும் எல்லோரும் ஒன்று கலந்து, எல்லோருமே பயன் பெறுவதற்கு வழியுண்டு. நாளடைவில் இந்தியப் பிரச்சினை என்பது மறைந்தொழிந்து விடும்.

கிராம மக்களுக்குப் போதிய வேலைகளைக் கொடுத்து அவர்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்தி, தோட்டத்தொழிலாளர்களுக்குப் பாரபட்சம் காட்டுவதை நிறுத்திவிட்டால் இந்தப் பிரச்சினையும் ஒழிந்துவிடும். ஆனல் இதையும் 24மணி நேரத்தில் செய்ய முடியாது.

**சமயப் பிரச்சினை**

அடுத்தது சமயப் பிரச்சினை. மொழியும் சாதியும் வாக்குப் பிடிக்கும் கருவிகளாக உபயோகிக்கப்பட்டு தேய்ந்துவிட்டபின், சமயக் கூப்பாட்டை எழுப்புவதற்கு எத்தனையோ பேர் காத்துக்கொண்டிருக்கிருர்கள். கத்தோலிக்க மத குருவோ, ஹிந்து மத குருவோ, பெளத்தமத குருவோ—எந்தக் குருவானவராவது அரசியலில் தலையிட விடப்படாதென்பது எனது நம்பிக்கை. சமயம் மனிதனுடைய ஆத்மீக வளர்ச்சிக்கேற்பட்டது- அரசியலுக்கல்ல. உலகில் எந்த நாடாவது சமய வாதிகளால் ஆளப்படவில்லை. இந்த விஞ்ஞான யுகத்தில், கோயிலும் மதமும் எங்கள் வறுமையைப் போக்கடிக்க முடியாது. தற்சமயம் சில அரசியல் வாதிகள் கத்தோலிக்க சமயத்தையும் அதன் குருமாரையும் தாக்கி வருகிருர்கள்.

(13ஆம் பக்கம் பார்க்க)

தொடர் கதை

# துறைக்காரன்

வ. அ. இராசரத்தினம்

## 6. வியாபாரம்

சுருட்டுக்காரச் செல்லையா அண்ணனைத் தெரியாதவர்கள் கொட்டியாபுரம் தம்பலகாமப் பற்றுக்களில் இருக்க முடியாது. அவர் யாழ்ப்பாணத்துக் காரைதீவிலிருந்து இந்தப் பக்கம் எப்போது வந்தார் என்று திட்டமாகச் செல்லையா அண்ணனுக்கே தெரியாது. இடையிடையே யாழ்ப்பாணம் போய்த்தான் இருக்கிறார். காரைதீவு, காரைநகராகி விட்டதை யெல்லாம் தெரிந்துதான் இருக்கிறார். ஏன் காரைதீவு ஆகிய காரைநகரிலே அவருக்கு மனைவி மக்கள், வீடு வாசல் எல்லாம் இருக்கிறதாம்! ஆனாலும் அவர் சீவியத்தின் பெரும் பகுதி இங்கேதான் கழிந்து விடுகிறது. அவர் எப்போது, எந்த ஊரில் நிற்கிறார் என்பது எவருக்குமே தெரியாது. அவர் நிற்குமிடத்திற்கு எப்படிச் சுருட்டுக்கள் வருகின்றன என்பதும் அதிகமாக எவருக்கும் தெரியாது. ஆனால் என்றைக்கும் எவருக்குமே அவர் சுருட்டுக் கையிருப்பு இல்லை என்று சொல்லியது கிடையாது.

காடு கரம்பெல்லாம் நடையிலேயே திரிவதால், குதிக்கால்கள் பித்தம் வெடித்துப் பிளந்து போயிருக்கும். குதிக்காலுக்குச் சற்று மேலே, புழுதி படிந்து நிற்கும் வேஷ்டிக் கரைக்கட்டு, மேலே போகப்போக அரைமட்டும் வெளுப்பேறிக் கொண்டுதான் போகும். ஆனால் நடக்கத் தொடங்கினால் வேஷ்டியை மடித்துத்தான் கட்டியிருப்பார். மடி தொய்ந்து, குழந்தைப் பிள்ளையின் தலையணைவான பர்சைத் தாங்கிக் கொள்ளும் தொட்டில் மாதிரி அரைக்கு மேலே முன்பக்கமாகத் தொங்கிக் கொண்டிருக்கும் பண வண்டிதான். வயிற்றுக்குமேலே பரந்த மார்பெல்லாம் மயிர் அடர்ந்திருக்கும். சிறிய தலைதான் என்றாலும், அதற்குள்ளே இரண்டு பற்றுக்களிலுமுள்ள அத்தனை கடைகளினதும் கொடுக்கல் வாங்கற் கணக்குகள் எழுதாக் கிளவியாகவே அடங்கியிருக்கப் போதுமானது!

"வாங்கண்ணே இருங்க" என்று எதிர் கொண்டழைத்தான் வேலாயுதம்.

"எப்படித் தம்பி சுகம்?" என்று குசலம் விசாரித்துக் கொண்டே, தலைச் சுமையை இறக்கி வைத்துத் துண்டை எடுத்து அரைக்குமேல் உடம்பு முழுவதையுமே துடைத்துக் கொண்டார் செல்லையா.

செல்லையா அண்ணனுக்கு அவசரமேயில்லை. பேசத் தொடங்கினார் என்றால் வியாபாரத்தைக் கூட மறந்து பேச ஆரம்பித்து விடுவார். ஆனால் அவருடைய வியாபாரத்துக்குப் பேச்சும் ஒரு மூலதனந்தான் என்பது வேலாயுதத்துக்குத் தெரியாது. 'இடங் கொடுத்தால் மடம் பிடுங்குவார் யாழ்ப்பாணத்தார்' என்று மட்டக்களப்பு வாத்தியார் ஒருவர் சொன்னதை நம்புவதற்கும் வேலாயுதம் தயாராக இல்லை.

செல்லையா அண்ணன் நடக்கிறார். நாள் முழுக்க நடக்கிறார். ஒரு கட்டுச் சுருட்டு விற்பதற்காக ஒரு கட்டை நடக்கவும் அவர் ஆயத்தமாக இருக்கிறார். தன் கைப் பணத்தை முதலாகப் போட்டு, அதைக் கடைக்காரனுக்கு நிலுவையாக விடவும் அவர் தயாராக இருக்கிறார். மத்தியானச் சாப்பாடு எங்கே கிடைக்கும் என்று அவருக்கே தெரியாது. இராப் படுக்கையைப் பற்றி அவருக்குக் கவலையில்லை. இந்தப் பிராந்தியத்தின் ஒவ்வொரு குக்கிராமத்திலும் அவருக்கு நம்பிக்கையான மனிதர்கள் உண்டு. மடியில் இருக்கும் காசை அவரிடம் கொடுத்துப் பத்திரப் படுத்தி விட்டால் திண்ணையிலோ, தெருவிலோ எங்கேயாவது கட்டையைக் கிடத்தி எழுந்து விட்டு, விடிந்ததும் நடக்கத் தொடங்கிவிடுவார். எப்போவாவது ஒரு சனிக்கிழமை குணமாக முழுகிச் சாப்பிட வேண்டும் என்ற எண்ணம் வந்தாலன்றிச் சாப்பாட்டிற்காக அவர் எவரையுமே கடமைப் படுத்தியது கிடையாது. இன்று இராப்பொழுதைத் துறையடியிற் தான் கழிக்க வேண்டும் என்று ஏற்பட்டு விட்டால், கங்கைத் தண்ணீரையே வயிறு முட்டக் குடித்து விட்டுப் படுக்க அவரால் முடியும்.

இப்படியாகக் கஷ்ட ஜீவனம் நடத்தும் ஒரு மனிதர் மேல் இரக்கப்படாமல் எரிச்சற் படுவதற்கென்ன இருக்கிறது? மட்டக்களப்பு வாத்தியார் படித்தவராக இருந்தும் அவருக்கு இது தெரியவில்லையே! ஆமாம்; அறிவு கூடக் கூட இரக்கம் குறைந்து குறைந்து மனிதத் தன்மையே இல்லாமற் போய்விடுகிறது!

"என்னண்ணே! கனநாளா இந்தப் பக்கமே யில்லையே!" என்று கேட்டான் வேலாயுதம்.

"ஊருக்குப் போயிருந்தேன் தம்பி. தைமாசத்து நாளிலே மூத்த மகளின்ர கலியாணம் நடந்திச்சு." என்றார் செல்லையா அண்ணன்.

"மூன்று வருஷமாச் சொல்லிக்கொண்டிருந்தீங்க. இந்த வருஷந்தான் முடிஞ்சுதாக்கும். எல்லாத்துக்கும் நேரமும் காலமும் வரவேணுமே," என்றான் வேலாயுதம்.

"என்னப்பா நேரமும் காலமும்? கையில் காசு மட்டும் இருந்தா, இப்பத்தைப் பொடிகளை மாடு வாங்கினாப்போல வாங்கி விடலாமே! வெள்ளம் மட்டும் வராம இருந்தா மூணும் வருஷமே கல்யாணம் நடந்திருக்கும்" என்று அலுத்துக் கொண்டார் செல்லையா.

செயற்கரிய செயல் ஒன்றைச் செய்த பின்னால் ஏற்பட்ட அலுப்பும், ஆயாசமும் அவர் பேச்சிலே தொக்கிநின்றன. அவரது அலுப்பைக் கண்ட வேலாயுதம் எண்ணினான். ஆண்டவன் ஆணையும் பெண்ணையுந்தான் உலகத்திற் படைத்திருக்கிறான். உலகில் ஒவ்வொரு பெண்ணுக்கும் ஒவ்வொரு ஆண் பிறந்தேயிருப்பான். ஆனாலும் ஒரு பெண்ணுக்குக் கல்யாணம் முடித்து வைக்கிறது என்றால் அதிலே எவ்வளவு கஷ்டம்? எவ்வளவு சிரமம்?

கொஞ்சக் காலத்துக்கு முன்னால் கங்கைக்கரையிலே சில குறவர்கள் வந்தார்கள். நாளைக்கு என்று அவர்கள் வாழ்க்கையிற் கவலைப்பட்டதேயில்லை. பகலில் எங்கெங்கெல்லாமோ திரிவார்கள். கங்கையோரத்துப் பிரம்புகளால் தாங்கள் முடைந்த கூடைகளைச் சுமந்து விற்பார்கள். சிலர் கைரேகை பார்த்துக் குறிசொல்வார்கள். மதியந்திரும்பியதும் அந்த மரத்தின் கீழே வந்து கூடி விடுவார்கள். அதன்பிறகுதான் சமையல் நடக்கும். பின்னாற் சாப்பாடு படுக்கை எல்லாம் மரத்திற்குக் கீழ்தான்!

அவர்கட்கு என்று சொந்தமாக வீடுகிடையாது. சொத்து என்று சொல்லிக் கொள்ளப் பிரமாதமாக ஏதுமே இல்லை. சொத்தைச் சேர்க்க வேண்டுமே என்று அவர்கள் கவலைப் பட்டதேயில்லை.

ஒருநாளிரவு பாட்டுங் கூத்துமாக இருந்தது. தன் குடிலிற் சோம்பிக் கிடந்த வேலாயுதம் என்ன நடக்கிறது என்று முஸ்பாத்தியாகப் போய்ப் பார்த்தான். அங்கே ஒரு பெண்ணுக்கும் இளைஞனுக்கும் கல்யாணம் நடந்து கொண்டிருந்தது.

அவளுக்கும் சொத்தில்லை. அவனுக்கும் ஒன்றும் கிடையாது. ஆகவே அவர்களுக்குள் எந்தவிதமான தகராறுமின்றித் திருமணம் நடந்துவிட்டது.

ஆனால் தனக்கென்று, தன் பிற்காலத்திற்கென்று, தன் சந்ததிக்கென்று உடம்புமுறிய உழைத்துச் சொத்தைச் சேகரித்து வைக்கும் நாகரிக மனிதன், ஒரு கல்யாணத்தைத் தன் பிள்ளைகட்குச் செய்து வைப்பதானால் எத்தனை சங்கடம்? உலகில் மனிதன் தனக்கென்று சொத்தைக் தேடிக்கொண்ட நாட்தொடக்கந்தான் கல்யாணமும் ஒரு வியாபாரமாக மாறி விட்டது என்று வேலாயுதத்திற்குத் தோன்றிற்று.

என்றாலும் சில கிராமங்களில், அதுவும் எழுத்தறிவு அதிகம் இல்லாத கிராமங்களில் நல்ல காலமாகக் கல்யாணம் இன்னமும் வியாபாரமாகி விடவில்லை! வயது வந்த பெண்ணுக்கும் ஆணுக்கும் விரைவாகவே கல்யாணம் நடந்து விடுகிறது. ஆனால் யாழ்ப்பாணத்திலே அதிகம் படித்தவர்கள் இருக்கிறார்களாம். பேராசிரியர் மயில்வாகனத்தைப் போலப் படித்தவர்கள் நிறைய இருக்கிறார்களாம். நிறையச் சீதனம் வாங்கலாம் என்ற எண்ணத்தோடேதான் படிக்கிறார்களாம். இந்த அதிகப் படிப்பால் அங்கே ஒவ்வொரு பெண்ணுக்கும் சீதனம் கொடுத்தே ஆக வேண்டுமாம். சீதனம் இல்லாத பெண் அங்கே கல்யாணம் முடிக்கவே ஏலாதாம். சச்சச்சா! இந்தக் குறவர்கட்குள்ள மன நிம்மதியும், ஆனந்தமும், அதிகம் படித்த மனிதர் கட்குக் கிடையாது. அநியாயந்தான்!

நல்லகாலமாக என்னுடைய மருமகன் முருகையா அதிகம் படிக்கவில்லை. அவன் படித்திருந்தால் அக்கா அவனுக்குச் சீதனம் கேட்டு உயிரை வாங்கிவிடுவா. அத்தானுக்குப் போனமுறை வெள்ளாண்மை செய்கையில் மிச்சமில்லை. இந்த முறைக் கோடை விளைச்சலாவது நன்றாக விளைந்தால் மூத்த மகள் செல்லம்மாவிற்கும் முருகையாவிற்கும் கல்யாணத்தை நடத்திவிட வேண்டும்!

வேலாயுதம் தீர்மானித்துக் கொண்டவனாக "ஏனண்ணே போவோமா?" என்றான் செல்லையாவிடம்.

"போவோமே! இப்ப என்ன அவசரம்? கிண்ணியாவுக்குத் தானே போறேன். என்றாலும் வெய்யிலுக்கு முன்னே போய் விட்டா நல்லதுதான். வா போவோம்" என்று எழுந்தார் செல்லையா.

வேலாயுதமும் எழுந்தான். எழுந்து நடந்தவனுக்கு என்ன தோன்றிற்றோ தெரியாது. "வேற பெண்பிள்ளைகளுமா இருக்கு?" என்று கேட்டான்.

"இன்னும் ஒன்று இருக்குத் தான். ஆனா அவளுக்கு எட்டோ ஒன்பது வயதுதான். அவளுக்கு மூத்த இரண்டு பெடியன்கள். மூத்தவன் எச். எஸ். ஸி படிக்கிறான். மற்றவன் எஸ். எஸ். ஸி. படிக்கிறான். இருக்கிற பெண்பிள்ளையைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை."

வேலாயுதத்துக்குச் சிரிப்பு வந்தது. என்ன இருந்தாலும் செல்லையா அண்ணன்வியாபாரி அல்லவா. முதல் போட்டுத் தானே இலாபம் எடுப்பவர். இறுற்போட்டுத்தானே சுறாப் பிடிப்பவர். மூத்த மகளுக்கு முப்பதினாயிரமோ நாப்பதாயிரமோ கொடுத்து விட்டார். அதனால் என்ன குறைந்து விட்டது அவருக்கு. அவருக்கு இரண்டு மக்கள் இருக்கிறார்கள். அவர்களைப்படிக்க வைத்திருக்கிறார். ஒரு ஆளுக்கு ஐம்பதாயிரமாவது வாங்காமலா விடப்போகிறார்? நல்ல செல்லையா அண்ணன் தானே வாங்காமல் விடப் போகிறார்?

ஐம்பதினாயிரம் ரூபாய் கொடுக்கிறவன் செல்லையாஅண்ணனைப்போல வயிறெரியத்தானே போகிறான்? நல்ல பகிடி இது. கஷ்டப்பட்டுப் பணம் சேர்க்கிறார்கள். ஒவ்வொருவரும் அடுத்தவனுக்குச் சீதனம் என்று கொட்டிக்கொடுத்து எல்லோருமே ஆளை ஆள் நொந்துகொண்டு......

வேலாயுதம் வாய்விட்டே சிரித்தான். சிரித்துக் கொண்டே எண்ணினான். யாழ்ப்பாணத்தார் எல்லோரும் இனிமேற் சீதனம் கொடுக்கிறதில்லை என்று வைராக்கியமாக முடிவு செய்துகொண்டால் அங்கே இருக்கிற ஆணும் பெண்ணும் கல்யாணம் முடிக்காமற் சும்மாவா இருந்து விடப்போகிறார்கள்? ஒரு ஐந்து வருடம் அப்படி இருந்து பார்க்கட்டுமே!

'அவர்கள் அப்படிச் செய்தாலும் சரி, செய்யாவிட்டாலும் சரி; நான் என்னுடைய மகனுக்கு, அவனுக்குப் பெரிய உத்தியோகம் வந்தாலுஞ் சரி சீதனமே வாங்கிறதில்லை. அவன் தன்பாட்டிற்கு விரும்பிய பெண்ணைக் கல்யாணம் முடித்துவிட்டுப் போகட்டும்!,

வேலாயுதத்தின் தீர்மானம் முடிவடைகையில் செல்லையா அண்ணன் சுருட்டுப் பெட்டியை வள்ளத்திற் தூக்கி வைத்து விட்டு, துடுப்பு வலிக்கும் ஆசனத்தில் அமர்ந்துகொண்டார்.

புறப்படுவதற்கு ஆயத்தமாகச் சவளை வேலாயுதம் கையிற் தூக்கியபோது தூரத்தே கண கண என்று சைக்கிள்மணி கேட்டது.

திரும்பிப் பார்த்தபோது சைக்கிளிலே வாஸ் வந்து கொண்டிருந்தான். தோணி வாசுக்காகக் காத்து நின்றது.

(தொடரும்)

'ஹென்ற்லி'
உடை அலங்காரத்தின்
உன்னத அடையாளமாகும்

ஹென்ற்லி

★ சேட்
★ ஷோட்ஸ்
★ காற்சட்டை

ஹென்ற்லி சேட், ஷோட்ஸ், காற்சட்டை ஆகியவற்றை அணியும் ஆடவரும், இளைஞரும் சௌகரியத்தை அனுபவிப்பதுடன் வசீகரமான தோற்றத்தையும் பெற்று அழகுடன் விளங்குகின்றனர்.

ஹென்ற்லி உடைவகையில்
நீங்கள் எதைத் தெரிந்தெடுத்து வாங்கினாலும்,
அது கொடுத்த பணத்திற்கு நிறைந்த பெறுமதியாகும்.

ஹென்ற்லி (காமெண்ட்ஸ்) லிமிடெட்,
பழைய விமான நிலைய வீதி,
(Old Air Port Road)
இரத்மலானை.

காமன் கூத்தின் மூலம் தென்னிந்திய தமிழ் மக்கள் தெய்வங்களுக்கு தங்கள் நன்றியறிதலை அர்ப்பணம் செய்தார்கள்.

# காமன் கூத்து

— சி. வி. வேலுப்பிள்ளை —

மன்மதன் ரதியிடமிருந்து பிரிந்து இந்திர சபைக்கு செல்வதையும், பிற்பாடு சிவபெருமானிடம் சென்று தன் கரும்பு வில்லால் காதற் கணைகளை எய்ததையும், எம்பிரான் கோபங்கொண்டு தனது நெற்றிக்கண்ணால் அவனை பஸ்மீகரமாக்கியதையும் சித்திரிப்பதுதான் காமன் கூத்து அல்லது காமன் பண்டிகை என்றழைக்கப்படும் கிராமிய நடனம். காமன் அப்படியே அழிந்துபோகவில்லை. பூதவுடலில்லாத அனங்கனாக இன்றும் இருக்கிறான்.

புராணக் கதையை அடிப்படையாகக் கொண்ட இந்த காமன் கூத்து, பலநூறு வருடங்களுக்கு முன்பு ஒரு கிராமிய நடனமாக அமைக்கப்பட்டு, அரிவிவெட்டுக்காலங்களில் "இந்திர விழா" எனக் கொண்டாடப் பட்டது. சமாதானத்தையும் சுபிட்சத்தையும், அன்பின் மறுமலர்ச்சியையும் வணக்கத்தின் மேன்மையையும் அது குறிக்கிறது. காமன் கூத்தின் மூலம் தென்னிந்திய தமிழ் மக்கள் தெய்வங்களுக்கு தங்கள் நன்றியறிதலை அர்ப்பணம் செய்தார்கள்.

## இலங்கையில்

இங்கே, இலங்கையில், அது தனது பழைய நோக்கங்களை மறந்து, தைப்பொங்கல் அல்லது அர்ச்சுனன் தவஸு போன்ற ஓர் மத வைபவமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

மலைநாட்டுத்தமிழர் மாத்தளையிலிருந்தாலும் சரி, வதுளையிலிருந்தாலும் சரி, சினிமாக் காட்சி மண்டபங்களும் இடத்துக்கிடம் திரியும் சினிமாக்களும், அவர்களுக்கு இந்த நாட்டுக் கூத்தின்மீதுள்ள பிரியத்தைச் சற்றேனும் குறைக்கவில்லை.

ஒவ்வொரு வருடமும் மாசி மாதம் மூன்றும் திகதி, காமனை எரித்த அதேயிடத்தில், மறுபடியும் காமன் கூத்து அரங்கேற்றப்படும்.

மூன்றும் வளர் பிறையில்
தனி முச்சந்தி தனில்
அன்பாய் வளர்ந்ததொரு
இன்பமுள்ள பேய்க் கரும்பும்
ஓங்கார மாவிலையும்
ஓசையுள்ள பொன்னரசும்
ஆனை சேனை வைக்கோல் பிரி
தானக சுத்திய பின்
அதனுள் விராட்டியொன்று
அன்பாக தானூட்டி
ஆழக்குழி தோண்டி
அதிலே பால் ஊத்தி
அழகான வெள்ளி பணம்
சதிராகவே போட்டு
சொந்தமாய் காமன் நட்டு

ரதி, மன்மதன் பாகங்களைத் தாங்கும் இரு முக்கிய பாத்திரங்களும் முதல் நாள் பூஜையிலிருந்து 30ஆம் நாள் காமனை எரிக்கும் வரையில் விரதம் அனுஷ்டிப்பார்கள்.

உடுப்பு, ஆட்டம், பாட்டு தப்புக் கொடுத்தல் - இவைதான் காமன் கூடத்தை சிறப்பிக்கும் அம்சங்கள்.

மன்மதன் போலி இரத்தினக் கற்களாலும் காக்காய்ப் பொன் முதலியவற்ருலும் அலங்கரிக்கப்பட்ட ஒரு மரக் கிரீடத்தையும் புஜங்களிலும் கரங்களிலும் அதே போன்ற ஜோடனைகளையும் அணிந்திருப்பார். மஞ்சள் நிற வேட்டி உடுத்து, மல்ல வேட்டுடன் கூடிய மேலங்கியும் அணிந்திருப்பார். முகத்துக்கு நீலம் பூசப்பட்டிருக்கும். மன்மதன் ஆவேசத்தில் கண்டபடி ஓடித் திரியாவண்ணம், ஒரு முழு வேஷ்டியை முறுக்கி அதனல் அவருடைய இடுப்பைச் சுற்றிப் பின்னல் ஒருவர் பிடித்துக் கொள்ளுவார்.

ரதியும் கிரீடம், புஜம் முதலியவை அணிந்து பட்டாடை உடுத்தியிருப்பாள். முகத்துக்கு மஞ்சள் பூசப்பட்டிருக்கும். அவளையும் இடுப்பைச் சுற்றிப் பிடித்திருப்பார்கள்.

## மதனும் ரதியும்

மதனும் ரதியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு சுமார் பத்தடி தூரத்தில் நிற்பார்கள். பாட்டையும் மத்தளத்தையும் பின்பற்றி அரைவட்டத்தில் சுற்றி ஆடி வருவார்கள்.

மத்தளம் ஏக தாளத்தில் அடித்துக் கொண்டு ஒவ்வொரு பாட்டு வரியின் முடிவிலும் முத்தாய்ப்புக் கொடுக்கும். ஒரு பாட்டின் முடிவில் மத்தள வாத்தியம் வெகு துரிதமாக வாசிக்கப்பட்டு, பாட்டின் கடைசி வரி முடுகில் முடியும்.

ஆட்டம் ஆடுகிற மதனும் ரதியும் பாடுவதில்லை. நல்ல அனுபவமுள்ள பின்னணிப் பாடகர்கள் அவர்களுடைய பாட்டுக்களைப் பாடுவார்கள்.

சம்பிரதாயப்படி முதலில் விநாயகர் ஸ்துதி பாடப்படும்;

முன் நடக்கும் பிள்ளையார்க்கு
கண் நட்சகம் பொன்னலே
கால் சிலம்பு முத்தாலே
முத்தாலே தண்டை கொஞ்ச
முன் நடக்க வேணு மையி
நாவில் குடியிருந்து
நல்லோசை தாருமையா
ஆயன் மகன் கதைபாட
அருள் புரிய வேணுமையா
அருள் புரிய வேண்டுமென்று
அடிவணங்கி தண்டனிட்டேன்

ரதி-மன்மதன் தர்க்கம் அழகான கற்பனையும் புராண இதிகாச மேற்கோள்கள் நிறைந்த தாயும் லாவணி மெட்டில் பாடப்படும்.

மன்மதன் இந்திர சபைக்கு போகவேண்டு மென்கிறான்; அதை ரதி ஆட்சேபிக்கிறாள்.

### மன்மதன்

நட்சத்திரம் போலுதித்த
விட்சித்திர பெண்மயிலே
நாயகியே என்னுடைய
உபாயமுள்ள பெண் ரதியே
நாரதன் சபைக்கே
காரணமாய் நான் போரேன்
* * *

### ரதி

மணிவண்ணன் பெற்றெடுத்த
துணிவுள்ள என் கணவா
மாமதிக் குடையவனே
நேச சுகி காரணனே
தீர்க்கமுடன் வில் வளைத்து
வையகம் கீர்த்தி பெற்று
வையகமெல்லா நிறைந்த
ஒய்யாரமான பதி
* * *

நன் மார்க்க வார்த்தையெல்லாம்
திறமாக நானறிந்து
நாடிய இவ்விடமே
தேடியே வாரனடி
* * *

வண்ணப்பதுமை செய்து
உன்னிப்பாய் தாரேனென்று
வக்கணையாய் சொல்ல வந்தீர்
சக்கரபாணி தன்மகனே
* * *

நான் எழுதித் தந்ததொரு
மாணிக்கப் பொம்மைதனை
நாயகியே வைத்திரடி
மாயன் மருமகளே
* * *

வண்ணக் குலப் பாக்கு
தெள்ளிய சுண்ணும்புமிட்டு
மகிழ்ந்துமே நான் கொடுத்தா
வாய்திறந்து பேசிடுமோ
நேசனே உந்தனைப் போல்

### பொது

ஆங்காரச் சக்கரத்தில் — ஓங்கார முக்கரித்தோன்
ஆமை உருவெடுத்தோன் — பூமி பாரம் தடுத்தோன்
ஆண்டவன் என் பெருமான் — வேண்டிய பொற்பாதனுக்கு
ஆபத்து வரும்பொழுது — பிரலாபித்து சொல்ல வந்தாய்
அன்புடன் ஆதரித்து — தெம்புகள் சில உரைத்து
அனுப்படி பெண்ணே என்ரூர் — விளப்பமுள்ள வேல் மதனர்

ஆடலும் பாடலும் நடக்கும் போது, சில சமயம் உணர்ச்சி மிகுதியால் மதனுக்கு 'மருள்' வந்து விடும். அவன் ரதியை அணுக விடாமல் இடுப்பிலுள்ள முறுக்கு வேஷ்டி பிடித்துக் கொள்ளும். அத்துடன் 'மருள்' நீங்கும் வரையில் அவன் முகத்துக்கெதிரே ஒரு கண்ணடியும் காட்டப்படும்.

இந்தக் கூத்து முப்பது இரவுகளாக நடக்கும். நடனக் கோஷ்டியினர் ஒவ்வொரு "லைகை" சுற்றி வருவார்கள். ஒவ்வொரு வீட்டிலும் பூஜை நடக்கும். கோஷ்டியினர் சுற்றுடலிலுள்ள வேறு தோட்டங்களுக்கும் சென்று ஆடுவார்கள். அங்கும் அவர்களுக்கு தக்க மரியாதைகள் நடக்கும்.

முப்பதாம் நாள் பேய்க் கரும்பு நாட்டப்பட்ட இடத்தில் ஒரு பச்சைக் குடிசை அமைக்கப்படும். சிவபெருமான் அதற்குள் தபஸில் வீற்றிருப்பார். மன்மதன் வந்து தன் கரும்பு வில்லில் மலர்ப் பாணங்களைத் தொடுத்து அவர் மீது எய்வான். சிவபெருமான் உடனே தமது நெற்றிக் கண்ணைத் திறந்து அக்கினியைப் பொழிவார். மதனுக்கருகில் குவித்து வைக்கப்பட்ட சில விறகுக் குச்சிகள் மீது தீப்பந்தம் கட்டிய அம்பு ஒன்று பாய்ந்து அக் குவியலைப் பற்ற வைக்கும். நெருப்பு கொழுந்து விட்டெரிய மதன் மெதுவாக மறைந்து விடுவான். உடனே ரதி ஓடோடியும் வந்து துயரம் தாங்க முடியாமல் ஒப்பாரி வைப்பாள்.

(13ஆம் பக்கம் பார்க்க)

# மலாயன் இந்தியர் காங்கிரஸ்

## அதன் தோற்றமும் வளர்ச்சியும்

## நேதாஜி மண்டபம் நிறைவுருதிருப்பதேன்?

மலாயா பெடரேஷனில் ஆரம்பத்தில் தொழிலாளர் மந்திரியாகவும், அப்புறம் சுகாதார மந்திரியாகவும் பதவி வகித்து, ஒக்டோபர் மாத மந்திரிசபை மாற்றத்தில் தந்தி-தபால் - பொது மராமத்து மந்திரியாகப் பதவியேற்றிருக்கும் டத்தோ வீ. தி. சம்பந்தன், கடந்த செப்டம்பர் மாதம் 30-ம் திகதி 11,098 வாக்குகள் பெற்று, ஐந்தாவது முறையாக "மலாயன் இந்தியர் காங்கிரஸ்" தலைவரானர். பொதுவாக, ஒரு ஸ்தாபனத்தின் தலைமைப் பீடம் ஓரிரு ஆண்டுகளில் சரிந்து கொண்டிருக்கும் போது, தொடர்ச்சியாக ஐந்து முறைகள் தலைவர் பதவியை விடாப்பிடியாக பற்றிக் கொண்டு வருவதிலிருந்து, மலாயா வாழ் இந்தியரிடையே -குறிப்பாக தமிழரிடையே பெரு மதிப்புப் பெற்றிருக்கிறார் என்று புலனுகிறதல்லவா?

ஆண்டுதோறும் வெற்றிக்கு மேல் வெற்றி பெற்றுவரும் டத்தோ சம்பந்தன் அவர்களுக்கு வாசகர்கள் பேரில் நல்வாழ்த்தை வழங்கி, மலாயன் இந்தியர் காங்கிரஸின் வரலாற்றிலே சிறிது சஞ்சரிப்போம்.

### திவி தோற்றுவித்த ஸ்தாபனம்

மலாயாவிலே - ஏறக்குறைய ஏழு லட்சம் இந்தியர்களை-: குறிப்பாக - ஆறு லட்சம் தமிழர்களைப் பிரதிநிதிப்பது "மலாயன் இந்தியர் காங்கிரஸ்". 1945-ம் ஆண்டு, பிரிட்டிஷார் கொடுங்கோன்மை ஆட்சி புரிந்த யப்பானியரை விரட்டியடித்து, இராணுவ ஆட்சி நடத்தியபோது, இந்தியத் தூதுவராயிருந்து சமீபத்திற் காலமான திரு. ஜோன் ஏ. திவி என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது. மலாயாவின் சுதந்திரத்திற்கு வித்திட்ட ஸ்தாபனங்களில் ஒன்று. இன்றும், மலாயர்களுடன் தோளோடு தோள் கோர்த்து

**மலாயாக் கடிதம்**
★
**நமது நிருபர்**

நாட்டின் எல்லா நன்மை தின்மைகளிலும் சமபங்கு கொள்ளும் ஸ்தாபனம் ம. இ. கா.

திரு. திவி தூதுவராக அழைக்கப்பட்ட பின்னர், திருவாளர்கள் பூத்சிங், கா. இராமநாதன் பி. ஏ., ஆகியோர் தலைமை தாங்கினர்கள். ஏதோ, தங்கள் தங்களாலானவற்றைச் செய்தார்கள். அப்புறம் வந்தவர் நியாயவாதிதிரு.கே எல். தேவாசர். இவர், பிரமாதமாக எதையும் சாதிக்காவிடினும் ம. இ. கா. வை, கூட்டணியுடன் சேர்த்து, ஆளும்கட்சியின்ஓர் அங்கமாக ஆக்கிய பெருமைக்குப் பாத்திரமானர்.

### சம்பந்தன் தலைவரானர்

1955-ம் ஆண்டில், ம. இ. கா. தலைவர் பதவிக்கு திருவாளர்கள் பாலகிருஷ்ணன், வி. மாணிக்கவாசகம், வீ. தி. சம்பந்தன் ஆகியோர் போட்டியிட்டார்கள். தேர்தலின் போது, "ம. இ. கா. வுக்குத் தலைமைக் காரியாலயம்"- மாகாத்மாவின் நாமம் மலாயாவின் மறையாதிருக்க "காந்தி மண்டபம்" ஆகியவற்றை எழுப்பித் தருவோம் என்றெல்லாம் கோஷித்தனர்.

முன்னவர் இருவரும் தோல்வியுற்றனர். திரு.வீ. தி.சம்பந்தன் வெற்றி பெற்ரூர். "காந்தி மண்டபம் வேண்டாம் - நேதாஜி மண்டபந்தான் உசிதமானது" என்று கூறினர். மக்கள் அவருடன் ஒத்து நின்றதில் வியப்பில்லை. ஏனென்ருல், வீர நேதாஜி, யப்பானியர் காலத்தில் மலாயர்களுடன் இரண்டறக் கலந்தவர். ஆனல் நேதாஜி மண்டபம் இன்னும் தோன்றவில்லை.

"நேதாஜி மண்டபம் எங்கே?" என்று கேள்விகள் எழுப்பிய போது, "பணம் வேண்டாமா?" என்று ஆறுதல் கூறி வந்தார். அதற்குப் பதிலாக, தாம் தலைவர் பதவியேற்றபின், முன்பிருந்த அங்கத்தினர்களைவிட பன் மடங்கு அதிகரித்திருக்கிறது-கைவிட்டுப் போகவிருந்த இந்தியர் இமிக்கிரேஷன் நிதி, தென்னிந்தியருக்கே கிடைக்கும் மார்க்கம் தேடியிருக்கிறது. கள்ளுக்கடைகளின் தொகை குறைந்திருக்கிறது: ஆருவது வகுப்பு தமிழ்ப்படித்த மாணவர்கள் உயர் வகுப்புக்குச் செல்ல வாய்ப்புத் தேடிக் கொடுத்திருக்கிறது. இந்தியப் பாட்டாளிகள் தங்கள் ஓய்வுகாலத்தில்


(12ஆம் பக்கம் பார்க்க)


உத்தரவாதமுள்ள

ஜெயிஸ் பிளியூட்

நெருப்புத் தண்ணீரையே

வாங்குங்கள்.




'ஜெயிஸ்'

— மார்க்கையும் —

'உதய சூரியன்'

அடையாளத்தையும் தாங்கிய

லேபிளையும் மூடியையுமுடைய

'ஜெயிஸ் பிளியூட்

நெருப்புத் தண்ணீரே சிறந்தது.

# தொழிலாளர் விடுதிகள் படுமோசம்

## மலைநாட்டுத் தமிழ் வாலிபருக்கு படுத்துறங்கவும் இடமில்லை

மலைநாட்டுத் தமிழரின் வாக்குரிமை, பிரஜா உரிமை ஆகிய விஷயங்களைத் தாம் கவனத்துக் கெடுத்துக் கொள்ளப் போவதாக பிரதம மந்திரி கூறியிருப்பது உண்மையில் வரவேற்கத் தக்க செய்தி தான்.

இப் பிரச்சினை பல வருட காலமாக "இலங்கை — இந்தியப் பிரச்சினை" என்று அழைக்கப்பட்டு வந்த போதிலும், உண்மையாக அது இலங்கையின் அரசியல் வாழ்க்கையில் ஆருத ஒரு புண்ணுக வளர்ந்து வந்திருக்கிறது. இன்றுவரை அது அரசியல் வாதிகளுக்கு ஒரு தேர்தல் சுலோகமாகவும் அதிகார ஏணியின் படியாகவும் பயன்பட்டு வந்தது. ஆனல் அது மானிடர் சம்பந்தப்பட்ட விஷயமாதலால் அதை ஒரு மனிதப் பிரச்சினையாகத்தான் கொள்ள வேண்டும். எப்பொழுதாவது ஒருநாள் இலங்கை அதற்கு ஒரு முடிவு காணத் தான் வேண்டும். பார்க்கப் போனல், எந்த நாடோ அரசாங்கமோ தனது சீவிய சத்தாக விளங்கும் ஒரு மக்கட் பகுதிக்கு நீதியளிக்க ஒருபோதும் மறுக்கப்படாது.

ஒரு பாராளுமன்றச் சட்டமோ அல்லது ஒரு உடன்படிக்கையோ இதற்குப் பரிகாரமாகாதென்பதைக் கடந்த அனுபவம் எமக்கு வற்புறுத்துகிறது. எட்டு லட்சம் மக்கள் படும் துன்பங்களை உணர்ந்து அவற்றிற்கு வேண்டிய சிகிச்சை செய்வதற்கு இரு பக்கத்திலும் ஏவல் இருப்பதவசியம்.

### முக்கிய விஷயம்

அரசியலில் ஈடுபட்டிருக்கும் எத்தனை பேருக்கு இந்தப் பிரச்சினையின் விபரங்கள் விளங்கும்! அரசியல் தலைவர்களில் மிகச் சிலரே இந்த அதி முக்கியமான விஷயத்தைப்பற்றிக் கவலை எடுத்து சிந்தித்திருக்கிருர்கள். மிக நெருக்கடியான இச் சிக்கலின் உண்மையான அர்த்தங்களை கண்டி நாட்டிலுள்ள பெரும்பாலானவர்களும்—ஏன், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருக்கோணமலைத் தமிழரும் கூட—உணர்ந்திருக்க மாட்டார்கள்.

காங்கிரசின் வருடாந்தக் கூட்டங்களில் நீண்ட பிரசங்கங்கள் நடப்பதும் பெரிய தீர்மானங்கள் நிறைவேற்றப்படுவதும் உண்மை தான். ஆனல் இவற்றின் உண்மை விளக்கம் சிங்கள, தமிழ் மகாஜனங்களுக்கு விளங்குகிறதா? ஒருவருடைய உள்ளங்கையில் புண் இருக்கிறதென்று அவர் தனக்குத் தானே சொல்லிப் பிரலாபித்துக் கொண்டு திரிவதில் என்ன பலன்? மலைநாட்டுத் தமிழர் சுரண்டி அள்ள வந்த அந்நியர்கள் என்று அன்று முதல் இன்றுவரை நினைத்து வந்த மற்ற மக்களுக்கு இந்தப் பிரச்சினையின் அடி அஸ்திவாரங்களைக் கூறி விளக்க வேண்டும்.

முதலில் தீர்க்க வேண்டிய பிரச்சினைகளை முதலில் தீர்த்துப்போட வேண்டுமென்ற உண்மையை காங்கிரஸ் இனிமேலாவது உணர வேண்டுமென்று சிந்தித்துப் பார்க்கும் அறிவுள்ள மலைநாட்டு மக்கள் கருதுகிருர்கள். "மலைநாட்டுத் தமிழர் பிரச்சினையை" தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய

**மலைநாட்டுக் கடிதம்**

மும்மொழிகளிலும் வாசிக்கக் கூடிய முறையில் எழுதி அதை அனைவருக்கும் விநியோகம் செய்ய வேண்டும். எட்டு லட்சம் மக்களின் துயர் துன்பங்களையும், ஆசை அபிலாஷைகளையும், குறை குற்றங்களையும் இலங்கை வாழ் மக்களின் முன்னிலையில் விரித்துக் காட்ட வேண்டும். எவரின் மனத்தையும் உருக்கக் கூடிய சோக வரலாறு அது.

மலைநாட்டு மக்களுக்கே அவர்கள் படும் இன்னல்கள் எவை என்று முதலில் கூறி வைக்க வேண்டும். தீராத வியாதியஸ்தர்கள் போல், படாத கஷ்டமெல்லாம் பட்டு மரத்துப் போய், "பாமரராய், விலங்குகளாய், பான்மை கெட்டு" விளங்குகிருர்கள் அவர்கள்.

### பிரஜா உரிமை பிரச்சினை

"இலங்கை — இந்தியர் பிரச்சினை" என்று கூறப்படும் இந்தப் பிரச்சினையை சீக்கிரம் நிவர்த்திக்க வேண்டுமென்று சில வாரங்களுக்கு முன் ஒரு நாள் ஓர் ஆங்கிலப் பத்திரிகை எழுதியிருந்தது. இப்பிரச்சினை தோட்டங்களில் குடிமனையில்லாத் திண்டாட்டத்தையும், நாடு நகரங்களில் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் கிளப்பி விட்டதென்று அதில் கூறப்பட்டது. வேலையற்றிருப்பவர்களுக்கு குடிமனை வசதிகள் அளிப்பதில் தோட்ட முதலாளிகள் லட்சக் கணக்காகச் செலவழித்திருக்கிருர்கள் என்றும் அப்பத்திரிகை கூறியது.

பிரஜா உரிமைப் பிரச்சினை இருப்பதனல் தோட்டத்தொழிலாளி ஒருவனுக்கு வேறெங்கும் வேலை கிடைக்காது. இவர்களில் வேலையற்றிருப்பவர்களில் எத்தனை பேர் தொழிற் கந்தோர்களில் பதிவு செய்யப் பட்டிருக்கிருர்கள்? ஒருவருமில்லை. இது மட்டுமல்லாமல், இவர்கள் எல்லோரும் 16 வயதுக்கும் 21 வயதுக்கு முட்பட்ட கலியாணமாகாதவர்கள். ஒரு குடும்பத்தின் பராமரிப்பில் வாழ்பவர்கள். இன்னெரு விஷயம் என்னவென்ருல்—இவர்கள் பட்டின வாசிகளின் தொழில்களை அபகரித்துக் கொண்டு போகும்படி எத்தனை தோட்டங்கள், நகர்ப்புறங்களையும் கிராமங்களையும் அண்டியிருக்கின்றன? கிராம சங்கங்களோ, பட்டின சபைகளோ, நகர சபைகளோ எதுவுமே மலைநாட்டுத் தமிழருக்கு வசிப்பிடமளிப்பதில்லை.

தோட்டத் தொழிலாளர் வசிக்கும் "லைன்" விடுதிகள் படு மோசமான நிலையிலிருக்கின்றன. வயது வந்த வாலிபர்கள் விருந்தைகளிலும், மாட்டுத் தொழுவங்களிலும், சந்து பொந்துகளிலும், கோயில் மண்டபங்களிலும் படுத்துத் தூங்குபவர்கள் என்ற உண்மை, தோட்டங்களைப் பற்றித் தெரிந்தவர்களுக்குத் தான் புரியும். ஆனல், இவ்விடங்கள் கூட, தொழிற் சங்கப் போட்டிகளினல் இப்பொழுது அபாயகரமானவையாகி விட்டன.

—ஜெயா.

### ஆத்மீக வளர்ச்சிக்கு உதவும் கலைமகள் வழிபாடு

பன்னூருண்டுகளாக, தமிழர்கள் நவராத்திரி காலத்தை ஆத்மீக வளர்ச்சிக்கு உவந்ததாக உட்கொண்டு வழிபட்டு வருவது வெளிப்படை. இச்சக்தி வழிபாடு மக்கள் உள்ளத்தைப் பண்படுத்துகிறது. வீரம், தனம், கலை மூன்றையும் ஒருங்கே அளித்து வருகிறது.

இவ்வாறு வவனியா, தாண்டிக்குளம் இராம கிருஷ்ணசங்க பிறமண்டு வித்தியாலயத்தில் நடைபெற்ற கலைமகள் விழாவிற் பேசும் போது தலைமை ஆசிரியர் த. யோகநாதன் குறிப்பிட்டார். மாணவிகள் பக்திப்பாடல்கள் பாடினர். வவனியா கிருஷிகப் பாடசாலையைச் சேர்ந்த மாணவர்கள் விழாவிற் பங்குபற்றிச் சிறப்புறச் செய்தனர். பெற்ருேரின் உதவியால் விழா சிறப்பாக நடைபெற்றது. ஆசிரியர் திரு.வே. இராசரத்தினம் அனைவருக்கும் நன்றி கூறினர்.


**விற்பனைக்கு**

ஐரோப்பியர் ஒருவர் பாவித்த B. S. A., 3. 5. E L சீரிஸ் மோட்டார் சைக்கிளும் சைட்காரும் (Side Car) விலை ரூபா 1,600/- காலை 9 மணிக்கு முன்பு அல்லது நண்பகல் 12 மணிக்கும் பிற்பகல்3 மணிக்குமிடையில் பார்வையிடலாம். விலாசம்: ஏச். ஜெ. குளுயாஸ், 111/6, பீச் ரோட், யாழ்ப்பாணம்.

மிகச் சிறந்த

அலுமினியப்

பாத்திரங்களுக்கு

எங்களிடம் வாருங்கள்

சி. வி. பாட்

டாம் வீதி, :: கொழும்பு.

வெகுவிரைவில் எதிர்பாருங்கள்!

சிலோன் என்டர்டெயின்மென்ற்ஸ் லிமிட்டெட் தாபனத்தாரின்

மகத்தான தீபாவளி வெளியீடு!

ஜெமினி கணேசன் - சாவித்திரி - நம்பியார் - ராஜசுலோசன

திறம்பட நடித்த

சாரதி ஸ்ருடியோவின்


**பாக்கிய தேவதை**

(தமிழ்)

வெற்றிகரமான **4**-வது வாரம்!

முருகன் [ஜிந்துப்பிட்டி] மீபுரு [நீர்கொழும்பு] சென்ட்ரல் [பருத்தித்துறை] ஜோதி [திருக்கோணமலை]

★ ஏ. நாகேஸ்வரராவ் ★ ஜமுன
★ ராஜசுலோசன ★ எம். என். நம்பியார்
★ ஏ. கருணநிதி ★ கே. சாரங்கபாணி
★ எஸ். வி. ரங்கராவ் ★ டி. பி. முத்துலட்சுமி



முதலியோர் நடித்த

**வாழ்க்கை ஒப்பந்தம்**

அருமையான குடும்பச் சித்திரம்

அனைவரும் பார்க்கவேண்டிய திரைப்படமிது.

இப்பொழுது ஓடிக்கொண்டிருக்கிறது!!

ராணி (யாழ்ப்பாணம்)

கிஷோர்குமார் - நுட்டான் நடிக்கும்

**டில்லி - கா - தக்**

தினசரி மாலை 6–30 மணிக்கு. சனி, ஞாயிறு 10 மணிக்கும், 3 மணிக்கும் பகற் காட்சிகள் காண்பிக்கப்படும்.

# கண்ணாரக் காண ஒரு கலைக் கோவில்

## உன்னத எண்ணம் உருவாகின்றது

— அஜன் —

ஈழ நாட்டில் தமிழ் மக்களது பண்பாட்டையும் மொழியையும் கலைகளையும் சீரிய முறையிற் பாதுகாத்து வளர்ப்பதற்கு தமிழர்களின் தலைநகராக விளங்கும் யாழ்ப்பாணத்தில் ஒரு சிறந்த நூல் நிலையம் அமைத்தல் மிக மிக அவசியம். எனவே யாழ்ப்பாண நூல் நிலைய இயக்கத்தினரால் ஆரம்பிக்கப் பட்ட நூல் நிலையத்தை பூர்த்தி செய்து வைப்பது அபிமானமுள்ள இலங்கை மக்கள் ஒவ்வொருவரதும் கடமையாகுமென யாழ்ப்பாண மேயரும் நூல் நிலையக் குழுத் தலைவருமாகிய திரு. ஏ. தங்கராஜா துரையப்பா அன்றொருநாள் அனைவரையும் வேண்டியிருந்தார்.

* * *

விஜயதசமியாகிய வெற்றித் திருநாளன்று (11-10-59) யாழ்ப்பாணம் முற்றவெளியிலே நிறுவப்பட்டிருக்கும் பொது நூல் நிலையத்தின் ஒரு பகுதியை மேயர் திரு. தங்கராஜா துரையப்பா திறந்து வைத்தபோது அங்கு கூடியிருந்த தமிழ் மக்கள் தமது பண்டைய சிறப்புக்களைக் காப்பாற்ற இக் கலைக் கோவில் பெரிதும் உதவுமென உண்மையாகவே மகிழ்ந்திருப்பார்கள்.

சென்னை கட்டடக் கலை அறிஞர் திரு. நரசிம்மனால் நிர்மாணிக்கப்பட்ட இக்கட்டடம் திராவிட சிற்ப முறைகளையும் இக் காலக் கட்டட முறைகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

### முதற்கட்டம்

இக்கட்டடம் முழுவதும் இவ்வாண்டு பெப்ரவரி மாதத்தில் பூர்த்தியடைந்திருக்க வேண்டும். எதிர்பாராத தடைகள் குறுக்கிட்டதனால் இப்போது கட்டடத்தின் ஒருபகுதியே பூர்த்தியாகியுள்ளது. கட்டட வேலை முற்றாக நிறைவேறும்போது இக்கலைக் கோவில் தென்கிழக்கு ஆசிய நாடுகளிலேயே சிறந்த ஒரு நூல்நிலையமாகத் திகழுமென்று அங்கு கூடியிருந்த அனைவரும் பேசிக்கொண்டதில் எவ்வளவோ உண்மை இருக்கின்றது. ஆகவேதான் திறப்புவிழா நடைபெற்ற அத்தினம் யாழ்ப்பாணத்தினதும் தமிழர்களினதும் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறித்துப் பேண வேண்டிய தினமென முதலியார் திரு. ஸி. முத்துத்தம்பி தமது பேச்சிற் குறிப்பிட்டிருந்தார்.

1934 ஆம் ஆண்டு, காலஞ்சென்ற தமிழ் அபிமானி திரு. கே. எம். செல்லப்பாவினது முயற்சியினால் ஆஸ்பத்திரி வீதியில் யாழ்ப்பாண மத்திய நூல்நிலையம் சிறிய அளவில் ஆரம்பிக்கப்பட்டது. முன்னைநாள் மேயர் சாம். ஏ. சபாபதி, மேயர் திரு. ஏ. துரையப்பா போன்றவர்களின் பெருமுயற்சியாலும் பொதுமக்களின் பேராதரவாலும் ஆசிய பவுண்டேஷன், இந்தியா, ருஷியா, அமெரிக்கா ஆகியநாடுகளின் உதவியாலும் உருவாகி வருவதே கலைஎழில் மிக்க இந் நூல்நிலையமாகும்.


### மின்சார ஒளியில்

வாழைகள் நாட்டப்பெற்று மகரதோரணங்களால் அலங்கரிக்கப் பெற்றிருந்த நூல்நிலைய முன்றில் மின்சார வெளிச்சத்துடன் அன்று ஒளிவீசிக் கொண்டிருந்தது. நூல்நிலையத்தைத் திறந்து வைக்கமுன்னர் இராமநாதன் கல்லூரி மாணவிகள் பாமாலை சூட்டிக் கலைமகளுக்கு நடன அஞ்சலி செலுத்தினர். கலைமகளின் அருளை வேண்டுவது போல் இந்நடன நிகழ்ச்சி அமைந்திருந்தது.

முது பெருங் கிழவரும் தமிழ் வள்ளலுமான டக்டர் எஸ். சுப்பிரமணியத்தின் தலைமையில் இவ்விழா நடைபெற்றது. நாதசுவர இன்னிசைமுழங்க மேயர் திரு. துரையப்பா வர்ண நாடாவை வெட்டி நூல்நிலையத்தைத்திறந்து வைத்தார். மேயர் குத்துவிளக் கேற்றித் திறப்புவிழாவை நடாத்தியிருக்கலாமேயெனப் பலர் பேசியதும் என்காதுகளுக்கு எட்டியது.

### திராவிட சிற்பமுறை

கலைக்கோயிலைத் திறந்து வைத்த மேயர் இதோபேசுகின்றார்: 1952 ஆம் ஆண்டில் இப் பெருமுயற்சி முளைகொண்டது. இடையறாத ஊக்கமும், அயரா உழைப்பும் இன்று பயன் அளித்திருப்பதைக் காண்கின்றோம். அப்படியிருந்தும் இக்கட்டடத்தில் ஒருபகுதியைத்தான் பூர்த்தி செய்ய முடிந்தது. யாழ்ப்பாணத்தின் பண்பாட்டுக்கும் கலாசாரத்துக்கும் ஏற்ப, திராவிடசிற்ப முறைகளை அனுட்டித்து இம்மகத்தான கட்டடத்தை நிறுவியுள்ளோம். மேல்மாடிக் கட்டடவேலைகள் இன்னும் சிலமாத காலத்துக்குள் நிறைவேறிவிடும். தமிழினத்தின் கலாசார வளர்ச்சிக்கும் அவர்களின் பண்பாட்டைப் பேணிக்காப்பதற்கும் சகல வசதிகளும் நிறைந்த ஒரு நூல் நிலையம் அவசியமென்பதை நான் இங்கு வற்புறுத்த வேண்டிய அவசியமேயில்லை. யாழ்ப்பாணத்தினதும், ஈழமணித்திருநாட்டினதும் எதிர்கால சந்ததியார் தமது கலாசார ஆராய்ச்சிகளை நடாத்துவதற்கு இந்நூல்நிலையம் பெரிதும் உதவும் என்பது எமது நம்பிக்கை. யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள மக்களின் அறிவுவளர்ச்சிக்கும் கலை ஆக்கத்துக்கும் இந் நூல்நிலையம் பேருதவியாக இருந்துவரும். யாழ்ப்பாணமக்களுக்கு எத்தகைய நூல்நிலையம் வேண்டுமென்பதை நேரில் வந்திருந்து தமது ஆலோசனைகளைப்பேராசிரியர் எஸ்.ரங்கநாதன் கூறியிருந்தார். இத்திட்டத்துக்கு நிதி உதவி புரிந்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.




### கலைக்களஞ்சியம்

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. எம். ஸ்ரீகாந்தா பேசும்போது இந் நூல் நிலையம் தமிழினத்தின் பண்பாட்டினைப் பேணிக் காக்கும் கலைக்களஞ்சியமாக அமைந்து நல்ல முறையிற் பணியாற்ற வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். அவர் தொடர்ந்து பேசியதாவது: சேர் பொன் இராமநாதன், சேர் பொன். அருணசலம், கலாயோகி ஆனந்தக் குமாரசுவாமி போன்ற பெரியார்களையும், சைவத்துக்கும் தமிழுக்கும் புத்துயிர் அளித்த ஆறுமுகநாவலரையும் தந்த யாழ்ப்பாணம் அதன் பெருமைக்கும் புகழுக்கும் ஏற்றதொரு நூல் நிலையத்தை இன்று பெற்றுள்ளது. அப் பெரியார்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி நாட்டுக்கும் மொழிக்கும் பணியாற்றும் சில அறிஞர்களை இவ் விழாவிற் காண்கின்றேன். அவர்கள் தம்மிடமுள்ள அரிய நூல்களையும் ஏடுகளையும் இந் நூல் நிலையத்துக்கு உதவுவார்களாயின் அவற்றால் பெருந் தொகையான வாசகர்கள்-முக்கியமாக ஆராய்ச்சியாளர்கள், நற்பயனடைவார்கள்.

### ஒரு பெருநாள்

முதலியார் திரு. ஸி. முத்துத்தம்பி பேசும் போது தமிழினத்துக்கு அன்றைய நாள் ஒரு

[14ஆம் பக்கம் பார்க்க]

---

# பூஜ்யம் தபால்

மிஸ்ரர் மாக்மில்லன்,
பிரதம மந்திரி,
லண்டன்.

வாழ்த்துக்கள்!

பிரிட்டிஷ் பொதுத் தேர்தலிலே தங்கள் கட்சி எதிர்பார்த்ததைவிட அதிகமான வெற்றிபெற்றதற்காகத் தங்களையும் தங்கள் கட்சியையும் பாராட்டுகிறேன்.

தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் தாங்கள் பேசுகையில், மழையைக் கொண்டுவருகிறேன் என்று வாக்களித்தீர்கள். பிரிட்டனில் பல மாதங்களாக மழை இல்லை. இதுவரை என்றுமே இல்லாதபடி கோடைகாலத்தில் மக்கள் தாங்கமுடியாதபடி வெய்யிலால்அவதிப்பட்டார்கள். மழை வருமா? என்று ஏங்கினார்கள். உங்கள் கட்சிக்கு வாக்களித்தால் மழையைத் தருவிப்பதாகக் கூறினீர்கள். மக்கள் உங்களுக்கு வாக்களித்தனர், மழையும் வந்தது.

வருணனை வரவழைக்க நீங்கள் என்ன செய்தீர்கள்? ஏதாவது மந்திரம் செய்தீர்களா? அல்லது தற்செயலாகப் பெய்ததா?

இது எப்படியாயினும், இயற்கைச் சக்தியும்கூடத் தங்களை இச்சமயம் ஆதரித்துள்ளதைப் பார்க்கிறேன். மகிழ்ச்சி. இனி உலகில் எங்காவது மழை இல்லாதிருந்தால், தங்களை வந்து மழை பெய்யச் செய்யுமாறு பலரும் கேட்கலாம். அந்தக் கோரிக்கைக்கு நீங்கள் மறுக்கமாட்டீர்களென்று நம்புகிறேன்.

இப்படிக்கு
**பூஜ்யம்**

குறிப்பு:

மொஸ்கோவில் ஏழு மாதங்களுக்கு முன் குருஷேவை முதல் முதலாகத்தரிசனம்செய்தீர்கள் அதன்பயனாகத்தான், ஐஸனோவரும் நேரில் சந்தித்துப் பேச முடிந்ததென்றும், மேற்கு—கிழக்கு கெடுபிடிச் சண்டை இதனால் தளர்ந்துவிட முடிந்ததாயும் தேர்தல் பிரசாரத்திலே பல கூட்டங்களில் கூறி, இனி "உச்சாணி" மகாநாடு சீக்கிரத்தில் கூடவும், உலக சமாதானம் பலப்படவும் வழி செய்துள்ளதாகக் கூறிவந்துள்ளதைப் பார்த்தேன். அடடா! மேற்கு வல்லரசுகளுக்குள் தாங்கள் முதல்முதலாகக் குருஷேவைத் தரிசித்தீர்கள். அது வீண்போகவில்லை. அந்தத் தரிசன பலன், தங்களுக்குத் தேர்தலில் எதிர்பாராத பெரிய வெற்றியை அளித்துவிட்டது! அந்தக் குருஷேவின் மகிமைதான் என்னே!

**பூஜ்யம்**

---

ஜெனரல் கசீம்
ஈராக் பிரதமர்
பாக்தாத் ஆஸ்பத்திரி

பிரதமரே!

தாங்கள் மோட்டாரில் செல்லுகையில் தங்களை யாரோ சுட்டுக் காயப்படுத்தி விட்ட செய்தியைக் கேட்டதும் திடுக்கிட்டேன். காலஞ்சென்ற எங்கள் பிரதமர் பண்டாரநாயக்காவின் ஞாபகம் எனக்கு வந்துவிட்டது.

நல்லவேளை! இப்போது நீங்கள் குணமடைந்து வருவதைக் கேட்டு மிகவும் மகிழ்ச்சி.

இந்த ஜனநாயக யுகத்திலே, நானும் பிரதமராக வேண்டுமென்று ஒரு சமயம் ஆசைப்பட்டேன். எல்லா அரசியல் வாதிகளுக்கும் அந்த ஆசையுண்டு. ஆனால் இலங்கையிலும் ஈராக்கிலும் நடந்துள்ள சம்பவங்களைக் கண்டதும், அந்த ஆசை என்னைப்போல், பலருக்கும் பறந்திருக்குமென்றே நம்புகிறேன். உயிருக்கே அல்லவா ஆபத்து வருகிறது!

தாங்கள் பிரதமரானது முதல் எவ்வளவு பக்கத்திலிருந்து எதிர்ப்பு, ஆபத்து! இந்த நித்திய கண்டத்திலிருந்து தாங்கள் தப்பி இருப்பது ஆண்டவன் புண்ணியம் தான்.

தாங்கள் சீக்கிரம் குணமடையப் பிரார்த்திக்கும்

**பூஜ்யம்**

குறிப்பு :

எங்கள் தேயிலையைத் தாங்கள் வாங்கிக் கொண்டு எங்களுக்குப் பேரீச்சம் பழத்தை தடையின்றி அனுப்பி வருவதற்காக நன்றி.

**பூஜ்யம்**

---

# பிரிட்டனில் மீண்டும் கொன்ஸவேட்டிவ் கட்சி ஆட்சி

## பாதுகாப்புச் சபையில் இலங்கைக்கு அங்கத்துவம்

பிரிட்டிஷ் பொதுத் தேர்தலில் 'கொன்சவேட்டிவ்' கட்சி மேலதிகமான வெற்றியடைந்திருக்கின்றது. சென்றமாதம் பார்லிமெண்ட் கலைக்கப்பட்டபோது இக் கட்சிக்கு இருந்த அதிகமான பெரும்பான்மை 62. இப்பொழுது இப் பெரும்பான்மை 100 ஆகியிருக்கிறது. கட்சிகளுக்குக் கிடைத்திருக்கும் ஸ்தானங்கள் பின்வருமாறு:

கொன்சவேட்டிவ் (பழைமை பேண்) கட்சி 365; தொழிற் கட்சி 258; லிபரல் (தாராண்மைக்) கட்சி 6; சுயேச்சை 1. (மொத்த ஸ்தானங்கள் 630) வாக்காளர்களுள் சுமார் 49 வீதத்தினர் 'கொன்சவேட்டிவ்' கட்சிக்கும், சுமார் 44 வீதத்தினர் தொழிற்கட்சிக்கும், சுமார் 6 வீதத்தினர் 'லிபரல்' கட்சிக்கும் வாக்களித்திருக்கிறார்கள் எனத் தெரிகிறது. போட்டியிட்ட 18 கொம்யூனிஸ்ட் கட்சி அபேட்சகர்களுள் 17 பேர் பிணைப் பணத்தை இழந்திருக்கின்றனர்.

# உலக நிலை

பிரதமர் ஹரல்ட் மக்மிலன் ஒரு புதிய மந்திரிசபையை அமைப்பதற்குத் தீர்மானித்திருப்பதாகச் சென்ற செவ்வாய்க் கிழமை ஒரு செய்தி வெளியாயிற்று. திரு. செல்வின் லொயிட் வெளிநாட்டு மந்திரியாகவும், பட்லர் உள்நாட்டு மந்திரியாகவும், ஹெத்கோற் அமறி நிதி மந்திரியாகவும் தொடர்ந்து பதவிவகிப்பார்கள் என எதிர்பார்க்கப்பட்டது.

பெருந் தலைவர்கள் மாநாட்டைக் கூட்டும் முயற்சியில் ஏற்கனவே பிரதமர் இறங்கிவிட்டார். இது குறித்து வெளிநாட்டு மந்திரி செல்வின் லொயிட்டுடன் ஆலோசனைகள் நடாத்தியிருக்கிறார். பொதுத் தேர்தலின் பின் சென்ற திங்கட்கிழமை மந்திரிசபையின் முதற் கூட்டம் நடைபெற்றது.

கொன்சவேட்டிவ் கட்சி இம்முறை வெற்றியடைந்திருப்பது ஒரு புதிய சாதனையாயிருக்கிறது. ஒரு அரசியற் கட்சி தொடர்ச்சியாக மூன்று முறை ஒவ்வொருமுறையும் கூடுதலான பெரும்பான்மையுடன் வெற்றியீட்டியிருப்பது பிரிட்டனில்

(15ஆம் பக்கம் பார்க்க)

---

# பம்பாய் இராச்சியம் பிரிக்கப்படும்

## இந்திய-சீன எல்லையிற் சீனப்படை

பாரதப் பிரதமர் நேருஜி சென்றவாரம் நிருபர் மாநாட்டில் பேசியபோது இருமொழி இராச்சியமாக இருக்கும் பம்பாய் இராச்சியம் தொடர்ந்து நிலைத்திருக்காது என்றும் அது பிரிக்கப்படும் என்றும் கூறியிருக்கிறார். குஜராத்தியும், மராத்தியும் இந்த இராச்சியத்தின் மொழிகளாகும். விதர்ப பிரிவின் பிரதிநிதிகளும் பம்பாய் இராச்சியத்தின் பிரதிநிதிகளும் இராச்சியத்தின் எதிர்காலத்தை ஆராய்ந்துகொண்டிருக்கின்றனர் என்றும் அவர்கள் ஏகமனதான முடிவுக்கு அல்லது ஏறக்குறைய ஏகமனதான முடிவுக்கு வருவார்கள் என்று தாம் எதிர்பார்ப்பதாகவும் பிரதமர் நேரு கூறினார். இவர்களின் முடிவுக்குப் பெரும்பான்மையோரின் ஆதரவு இருக்க வேண்டும் என்றும் இம்முடிவுகாலதாமதமின்றித்தீர்மானிக்கப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். இம்முடிவு விரைவில் செய்யப்பட்டால் ஜனவரி மாதத்தில் நடைபெறவிருக்கும் காங்கிரஸ் பொது மகா நாடு பரிசீலனை செய்யும் என்றும் அவர் அபிப்பிராயம் தெரிவித்தார். அடுத்த சில மாதங்களில் பம்பாய் இராச்சியத்தின் புதிய அரசியல் அமைப்புபற்றித்திடமானமுடிவு வெளிவரும் என எதிர்பார்க்கலாம்.

# இந்தியா

### எல்லை விவகாரம்

இப்பொழுது சீனம் கைப்பற்றியிருக்கும் இந்தியாவுக்குரிய எல்லைப் பிராந்தியங்களை மீட்க இந்தியா இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள மாட்டாது என்றும், சீனப் படைகள் தொடர்ந்து முன்னேறுமானால் தடுப்பதற்கு இந்தியா இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளும் எனவும் பிரதமர் நேரு தெரிவித்துள்ளார். அரசியல் முறையில் இவ்விவகாரம் இரு தரப்பினராலும் ஆராயப்பட்டு வரும்போது பலாத்காரத்தைப் பிரயோகிப்பதற்குச் சந்தர்ப்பம் ஏற்படாதென அவர் நம்புகின்றார். இவ்விவகாரத்தைத் தீர்ப்பதற்குப் போரில் குதிப்பது தவறாகும் எனப் பிரதமர் நேரு விளக்கியிருப்பதுடன் இந்தியா தனது நடுநிலைமையான

(15ஆம் பக்கம் பார்க்க)

# ஈழநாடு

யாழ்ப்பாணம், விகாரி ஆண்டு புரட்டாசி மீ 31 உ (17-10-59)

EELA NADU: National Tamil weekly Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna.
*Colombo Office:* 142, New Bullers Road, Colombo 4.

**இலங்கை அவசர காலநிலை பற்றி கடுமையான தணிக்கை இருப்பதால், அது சம்பந்தமான தலையங்கம் வெளியாகவில்லை**

## பிரிட்டிஷ் தேர்தல் முடிவுகள்

பிரிட்டிஷ் தேர்தல் முடிவுகள் ஆபிரிக்காவிலுள்ள வெள்ளையருக்கு மகிழ்ச்சியளித்துள்ளதாம். ஆனல் ஆபிரிக்க தேசிய வட்டாரங்களுக்கும் கிரேக்க ஸைப்பிரஸ் மக்களுக்கும் ஏமாற்றமளித்துள்ளதாக ராய்ட்டர் செய்தி கூறுகின்றது.

காரணமென்ன? பிரிட்டிஷ் தொழிற்கட்சியினர், அதிகாரத்துக்கு வந்தபோதே இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பர்மா முதலிய நாடுகளுக்குச் சுதந்திரம்கிடைத்தது. கொன்சவேடிவ் கட்சியினர், ஆசிய, ஆபிரிக்க மக்களுக்கு அரசியல் சுதந்திரமளிப்பதை அவ்வளவாக ஆதரிக்க மாட்டார்களென்றும், வெள்ளையர் ஆதிக்கம் நீடித்திருக்கவே செய்வரென்றும் பொதுவாக ஓர் எண்ணம் நிலவுகின்றது. மிஸ்டர் மாக்மிலன் தலைமையில், மூன்றும் முறையாக ஆட்சிப் பீடத்துக்கு வந்துள்ள பிரிட்டிஷ் கொன்சவேடிவ் கட்சியினர் இனி என்ன செய்யப் போகிறார்கள்? என்பதே கேள்வி.

உலக சமாதானத்தைப் பாதுகாத்துப் பலப்படுத்தத் தாம் எல்லா முயற்சியும் செய்யப்போவதாகக் கூறுகின்றார் மாக்மிலன். ருஷியாவுடன் நடத்தும் "உச்சாணிப் பேச்சு"களில் கலந்துகொள்ளப்போவதாகக் கூறுகின்றார். இது வரவேற்கத்தக்கதே.

ஆனல் உலக சமாதானத்தைக் காக்கமுன் தம் வீட்டுச் சமாதானத்தைப் பாதுகாக்க வேண்டியது பிரிட்டிஷ் பிரதமரின் முதல் கடமையாகும். பிரிட்டிஷ் ஆதிக்கத்திலுள்ள ஆபிரிக்க குடியேற்ற நாட்டுப் பகுதிகளில் இன்று அமைதி இல்லை. அங்கு மக்கள், வெள்ளைவர்ணசிரம ஆதிக்கத்திலிருந்து அரசியல் விடுதலை பெறத் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஜனநாயகம் பேசும் பிரிட்டன், அவர்களுக்கு ஜனநாயக உரிமைகளை அளிக்குமா? அந்த உரிமைகளை அளிக்க மறுக்கும்வரை, உலக சமாதானத்துக்கு ஆபத்துக் குறையாது.

பிரிட்டனில் பொதுவாக மக்களிடையே பொருளாதார சுபிட்சம் நிலவுவதாலும், ஒரு சில இடங்களைத் தவிர வேறு இடங்களில் வேலையில்லாக் கஷ்டம் இல்லாததாலுமே, கொன்சவேடிவ் கட்சிக்கு தேர்தலில் வெற்றி கிடைத்ததாகக் காரணம் சொல்லப்படுகின்றது. ஆனல் இதே சமயத்தில் பிரிட்டிஷ் ஆதிக்கத்திலுள்ள பகுதிகளிலே மக்களிடை இதே சுபிட்சம் நிலவுகின்றதா? இதே சமூக சேவைகள் உள்ளனவா? வேலையில்லாக் கஷ்டம் குறைந்துள்ளதா? என்பதை, பிரிட்டிஷ் பிரதமர் மாக்மிலன் சற்றே யோசித்துப் பார்க்க வேண்டும். பிரிட்டிஷ் ஆதிக்கத்திலுள்ள எல்லா மக்களுக்கும் ஜனநாயக வாக்கு உரிமை அளிக்கப்பட்டிருந்தால், தம்மையும் தமது கட்சியையும் அவர்கள் தெரிவு செய்திருப்பார்களா? என்பதை மிஸ்டர் மாக்மிலன் யோசித்தால், அவர் தமதுமலைபோன்ற பொறுப்பை உணரலாம்.

இதுபற்றி நாம் இங்கு வற்புறுத்தக் காரணமுண்டு. இலங்கை, இந்தியா முதலிய நாடுகள் பிரிட்டிஷ் காமன்வெல்த்திலேயேயுள்ளன. இந்தப் பெரிய காமன்வெல்த் குடும்பத்தில் சேர்ந்திருப்பதால், பரஸ்பரம் பெருநன்மை ஏற்படுமென்றும், உலக சமாதானம் பலப்படுமென்றும் நாம் நம்புவதாலேயே இதில் சேர்ந்திருக்கின்றோம். ஒரு சின்னக் குடும்பத்திலேயே பல சச்சரவுகள் இருக்கையில், பல கோடி மக்களடங்கிய பெரிய காமன்வெல்த் குடும்பத்தில் பல பல பிரச்சினைகள் இருப்பதில் வியப்பில்லை. என்றாலும் இக்குடும்பத்தில் சேர்ந்த ஒவ்வொருவரும் சரிநிகர் சமானமாக வாழவும், பரஸ்பர நன்மைக்காக ஒத்துழைக்கவும் முடிந்தால் தான், இக்குடும்பம் தழைத்தோங்கி வளரமுடியும். அதற்கான வகையில், பிரிட்டனின் புதிய பிரதமர் மாக்மிலன் எவ்வளவு தூரம் பணி செய்ய முடிகிறதோ, அதைப் பொறுத்தே அவரது வெற்றியுமிருக்கும்.

## இந்தியாவில் சமஷ்டி அரசாங்கம்

இந்தியாவிலே இப்போது ஒருவித சமஷ்டி அரசாங்க முறை இருந்துவருகிறது எனினும், தலைமை அரசாங்கத்தின் கையில் விசேஷ அதிகாரங்கள் குவிந்துவருவதாயும், சென்ற பத்து ஆண்டு அனுபவத்தில், இவ்விதம் தலைமை அரசாங்கம் வரவர அதிகமான அதிகாரங்களைப் பெற்றுவருவது, மக்கள், அரசாங்கம் ஆகிய இருசார்பினரின் நன்மைக்குமே பாதகமாகுமென்றும், தலைமை அரசாங்க மந்திரிகளுள் ஒருவரான மனுபாய் ஷா, இந்திய அரசியல் முறை பற்றி ஒரு கூட்டத்தில் பேசுகையிற் குறிப்பிட்டார்.

பல ராஜ்யங்களாகப் பிரிக்கப்பட்ட இந்தியாவில், ஒவ்வொரு ராஜ்யத்திலும் சட்ட சபைகளுள்ளன. தங்களது அதிகார எல்லைக்குட்பட்ட விஷயங்களில் சட்டதிட்டங்களை ஒவ்வொரு ராஜ்யத்தாரும் செய்துகொள்ள முடிகிறது. ஆங்காங்குள்ள மொழிகளே, ராஜ்ய மொழிகளாகி வருகின்றன. இவ்வித சமஷ்டி ஏற்பாடு இருந்தும்கூட, டில்லி அரசாங்கத்திடம் அதிகமான அதிகாரங்கள் குவிந்துள்ளதுடன், பண உதவிகளுக்கும் டில்லியையே எதிர்நோக்கவேண்டியதாக உள்ளது. அதனல் பல ராஜ்யங்களிலும் அதிருப்தி அதிகரித்துவருவதுடன், மந்திரி ஷா கூறுவதுபோல் மக்களுக்கும் அரசாங்கத்துக்குமே இம்முறை தீங்காக இருக்கின்றது. டில்லி அரசாங்கத்துக்கும், பல மாகாண ராஜ்யங்களுக்கும் உறவு அவ்வளவு திருப்தியாக இல்லை. இதை உணர்ந்து இதற்குப் பரிகாரமாக, கிராமங்களில் பஞ்சாயத்து ராஜ்யங்களை ஏற்படுத்தவும், ஆங்காங்கேயுள்ள மக்களுக்கு அதிகமான நிர்வாகப் பொறுப்பை அளிக்கவும் முயற்சிகள் நடக்கின்றன. சமீபத்தில் வடக்கே ராஜஸ்தானிலும், தெற்கே ஆந்திரத்திலும், கிராமப்பஞ்சாயத்து ராஜ்யங்களை ஏற்படுத்த, கிராமராஜ்யத்தை கிராமமக்களின் கைகளிலேயே ஒப்புவிக்க ஏற்பாடுகள் நடந்துள்ளன. நேருஜி இவ்விழாக்களில் கலந்து, கிராமமக்களுக்கு அதிக நிர்வாகப்பொறுப்பு அளிக்கவேண்டிய அவசியத்தை வற்புறுத்தியுள்ளார்.

ஆனல் ஒற்றை ஆட்சிமுறையுள்ள இலங்கையிலே, அதிகாரம் எல்லாம் தலைமை ஆட்சியின் கைகளில்தான் உள்ளன. ஒரு சின்னவிஷயத்துக்கும் தலைமை அரசாங்கத்தையே எதிர்பார்க்கவேண்டியநிலையுள்ளது. தலைமை அரசாங்கம் எல்லாவற்றையும் ஏககாலத்தில் கவனித்து நடத்துவதென்பது முடியாத காரியம். இதனல் பொதுமக்களுக்கும் அரசாங்கத்துக்குமே மந்திரி ஷா கூறுவதுபோல் பாதகமேற்பட்டு, அபிவிருத்தி வேலைகள் தடைப்படுகின்றன. இதை உணர்ந்தே பிரதேசசபைகளை ஏற்படுத்தி, அவற்றிற்குச் சுயாட்சிப் பொறுப்புக்களை அதிகமாக அளிக்கவேண்டுமென்று, காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்காவும் வற்புறுத்தி வந்தார். துரதிருஷ்டவசமாகப் பல காரணங்களால் அவரது யோசனை நடைமுறைக்குக் கொண்டுவர இயலாது போயிற்று.

இலங்கையில் ஜனநாயகம் தழைத்தோங்கி, மக்களுக்கு நன்மையான முறையில் இயங்க வேண்டுமாயின், ஆங்காங்கேயுள்ள மக்கள், தங்கள் தங்கள் பகுதி நிர்வாகத்தை நடாத்திக் கொள்ளப் போதிய அதிகாரமும், பணவசதியும், சுயாட்சி உரிமையும் பெற்றிருக்க வேண்டும். அரசியல் சீர்திருத்தக்குழு இவ்விஷயமாகத் தக்க யோசனை கூறுமென்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனல் இடையே பல எதிர்பாராத துரதிருஷ்ட நிகழ்ச்சிகள் ஏற்பட்டுவிட்டன. அவசரநிலை முடிந்து, எவ்வளவு சீக்கிரத்தில் மண்டல சுயாட்சிக்கு வழிவகைகள் செய்யப்படுகின்றதோ, அவ்வளவும், இலங்கை மக்களின் நல்வாழ்வு மேம்படவும் தலைமை அரசாங்கத்தின் மண்டை இடி குறையவும் உதவும்.

## சீர் கேடான பஸ் சேவை
### பிரயாணிகள் படும் இன்னல்
### வடக்கு, கிழக்குப் பகுதியைக் கவனிப்பாரில்லையா ?

யாழ்ப்பாண மக்கள் என்ன பாவம் செய்தார்களோ! நெருப்பு வெயில் அவர்களை வறுத்து எடுக்கின்றது. மழையை எதிர்பார்த்து வயலில் தூவிய நெல் மணிகள் அனலிற் கிடந்து அவிகின்றன. போதாக் குறைக்குத் தேச உடைமையாக்கப் பெற்ற பஸ் சேவை அவர்களைக் கடுமையான சோதனைக்குள்ளாக்கி வருகின்றது. சிங்கள 'ஶ்ரீ' பொறித்த பஸ்கள் வேண்டாமென்று சண்டப் பிரசண்டம் செய்தீர்களே, அதன் பலாபலன்களை நீங்களே அனுபவியுங்கள் என்று சொல்வது போல் இருக்கின்றது அரசாங்கத்தின் இச்செயல்.

தெருவிலே கடகடத்துச்செல்லும் பஸ் வண்டிகள் அத்துமீறிய தொகையான பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு முக்கி முனகுவதும், ஓட முடியாத நிலையில் அவை தெருவுக்குத் தெரு நிற்பதும் இன்று இங்கு சாதாரண காட்சியாகிவிட்டது.

**பரிதாப நிலை**

வடக்கு — கிழக்கு மாகாணங்களிலேதான் இந்தப் பரிதாப நிலையைப் பார்க்க முடிகின்றது. ஆனல் கொழும்பு, கண்டி போன்ற பிற இடங்களில் பஸ் சேவை திருப்திகரமாக இருப்பதுடன் புதிது புதிதாக இறக்கப்படும் பஸ்கள் அங்கு பவனி வந்துகொண்டிருப்பதாகவும் வெளியூரிலிருந்து வருபவர்கள் சொல்லுகின்றனர். அங்கெல்லாம் நல்ல நிலையிலுள்ள பஸ்கள் குறித்த நேரத்துக்கு தமது சேவைகளை நிறைவேற்றி மக்களை 'இந்நாட்டு மன்னர்கள் நாம்' என்று தலை நிமிர்ந்து நிற்கச் செய்கிறது. ஆனல் வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு ஏனே இந்தக் கதி?

**அந்தக் காலத்தில்**

கம்பனிகளின் பொறுப்பிலே, பஸ் வண்டிகள் இருந்த காலத்தில் அவை பிரயாணிகளை ஓரளவு வசதியுடன் நேரத்துக்கு நேரம் ஏற்றிச் சென்றன. ஆனல் இன்றோ நிலைமை தலைகீழாகி விட்டது.

விடிந்ததும் விடியாததுமாக தேநீரை அருந்தி விட்டு பட்டினத்தை நாடிச் செல்லலாமென வீதியில் கால் கடுக்க நிற்கும் உத்தியோகஸ்தர்கள் பஸ் நேரத்திற்குக் கிடையாத காரணத்தால் மேலதிகாரிகளின் கண்டனத்துக் குள்ளாகி வருகின்றனர். கல்லூரி மாணவ மாணவிகளும் இவ்விதம் தாமதமாகுவதால் ஆசிரியர்களின் கண்டிப்புக் குள்ளாகி வருகின்றனர். தொழிலாளர்களின் கதையே வேறு. அவர்கள் பல சந்தர்ப்பங்களில் தொழில் நிலையங்களுக்குப் போகமுடியாமல் வீடு திரும்புவது முண்டு.

**பழகிப்போன சம்பவம்**

யாழ்ப்பாணப் பகுதியைப் பொறுத்தவரை இவை யாவும் பழகிப்போன சம்பவமாகிப் போய்விட்டன. குறித்த ஓர் இடத்தில் காலை ஏழுமணிக்கு வந்து சேரும் பஸ்ஸை எதிர்பார்த்து வீதியில் ஒருவர் காத்திருக்கின்றார். பஸ் இன்னும் வந்தபாடில்லை. ஏழு மணிக்கு

(9ஆம் பக்கம் பார்க்க)

## தணிக்கைச் சண்டை

"கொலைகாரனைக் கண்டு பிடிக்க முயற்சி", "சந்தேகத்தின்மீது பலர் கைதுசெய்யப்பட்டனர்" என்று கொட்டை எழுத்துக்களில், சென்ற ஞாயிறன்று "சண்டே டைம்ஸ்" பத்திரிகையில் முதல் பக்கத்திலே, பெரிய தலைப்புப் போடப்பட்ட செய்தியைக் கண்டேன். பக்கத்திலே "இந்த வாரத்தில் மந்திரிசபையில் மாறுதல்" என்று மற்றோர் பெரிய தலைப்பும் இருந்தது.

தலைப்புக்களைக் கண்டதும் இதெல்லாம் இலங்கையில் தானே? என்று நினைத்து, ஆவலுடன் மேலே படித்தேன். முதல் செய்தி, ஈராக் பிரதமர் காஸிம் சுடப்பட்டதைப்பற்றியது. மந்திரிசபையைப்பற்றிய இரண்டாவது செய்தி, பிரிட்டனைப்பற்றியது! இதை அறிந்ததும், "சப்" என்று ஏமாற்றமாகப் போயிற்று!

* * *

சென்ற பல நாட்களாக இலங்கைத் தினசரிப் பத்திரிகைகளில் அரசாங்கத்தைப் பற்றி ஒரு செய்தியும் கிடையாது.

காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்காவின் கொலை விஷயமாகவோ, பௌத்த பிக்குகளைப்பற்றியோ அல்லது மந்திரிசபைத் தீர்மானங்களைக் குறித்தோ எவ்விதமான மாறான கருத்துக்களையும் வெளியிடக்கூடாதென்று, கடுமையான தணிக்கை உத்தரவுகளை அவசரச்சட்டப்படி பிறப்பித்துள்ளனர். இதை ஆட்சேபித்து, அரசாங்கத்தைப்பற்றிய எந்தச் செய்தியையும் பொதுவாகத் தினசரிப் பத்திரிகைகள் பிரசுரிக்காமல் பகிஷ்கரிக்கின்றன. இந்த தணிக்கைச் சண்டையின் பயனாக, பத்திரிகைகளில் ருசிகரமான செய்திகள் இல்லை என்றும் பல பல வதந்திகளும் பரவுவதாகவும் ஒரு பிரமுகர் தெரிவித்தார்.

* * *

வீண் வதந்திகளை நம்பவேண்டாமென்று, இலங்கைவானொலி நமக்கு எச்சரிக்கை செய்கின்றது. பத்திரிகைகள் அரசாங்கச் செய்திகளைப் பிரசுரிக்காமல் பகிஷ்கரித்துள்ளதால், வானொலிச் செய்திகளைக் கேட்கும்படியும், பத்திரிகைகள் மீது குற்றம் சாட்டியும், வானொலி அரசியல் குறிப்புக்களில் பல முறையும் ஒலிபரப்புகின்றார்கள்.

மக்களிடையே உணர்ச்சியும் ஆத்திரமும் அதிகரிக்கும் இந்தச் சமயங்களில், அமைதியைப் பாதுகாக்க ஓரளவு விசேஷ நடவடிக்கைகள் அவசியமே. ஆனல், பத்திரிகைகளுக்கும், அரசாங்கத்துக்கும் இப்போதுள்ளதுபோல் 'கெடுபிடிச் சண்டை' நடப்பது யாருக்கும் நல்லதல்ல.

இருசார்பினரும், பொது நன்மையைக் கருதி, கலந்துபேசி இந்தத் தணிக்கைச் சண்டையைச் சீக்கிரத்தில் ஒரு முடிவுக்குக் கொண்டுவரவேண்டியது அவசியமாகும். இதை எழுதுகையில், என் பேனவே எவ்வளவு தூரம் தயங்கித் தயங்கி எழுதியது தெரியுமா?

—ஐயாறன்

## வவனியாவில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் போட்டியிடுமா?

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

என்றுலும் மேற்குறித்த மூன்று தொகுதிகளுக்கும் இடைத்தேர்தல்கள் நடக்கும் என்று எதிர்பார்த்து, பலர் தேர்தல் சம்பந்தமான ஏற்பாடுகளில் ஈடுபட்டுவிட்டார்கள்.


வவனியாத்தொகுதிக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் அரசியல் பகுதியான இ. ஐ. காங்கிரஸ் ஓர் அபேட்சகரை நிறுத்த உத்தேசித்துள்ளதாகத் தெரிகிறது. முன்ஞள் அலுத்துவாரை பிரதிநிதியாக இருந்தவரும், எழுத்தாளரும், அரசியல் அனுபவமுள்ளவருமான திரு. டி. ராமாஞுஜத்தை இத்தொகுதிக்கு காங்கிரஸ் அபேட்சகராக நிறுத்த யோசனை இருந்து வருவதாக அறிகிறேன். இப்போது பார்லிமெண்டில் மலை நாட்டுத் தமிழருக்கு ஒரு பிரதிநிதியுமில்லை. அவர்களில் பலர் வவனியாப் பகுதியில் குடியேறியுள்ளதாலும், மலை நாட்டுத் தமிழரின் நலவுரிமைகளைப் பாதுகாக்க இ. தொ. கா. வவனியா தேர்தலில் ஈடுபட முன் வந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

வவனியாவில் தமிழரசுக் கட்சிக் குழுவினர் இம்மாதம் 24,25ஆம் திகதிகளில் கூடி இது பற்றி முடிவு செய்வரென்று தெரிகிறது.

இதற்கிடையே லங்கா சமசமாஜக் கட்சியின் அபேட்சகராக புரக்டர் சிற்றம்பலம் போட்டியிடுவார் எனத் தெரிகிறது.

கோப்பாய்த்தொகுதியில்திருமதி வன்னியசிங்கத்தை, தமிழரசுக் கட்சி தமது அபேட்சகராக நியமிக்கத் தீர்மானித்துள்ளது. தேர்தல் கட்டுப்பணம் செலுத்தவும் மக்களிடை பணம் வசூலிக்கப்படுகிறதாம். இத்தொகுதிக்குப் பலர் போட்டியிடுவதாக அறிவித்துள்ளனர்.

அத்தனகல்ல தொகுதிக்கு திருமதி பண்டாரநாயக்காவை அபேட்சகராக நிற்கும்படி மகிலா சமிதி கேட்டுக் கொண்டிருக்கிறதாம். ஆனல் திருமதி பண்டாரநாயக்கா இது பற்றி இன்னும் எவ்வித கருத்தும் இதுவரை வெளியிடவில்லை.



நவராத்திரி விழா சென்ற வாரம் இந்துக்களின் இல்லங்களிலும் பள்ளிக்கூடங்களிலும் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. யாழ்ப்பாணம் வைத்தீசுவர வித்தியாலய மாணவிகள் அங்கு நடைபெற்ற நவராத்திரி விழாவின்போது அரங்கேற்றிய 'சண்முகக் கும்மி' இசை நாடகம் (தீராத விளையாட்டுப் பிள்ளை) ஆகிய இசை நிகழ்ச்சிகளில் இரு காட்சிகள்.



# லாண்ட்மாஸ்டர் வியாபாரிகள் தேவை

உலகெங்கும் பரவியுள்ள லாண்ட்மாஸ்டர் விற்பனையாளரின் பட்டியலில் சேருங்கள்.


உழுதல்


தரையை சமப்படுத்துதல்


வரம்பு கட்டுதல் & இடையிடையே பயிர்செய்தல்



புல் வெட்டுதல்


சாமான்கள் ஏற்றிச்செல்லுதல்

உலகப் பிரசித்திபெற்று விளங்கும் "லாண்ட்மாஸ்டர் 150" டிரர்க்டர் இயந்திரங்களை விற்பனவு செய்வதற்கு சில பகுதிகளில் இதுவரையிலும் நபர்கள் நியமிக்கப்படாததால் மேலும் விற்பனையாளர் தேவை.

Landmaster 150
MADE IN ENGLAND

லான்ட்மாஸ்டர் 150
இங்கிலாந்தில் செய்யப்பட்டது.



நியமனம் பெற வரும்புவோர்:

(A) டிராக்டர் இயந்திரங்களையும், உபகரணங்களையும் போதிய அளவில் கையிருப்பாக வைத்திருக்கவேண்டும்.

(B) இயந்திரங்கள் இருக்குமிடத்திற் சென்று உடனடியான சேர்விஸ், பழுது சரிப்படுத்தல் ஆகியவற்றை செய்யும் வசதிகள் இருக்கவேண்டும்.

(C) தங்கள் அங்கத்தவர்களை ரத்மலானையில் இருக்கும் லாண்ட்மாஸ்டர் தொழிற்சாலைக்கு அனுப்பி பயிற்சி பெறச் செய்ய வேண்டும்.

பதில் அனுப்பும் போது உங்களிடம் தற்போது சேர்விஸ் செய்யவுள்ள வசதிகள், விற்பனவு செய்யும் ஏற்பாடுகள், தற்போது நீங்கள் வேறு எந்த தயாரிப்பாளரின் விநியோகஸ்தர்களாக் கடமையாற்றுகிறீர்கள் ஆகிய விபரங்களை அறிவிக்கவும்.

## பிரவுண் அன் கொம்பெனி லிமிட்டெட்,
விவசாயப் பகுதி, அந்திடிய, ரத்மலானை.


## சீர்கேடான பஸ் சேவை

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

வரவேண்டிய பஸ் இரண்டாவது பஸ் வரவேண்டிய நேரத்திற்கு பிரயாணிகளை வாசல் வரை நிறைத்துக் கொண்டு வருகின்றது! அவர் வண்டியை மறிக்கின்றுர். வண்டி நின்ருல் அது அவர் செய்த பாக்கியம் தான். இல்லையேல் காலை ஆகாரமின்றி சோர்வடைவதுடன், காரியாலயத்துக்கும் நேரத்துக்குச் செல்லவியலாது வீதியை வெறித்துப் பார்க்க வேண்டியதுதான். சில வேளைகளில் பஸ் கிடைக்குமாயின் அவர் 109 ஆவது பிரயாணியாகஉள்ளே நுழைவார். உடைகள் அப்படியே கசங்கிவிடும். ஐம்பத்தொன்பது பிரயாணிகளுக்கு இடம் வகுக்கப் பட்டிருந்தபோதிலும் நூற்றெண்பது பிரயாணிகளை ஏற்றிக் கொண்டு பஸ் பெருமானுர் ஆடி அசைந்து செல்லும் காட்சி அலங்காரக் காட்சிதான்!

இச் சீர்கேடான நிலையை இ. போ. ச. அதிகாரிகளின் கவனத்திற்கு அவ்வப்போது எடுத்துக் காட்டிய போதிலும் அவர்கள் அதற்கேற்ற நடவடிக்கைகளை எடுத்ததாகத் தெரியவில்லை. அவர்கள் தாம் மனம் வைத்தாலும், லொட லொட வண்டிகளை எத்தனை நாளைக்குத்தான் திருத்தி ஓட முடியும்? ஒரு வியாதிக்கு மருந்துகொடுக்க வேறு புதிய வியாதிகள் தோன்றுவது போல இ. போ. ச. வண்டிகள் எல்லோருக்கும் மண்டையிடியைக் கொடுத்துக் கொண்டேயிருக்கின்றன. வண்டிகள் சீரடைந்தால் நிர்வாகம் சீரடைவதுடன், பிரயாணிகளின் இன்னல்களையும் நீக்கமுடியும்.

## ஒரு கலைக் கோவில்

[7ஆம் பக்கத் தொடர்ச்சி]

பெருநாள் எனக் குறிப்பிட்டு, தமிழ் மக்களின் எதிர்காலச் சிறப்புக்கு இந் நூல் நிலையம் பெரிதும் உதவுமெனத் தாம் நம்புவதாகத் தெரிவித்தார். அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் இந் நூல் நிலையம் புத்தகங்கள் நிறைந்த ஒரு கூடமாக அமைவதுடன், முத்தமிழை வளர்க்கும் கலைக் கோயிலாகவும் மிளிரவேண்டுமெனவும் தாம் ஆசைப்படுவதாகத் தெரிவித்தார்.

இவ்விழாவுக்கு ஆசிய பவுன்டேஷன் ஸ்தாபனத்தினதும் ருஷிய தூதுவராலயத்தினதும் பிரதிநிதிகளும் வேறும் பல பிரமுகர்களும் சமுகமளித்திருந்தனர். பொதுக் கூட்டத்துக்குப் பின்னர் மேயர் திரு. துரையப்பா, காலஞ்சென்ற திரு. கே. எம். செல்லப்பாவின் உருவப்படத்தைத் திறந்து வைத்தார். யாழ்ப்பாணம் பொது நூல் நிலையக் குழுவின் செயலாளர் திரு. கே. வி. மயில்வாகனம் அனைவருக்கும் நன்றி கூறினுர்.

இக் கலைக் கோயிலைத் தரிசித்துவிட்டு யாழ்ப்பாணப் பட்டினத்தின் வீதி ஒன்றினல் திரும்பி வந்தபோது இதன் வாயிலில் ஏற்றி வைத்த மின்சார தீபாலங்காரம் பண்டைக் காலத் தமிழ் மன்னர்கள் நிறுவிய கோயில்களின் சிறப்பை மீண்டும் நினைவூட்டின. மறுகணம் எனது கரங்கள் அந்தத் திக்கை நோக்கிக் குவிந்தன.

## பிரதமர் கஸீம் மீது இரண்டாவது கொலை முயற்சி

ஈராக் பிரதமர் கஸீமின் செல்வாக்கு கொலை முயற்சிக்குப் பின்னர் மேலோங்கியிருக்கின்றது. ஆஸ்பத்திரியிலும் அவரைக் கொலைசெய்யக் கையாண்ட முயற்சி தோல்வியடைந்தது. தேசிய வாதிகளுக்கும் கொம்யூனிஸ்டுகளுக்கும் சிக்காமல் தனித்து நின்றஇவரை இனத்தேசிய வாதிகளே கொலை செய்ய முயற்சித்திருக்கக்கூடுமாம். ருஷிய டக்டர்மார் இவருக்கு இப்போது சிகிச்சை செய்து வருகின்றனர். கொம்யூனிஸ்ட் நாடுகளை ஆதரிக்கும்படி கொம்யூனிஸ்டுகள் பிரதமரை வற்புறுத்தக்கூடுமா?

* * *

ஐக்கிய அரபுக் குடியரசு ஈராக் - சீரிய எல்லையில் இராணுவத்தைக் குவித்துள்ளது என்று பாக்தாத் ரேடியோ செய்தி ஒன்று கூறுகின்றது.

**இரத்தினக் கம்பளம்**

**போதிமர நிழலில்**

இடமின்மையால் வெளி வரவில்லை

மாதர் பகுதி

**கருவளர்ச்சியைப் பற்றித் தமது தங்கைக்கு முன்னர் விளக்கிய டக்டர் இப்போது நஞ்சும் நஞ்சுக் கொடியும், சூலுறையும் பனி நீரும் என்பவற்றை இவ்வாரம் விளக்குகின்ருர். இந்த நான்காவது கடிதத்தின் முதற் பகுதி சென்ற இதழில் வெளியாயிற்று.**

# நஞ்சுக் கொடியும் குழந்தையும்

— 'நந்தி' —

சரியான மாதத்தில், அதாவது நாற்பது கிழமைகளின் முடிவில் பிறக்கும் குழந்தை பூரண வளர்ச்சியடைந்திருக்கும். பெரும்பாலும் கருப்பையில் நிறைமாதக் குழந்தை தலை கீழாகத்தான் இருக்கும். இத்தகைய குழந்தையின் அளவு வருமாறு:—

**நீளம்** — 20 அங்குலம்.
**நிறை** — 6-7 இருத்தல்.
**தலையின் சுற்றளவு** — 13 அங்குலம்.

## நஞ்சும் நஞ்சுக் கொடியும்

ஆரம்பத்தில் கருவின் அணு மூன்று பிரிவுகளாகப் பிரிகின்றதெனவும் அதில் ஒருபிரிவுதான் நஞ்சாக வருகின்றதெனவும் நாம் அறிந்தோம். நஞ்சை ஆங்கிலத்தில், பிளசன்ரா எனச் சொல்வார்கள். அது தாமரை இலையைப்போல் வட்டமாக இருக்கும். அதன் விட்டம் சுமார் எட்டு அங்குலம். தாமரை இலையின் நடுவில் தண்டு காணப்படுவதுபோலவே நஞ்சின் மத்தியிலிருந்து நஞ்சுக்கொடி ஆரம்பமாகி குழந்தையின் தொப்புளில் முடிகிறது. நஞ்சு கருப்பையுடன் நன்ருக இணைந்திருக்கும். இந்த இணைப்பினல் அது தாயின் இரத்தத்திலுள்ள சத்துப் பொருள்களை உறிஞ்சி நஞ்சுக் கொடி மூலம் குழந்தையின் இரத்தத்துக்கு அனுப்புகிறது. அதேபோல் குழந்தையின் இரத்தத்திலுள்ள கழிவுப் பொருள்கள் நஞ்சுக்கொடி வழியே போய் நஞ்சுமூலமாகத் தாயின் இரத்தத்தில் கலக்கின்றன.

தாயின் இரத்தோட்டமும் சேயின் இரத்தோட்டமும் புறம்பாகத்தான் வேலை செய்கின்றன. குழந்தைக்கு வேண்டிய பொருள்களை அதற்கு நஞ்சுக்கொடிமூலம் போக அனுமதித்தும், வேண்டாத பொருள்களை நிறுத்தியும் மிக நுட்பமான வேலையை நஞ்சு செய்கின்றது!

நஞ்சுக்கொடி நஞ்சின் மத்தியில் ஆரம்பமாகிக் குழந்தையின் தொப்புளில் முடிகின்றது என்று பார்த்தோம். அது ஏறத்தாழ இருபது அங்குல நீளமாக இருக்கும். நஞ்சுக் கொடி மிகவும் குட்டையாகவோ அல்லது நீளமாகவோ இருப்பதைச் சில பிரசவங்களின் போது காண்கிருேம். நஞ்சுக்கொடி ஐம்பது அங்குல நீளமாகக்கூட இருந்திருக்கிறது! இப்படி நீளம் அதிகமானல் இக் கொடி குழந்தையை கருப்பையில் அங்குமிங்குமாகச் சுற்றிக்கொள்ளும். பிறக்கும்போது நஞ்சுக்கொடி குழந்தையின் கழுத்தைச் சுற்றியிருந்தால் குழந்தையை 'மாலை அணிந்து பிறந்த பிள்ளை' என்று சொல்லுவார்கள். நஞ்சுக் கொடி குழந்தையைச் சுற்றியிருந்தால் பிரசவம் வில்லங்கமாகலாம்.

## சூலுறையும் பனிநீரும்

சூலுறை மெல்லிய சவ்வாலானது. அது நஞ்சின் விளிம்பிலிருந்து வளர்ந்து குழந்தையை நன்ருக மூடிக்கொள்ளும். சூலுறையில் ஏறத்தாழ நாற்பது அவுன்சு அளவு நீர் உண்டு. இது பனிநீர் என்று கூறப்படும். பனி நீர் கருப்பையிலே குழந்தையை எப்போதும் சமமான வெப்ப நிலையில் வைத்திருக்கிறது. அத்துடன் தாயின் அசைவுகள் குழந்தையைப் பாதிக்காமல் காப்பாற்றுகின்றன. தாய் ஓடினலும் சரி, விளையாடினலும் சரி, தடக்கிக் கீழே விழுந்தாலும் சரி பனிநீர் குழந்தை அதிர்ச்சியடையாது பாதுகாக்கிறது. கருப்பையிலே குழந்தை மூச்செடுப்பதில்லை. ஆகையால் பனிநீர் அதன் நுரையீரலுக்குப் போய் விடாது. சிலவேளைகளில் குழந்தை பனிநீரை விழுங்குவதுண்டு. அப்படி விழுங்கப் பட்ட பனிநீரைச் சிசு, சிறுநீராகச் சூலுறைக்குள்ளேயே கழிக்கிறது. குழந்தை பிறப்பதற்குச் சில நிமிடங்களுக்கு முன்புதான் சூலுறை உடைந்து பனிநீர் கருப்பையிலிருந்து வெளியேறுகிறது.




## 'ஈழநாடு' சிறுவர் பகுதி

★ ஈழநாடு சிறுவர் பகுதியில் ஆறு வயது தொடக்கம் பத்தொன்பது வயது நிரம்பிய அனைவரும் அங்கத்தவராகச் சேர்ந்து கொள்ளலாம்.

★ அங்கத்தவராகச் சேரவிரும்புவோர் இங்குள்ள விண்ணப்ப பத்திரத்தை நிரப்பி அனுப்பவேண்டும். இந்த இதழில் வெளியாகியுள்ள பத்திரம் 24-10-59க்குப் பின்னர்செல்லுபடியாகாது. ஒவ்வொரு வாரமும் இங்கு வெளியாகும் பத்திரத்தை அடுத்துவரும் சனிக்கிழமைக்குள் உபயோகித்துக் கொள்ளவும்வேண்டும். ஒருவர் ஒருமுறை அங்கத்தவர் பத்திரத்தை நிரப்பி அனுப்பினல் போதுமானது.

★ ஈழநாடு அலுவலகத்திலிருந்து அங்கத்தவர் பதிவுத்தாள் கிடைத்தபின்னர்தான் **ஈழநாடு சிறுவர் பகுதி**க்கு அங்கத்தவர் தங்கள் கதைகளையும், கட்டுரைகளையும், கருத்துக்களையும் அனுப்ப வேண்டும். அவற்றுள் நல்ல கதைகளும், கட்டுரைகளும் **சிறுவர் பகுதி** யில் வெளியிடப்படும்.

★ **சிறுவர் பகுதி** சம்பந்தமான சகல கடிதப்போக்குவரத்தும் பின்வரும் விலாசத்துக்கு அனுப்பப்பட வேண்டும்:

சின்ன மாமா,
**ஈழநாடு சிறுவர் பகுதி,**
தபாற்பெட்டி எண் 49,
யாழ்ப்பாணம், இலங்கை.

இங்கே வெட்டவும்

**ஈழநாடு சிறுவர் பகுதி**

**விண்ணப்பப் பத்திரம்**

**(17-10-59)**

**அன்புள்ள சின்னமாமா அவர்களுக்கு**
வணக்கம்,

**ஈழநாடு சிறுவர் பகுதி**யில் என்னை ஓர் அங்கத்தவராகச் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

பெயர்.................................................

விலாசம்..............................................

..........................................

..........................................
கையொப்பம்

பெற்றேர் அல்லது
ஆசிரியரின் கையொப்பம். வயது...............

இங்கே வெட்டவும்

# சிறுவர் பகுதி

## ஏமாறிய சோம்பேறிகள்

[ம. சில்வேஸ்ரர் — ப. எண் 56]

ஒரு ஊரில் குப்பன் வேலன் என்ற இரு சோம்பேறிகள் இருந்தார்கள். அவர்கள் இருவரும் பிறர் உழைப்பில் வாழ நினைப்பவர்கள்.

ஒரு நாள் குப்பன் வேலனைப் பார்த்து 'வேலா நாம் அடுத்த கிராமத்திற்கு வேலை செய்து விட்டு வருவோம் வா' என்றான். 'குப்பா நீ கட்டுச் சோறு கட்டிக் கொண்டு வா. நானும் கொண்டு வருகின்றேன். வழியில் களைப்பாயிருந்தால உண்ணலாம்' என்றான் வேலன்.

வேலன், குப்பன் கட்டுச் சோறு கொண்டு வருவான்; அதைத் தான் சாப்பிடலாம் என்று எண்ணினான். குப்பன், வேலனின் கட்டுச் சோற்றில் நம்பிக்கை வைத்திருந்தான்.

இருவரும் அடுத்த ஊரை நோக்கிப் புறப்பட்டனர். வெய்யில் அவர்களை வாட்டியது. பசி இருவர்களையும் கட்டுச் சோற்றை ருசி பார்க்கத் தூண்டியது.

வேலன் குப்பனிடம் 'நீ ஆற்றங்கரைக்குச் சென்று தண்ணீர் கொண்டுவந்தால் நாம் இருவரும் கை அலம்பிவிட்டுச் சாப்பிடலாம்' என்று கூறினான். குப்பனும் சம்மதித்து ஆற்றங்கரைக்குச் சென்றான்.

குப்பன் கட்டி வைத்திருந்த கட்டுச் சோற்றில் வேலனின் கண் பட்டது.

உடனே அதை அவிழ்த்து உண்ண எண்ணினான். அவிழ்த்த அவன் கண்டது சோறல்ல. கல்லும் மண்ணும் தான். தலையில் கை வைத்துக் கொண்டு 'ஒருவனை நாம் ஏமாற்ற எண்ணினால் நாமே ஏமாற வேண்டியதுதான்' எனத் தனக்குள் கூறிக் கொண்டான்.

## மண்ணா மாணிக்கமா?

[இரா. அறிவழகு — ப. எண் 284]

II

மறுநாள் காலையில் முதல் வேலையாக அந்த வேல் தெரிந்த இடம் நோக்கிச் சென்றான். எப்படியும் அதைத் தோண்டி விடவேண்டும் என முடிவு கட்டி அவ்விடத்தில் அமர்ந்து தோண்டலானான். 'முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார்' என்பது போல் மோகனின் முயற்சியும் பலிக்கத் தொடங்கியது. சுமார் ஆறடி ஆழம் தோண்டியிருப்பான். ஏதோ பிரகாசமாக மின்னும் குவளையைக் கண்டான். அது தெரிந்ததும் தொடர்ச்சியாக மூன்று குவளைகள் தெரிந்தன. மோகனும் அம்மூன்று குவளைகளையும் எடுத்து தனது கைப்பையில் போட்டுக்கொண்டு, விரைவாகத் தன் வீடு சேர்ந்தான்.

வீட்டிலே மிக மகிழ்ச்சியுடன் அந்தக் குவளைகளில் முதற் குவளையைப் பார்த்தான். அதில் மாணிக்கங்களும், இரண்டாவது குவளையில் வைரமும், மூன்றாவது குவளையில் நவரத்தினங்களும் இருந்தன.

மோகனின் தந்தையும், தாயாரும் வேறொரு நாட்டிலேயே வாழ்ந்துவந்தார்கள். மோகன் தன்னைப் பெற்ற பெற்றோர்களின் துயர் நீக்கவும் பெற்றோரைப் பேணி நடக்கவும் எண்ணினான். உடனே அவர்கள் இருக்கும் நாட்டை அடைந்து பெற்றோரைக் கண்டான். பின்னர் தான் கொண்டுவந்த மாணிக்கத்திலும், நவரத்தினத்திலும் அவர்களுக்கும் கொடுத்து விட்டுத் தன் இருப்பிடம் சேர்ந்தான். மோகனின் தந்தை, நவரத்தினமும் மாணிக்கமும் எடுத்துக்கொண்டு கடைக்குச் சென்றார். கடையில் அரிசி வாங்கலாமென கடைக்காரனிடம் மாணிக்கத்தைக் கொடுத்தார். அச்சமயம் அந்நாட்டின் தூதுவரின் மூலமாக கடைக்காரனால் தளபதிக்குச் சேதி தெரிவிக்கப்பட்டது. விரைந்து வந்தான் தளபதி.

நீதி மன்றத்தில், கள்வனென்றே குற்றம் சாட்டப்பட்டது. ஆகவே மோகனின் தந்தையைச் சிறைப்படுத்தினர்.

இச்செய்தி மோகனின் தாய்க்கு எட்டியது. உடனே அவள் பதறிக்கொண்டு சிறைநோக்கிச் சென்றாள். செல்லும் வழியில் மோகனைச் சந்தித்து விஷயத்தைக் கூறினாள். செய்தியறிந்த மோகன் தந்தையை எப்படியும் சிறைமீட்க வேண்டும் என்று எண்ணி அரசனிடம் நேரே சென்றான். தந்தையைச் சிறையில் அடைத்தது தகாது என வாதாடினான். நிரபராதி என நிரூபிக்க முடியுமா என அரசன் கேட்டான். மோகன் முடியுமெனக் கூறி அரசனைத் தன்னுடன் வருமாறு வேண்டினான். அதன்பின் அந்த விலையுயர்ந்த பொருள்களை எடுத்த இடத்திற்குஅரசனைக் கூட்டிச்சென்று காட்டினான் மோகன். அவர்கள் அங்கு சென்றதும் ஒருதேவதை அவர்கள் முன் தோன்றி மோகனின் நல்ல முயற்சிக்குப் பரிசளிக்கப்பட்டவைதான் அப்பொருள்கள் எனக் கூறியது.

அரசன் தான் செய்த அநீதிக்குத் தலைகுனிந்துமோகனின் தந்தையை விடுதலை செய்ததோடு மோகனுக்கு தளபதிப் பதவியையும் அளித்தான்.

## புதிய மருமக்கள்

பெயர்களும் பதிவு எண்ணும்

529. கே. சாகுல் ஹமீது, 38, பிச்சைக்குளம் வீதி, மூர் வீதி, யாழ்ப்பாணம்.

530. பி. எம். ஆர். மலர், 16, பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.

531. சீ. செந்தூர்ச் செல்வன், மே/பா து. சீனிவாசகம், மில் மனேச்சர், மதவாச்சி.

532. பி. ஜெயகுமாரி, மே/பா பிரான்சிஸ், நரி இட்டான், மல்லாகம்.

533. அ. சற்குண லீலா, மே/பா வி. சிங்காரவேல், மாதகல்.

534. ச. சுந்தரேசன், 11, பூவிலிங்கம் பிளேஸ், பொறளை, கொழும்பு 8.

535. க. சிவபாலன், 'சிவபாலன் அகம்' கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

536. செ. மகேந்திரன், கதிர்காம முருகன் கோவில், நவாலி தெற்கு, மானிப்பாய்.

537. தி. சாரதாம்பிகை, 47, கந்தர்மடம், பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

538. பொ. சிற்றம்பலம், மீசாலை வடக்கு, கொடிகாமம்.

539. பே. ஹம்சநாதன், 'செந்தினி வாசா" கரம்பொன் கிழக்கு, ஊர்காவற்றுறை.

540. பி. எம். கசீம், 36, டாவ்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.

541. எஸ், துரைசாமி, 9, ஸ்டேசன் மோர்கிரசன் வெஸ்ட், கொழும்பு. 7.

542. எஸ். ஜெயம் அட்டபலெம் எல். டி. அட்டபாகை.

543. மெ. ஆனந்தி, 451, ரெயில்வே அப்ரோச் வீதி, அனுராதபுரம்.

544. இ. முருகையா, இந்துக்கல்லூரி, திருக்கோணமலை.

545. எஸ். இந்திராணி, குமார கோவிலடி, காங்கேசன் துறை.

546. எம். எம். தனபாலசிங்கம், பன்னாலை வீதி, தெல்லிப்பளை கிழக்கு, தெல்லிப்பளை.

அன்பான சிறுவர்களே!

அனைவருக்கும் வாழ்த்துக்கள். உங்களில் அனேகரை நான் நேரிற் பார்த்ததில்லை. ஆனால் நீங்கள் எல்லோரும் மிக நல்லவர்கள் என்பதை நான் அறிவேன். உங்களைப்பற்றி அறிய எனக்கு ஆசை அதிகம். 'போஸ்ட்காட்'டில் உங்களைப்பற்றிச் சுருக்கமாக எழுதி அனுப்ப முடியுமா? நல்லமுறையில் எழுதப்படும் விபரங்களை உங்கள் பெயருடன் இங்கு வெளியிடுவேன். 'போஸ்ட்காட்'டில் மாத்திரம்எழுதி, சின்னமாமா, 'ஈழநாடு' த. பெ. எண் 49, யாழ்ப்பாணம், என விலாசமிட்டு அனுப்பி வையுங்கள். பதிவு எண்ணைக் குறிப்பிடத் தவறாதீர்கள்.

சின்னமாமா

## வானொலியின் பயன்

[எம். ஏ. எம். ஜிப்ரி — ப. எண் 350]

மாக்கோனி கண்டுபிடித்த வானொலிமூலம் மக்கள் நற்பயனடைகின்றார்கள் என்பதை எவரும் மறுக்கமுடியாது. பலநாட்டுப் பெரியார்களது சக்திவாய்ந்த பேச்சை நாம் கேட்கக்கூடியதாக இருக்கின்றது. நம் தாய்மொழியை மட்டுமன்றி பிறமொழிகளின் சிறப்பையும் வானொலி மூலமாக அறிகின்றோம். இது காரணமாகப் பிறமொழியாளர்மேல் ஒருவித அன்பும் எம்மையறியாமலேயே ஏற்படுகின்றது. இன்னும் சிறுவர் முதல் வயோதிபர் வரை கல்விஅறிவு பெறுதற்கும் இது பயன்படுகின்றது. பல நாடுகளில் வானொலி மூலம் பெண்களுக்கு உணவுப் பொருள்களின் தன்மை, சமையல், சுகத்தைப் பேணல், குழந்தைகளை வளர்த்தல் இவை முதலானவற்றைப் பற்றி அறிவுறுத்துகிறார்கள். வேறுபல நாடுகளில் அரசியல், கைத்தொழில், இலக்கியம், விஞ்ஞானம் முதலிய உபயோகமான விஷயங்களையும் வானொலி மூலம் பரப்புகின்றனர். நல் எண்ணங்களைப் பரப்பவும் நல்லுறவை மக்களிடையே ஏற்படுத்தவும் வானொலி பெரிதும் பயனளிக்கின்றது.

அகரவரிசைப் பாடல்:- 1

### அம்மா

—ஈழ—

அம்மா வெந்தன் அம்மா என்னை
அணைத்துத் தூக்கும் அம்மா
இம்மா நிலந் தன்னில் என்றும்
இன்பம் ஈயும் அம்மா.

சுட்டித் தனம் செய்து வீணைத்
தொல்லை தரும் போதும்
தட்டிக் கேட்டி டாது வென்னைத்
தாங்கிக் கொள்ளும் அம்மா.


பள்ளி செல்ல நல்ல நல்ல
பட்ச ணங்கள் தந்து
உள்ள மகிழ் வோடு என்னை
உவந்து போக்கும் அம்மா.

நடந்து செல்லும் அழகு கண்டு
நயந்து மனம் தன்னில்
கடந்து பொங்கும் அன்பு கொண்டு
களித்து நிற்கும் அம்மா.

ஓடி நானும் பள்ளி விட்டு
ஓய்ந்து வரும் போது
தேடி வாசல் வந்து அன்பு
சேர்த்துத் தூக்கும் அம்மா.

ஆசை காட்டி அமுது ஊட்டி
அழகுஞ் செய்து என்னைப்
பாசத் தோடு வளர்க்கத் துன்பப்
பட்டவள் என் அம்மா.

## உண்மைக் கதைகள்: டெலிவிஷனின் தந்தை II



உத்தியோகம்: உற்சாகத்தினால் உந்தப்பட்ட டுமொன்ற், தமது 14 ஆவது வயதிலேயே தந்திப் பகுதியில் ஓர் உத்தியோகம் பெற்றார். அதன் பின்னர், ஏழு வருடங்களாக அவர் பெரிய கப்பல்களில், கோடை காலத்திலே, ரேடியோ இயக்குநராக வேலை பார்த்தார். இத்தொழிலின் மூலமாக அவர் தமக்கு விருப்பமான பொழுது போக்கில் ஈடுபட முடிந்ததுடன், தமது கல்விக்கு வேண்டிய பணமும் கிடைத்தது.



கல்லூரி: 1919-ஆம் ஆண்டில் டுமொன்ற், நியூயோர்க் நகரிலுள்ள பிரசித்திபெற்றவொரு இயந்திர நுட்பக் கல்லூரியில் சேர்ந்தார். கல்லூரியிலுள்ள பரீட்சைக் கூடங்களில் டுமொன்ற்றின் ஆசையை மேலும் தூண்டக் கூடிய பலவித மின்சார உபகரணங்கள் இருந்தன. அவற்றில் முக்கியமானதொன்றுதான் கதோட்—ரே ரியூப். அது மின்சார ஓட்டங்களை ரியூப்பின் மேலே ஒளிக்கீற்றுக்களாக மாற்றிவிடும் தன்மை வாய்ந்ததாகும்.



ரேடியோ ரியூப்ஸ்: 1924-ஆம் ஆண்டிலே, டுமொன்ற் மின்சார எஞ்ஜினியரிங் பகுதியில் பட்டம் பெற்றார். மின்சார உபகரணங்கள் உற்பத்தி செய்யும் ஒரு ரேடியோ — ரியூப் தொழிற்சாலை, அவரை உடனே வேலைக் கமர்த்திக் கொண்டது. அத்தொழிற்சாலையின் உற்பத்தியைப் பத்து மடங்கு அதிகரிக்க வழிவகைகள் உண்டென்பதை அவர் தெரிந்து கொண்டார்.

(தொடரும்)

# பழைய மனிதனுனேன் !

— க. கணேசலிங்கம் —

'வசதிக் கேற்ற வாழ்வு வாழ மனிதன் பழகிக் கொள்ள வேண்டும். மற்றவன் சொகுசாக வாழ்கின்ருன் என்று நாமும் அப்படி வாழ நினைப்பது தவறு. ஒரு நேரக் கஞ்சிக்கே அலைபவன் அல்வாவும் ஐஸ்கிறீமும் சாப்பிட எண்ணலாமா? இந்த வீணை எண்ணத்தால் தான் மனிதன் மேலும் வறுமை அடைகின்ருன். நம் தரத்தை உயர்த்தப் பாடுபட வேண்டும். பின் தராதரத்துக் கேற்ப வாழ வேண்டும். இதுதான் முறையான வாழ்வு'-மேற்கண்டவாறு நான் படித்துக் கொண்டிருந்த பத்திரிகையில் ஒருவர் எழுதியிருந்த அறிவுரை ஒருமுறை நானடைந்த அனுபவத்தை நினைவூட்டியது.

அன்று ஓர் ஆங்கிலேய சமூகப் படம் பார்த்தேன். அமெரிக்காவில் தயாரான இப்படம் உல்லாச வாழ்க்கையைப் பிரதிபலிப்பதாகவே இருந்தது. படம் முடிவடைந்து வெளியே வந்ததும் எனது சிந்தையில் ஒரு புது வித ஆசை எழுந்தது. இப்படியல்லவா நாமும் வாழ வேண்டும் என எண்ணினேன்.

அவர்கள் காரில் அல்லவா சென்ருர்கள் (படத்தில்)? நானும் அப்படித்தான் செல்ல வேண்டும். டாக்சியில் வீடு போய்ச் சேர்ந்தேன். அன்று சம்பளமாக எடுத்த ஐந்து பத்து ரூபாய் நோட்டில் ஒன்று பறந்தது. படம் பார்த்து விட்டு வீட்டிற்கு வருவதற்குள் நடந்த செலவு இது.

காரில் வந்தால் மட்டும் போதுமா? வீட்டிலும் அப்படித்தானே நடந்து கொள்ள வேண்டும்? 'என்ன, நேரம் சென்று விட்டது, வாருங்கோ சாப்பிட' என்று மனையாள் தாய் மொழியில் பேசினுள்.

'ஐ கேம் பை டாக்சி, தெரியுமா" இப்படியே பேசிக் கொண்டு அங்கே நடந்த சிலவற்றை அவளிடம் காட்ட முயன்றேன். அவள், குடித்து விட்டு வந்து விட்டேனென்று நினைத்து எனக்குப் படுக்கையை வெளியிலே விரித்து விட்டு அறையைப் பூட்டிக் கொண்டு உள்ளே சென்று விட்டாள்.

அடிசிற்கினியாள் பூட்டிக் கொண்டு படுத்து விட்டாள். பசி அடிவயிற்றிலிருந்து கிளம்பியது. அடுக்களைப் பக்கம் சென்றேன், நாளாந்தம் சாப்பிடும் உணவைத்தான் அவள் போட்டு மூடியிருந்தாள். 'படத்தில் பார்த்த சாப்பாட்டிற்கும் இதற்கும் எவ்வளவோ வித்தியாசம்' என்று மனம் கூறியது. சே, ஒரு நாளைக்காவது அவன் மாதிரி நாம் வாழக் கூடாதா? சாப்பாடு வேண்டாம். உண்ணுமலே உறங்கினேன்.

அடுத்தநாள் காலைச் சாப்பாட்டை வழக்கம் போலவே தயார் செய்திருந்தாள் மனைவி. வேறு சாப்பாடு வேண்டுமென்று மனம் கூறியது. வெளியே சென்றேன்.

'ஹோட்டல்' புதியது போலவே கண்ணுக்குப் பட்டது. பெயருக் கேற்றபடி சாப்பாடும் இருக்குமென்று உள்ளே சென்றேன். மணிப் பேர்ஸ் மெலிந்ததே தவிர வயிறு நிறையவில்லை. வெளியிலே புதிய போர்ட் மாட்டப்பட்டிருந்தது எனினும், உள்ளே அங்கும் சாப்பாடு பழையதுதான்.

என் உடைகளைப் பார்த்தேன். 'இப்படியா படத்தில் வந்தவர்கள் போட்டிருந்தார்கள்'? 'உடையை மாற்றித்தான் ஆக வேண்டும்' என்று சொல்லியது மனம்.

எனக்குத் தெரிந்த தையற் கடைக்காரனிடம் சென்று என் எண்ணத்தை அவனிடம் கூறினேன். புது முறைகளில்தான் தைத்து வைத்திருந்த உடைகளில் எனக்கு ஓரளவில் அளவானதைத் தந்தான் (அவன் எனக்கு முன்பே அந்தப் படத்தைப் பார்த்திருக்க வேண்டும்). அவற்றை அணிந்து பார்த்து விட்டு நல்ல 'பிட்டிங்' என்ருன். நானும் கேட்ட பணத்தைக் கொடுத்துவிட்டு வேறு சில அபூர்வ பொருள்களையும் வாங்கிக் கொண்டு கந்தோருக்கு காரில் பறந்தேன்.

கந்தோர் ஹெட்கிளார்க், காரிலிருந்து இறங்கியதும் கார்க் கதவு சாத்தப்பட்ட சத்தத்தில் திடுக்குற்ருர். யாரோ வெளியூரவன் தான் வந்துவிட்டானென்று யோசித்திருக்க வேண்டும். அவர்பட்ட அவதியை என் 'கூலிங்கிளாசால்' கூர்ந்து கவனித்தேன். தன் சட்டையைச் சரிப்படுத்திக் கொண்டு எனக்காக எழுந்த சமயத்தில் என் கண்ணுடியைக் கழற்றிக் கொண்டு அவர் அருகில் சென்றேன். எழுந்தவர் அப்படியே அமர்ந்து விட்டார். நான் பழையகிளார்க்தான் என்பதைக் கண்ணுடியைக் கழற்றிய மாத்திரத்தே கண்டுகொண்டார் போலும்.

இதென்ன புதுக்கோலம் என்பது போல் என்னைப் பார்த்த அவர் 'காரில் வந்தும் கந்தோருக்கு லேட்' என்று பழைய பல்லவியையே பாடத் தொடங்கினுர்.

எனது இருப்பிடத்துக்குச் சென்றேன். மேசை கதிரையெல்லாம் பழையனவாகவே இருந்தன. அங்கு இருக்கக் கூட மனம்வரவில்லை. நின்றபடி, எடுத்தேன் பேனவை. எழுதினேன் முதல்வருக்கு. இவற்றையெல்லாம் புது பாஷனில் மாற்றிவைக்க வேண்டும்என்ற என் நோக்கம் வெளிப்பட ஒரு நீண்ட கடிதம் அவர் கைக்கெட்டும்படி செய்தேன். கிடைத்த பதில் இதுதான்.

அப்பாத்துரை அறிவது,

உமது மேசையையும் கதிரையையும் மாற்றிவைக்க யோசித்திருக்கின்றேன். உமக்கருகில் இருந்து வேலைபார்க்கும் அம்பலவாணர் மேசை சிறிதாக இருப்பதாகக் கூறியுள்ளார். மேலும் அவர் உமது மேசை நல்லதென்று அபிப்பிராயப்படுவதால் உம்முடைய மேசையை அவருக்குக் கொடுத்துவிட்டு அவரின் மேசையை உமக்குத்தர எண்ணியுள்ளேன். நீர் 'டைபிங்' கிளார்க்தானே. ஆகவே, உமக்கு கதிரையிலும் பார்க்க 'ஸ்டூல்' உதவியாக இருக்குமென நினைக்கின்றேன்.

நான் நடந்துகொண்ட விதமும் பேச்சுக்களும் என்னுடன் கூடவே வேலைபார்ப்பவர்களுக்கு விசித்திரமாகப் பட்டிருக்கவேண்டும். என் முன்னேற்றம் பற்றி இவர்களுக்கு நான் எவ்வித முன்னறிவித்தலும் கொடாதது என்பேரில் தவறுதான். என்னைப் பாராமலே என்னைப் பற்றி ஏதேதோ எல்லாம் பேசிச் சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

வீடுசெல்லும் நேரம் வந்தது. கந்தோர் வாசலில் வந்து நின்றவாறே ஓடிக்கொண்டிருந்த டாக்ஸியை நிறுத்தினேன்.

வீடு செல்லும் வழியில் புதுப் புதுத் தினிசான பொருள்கள் எல்லாம் வாங்கினேன். இவைகளெல்லாம் தேவையா என்பதைப் பற்றி நான் அதிக அக்கறை எடுக்கவில்லை. மூசி மூசி உழைத்த காசெல்லாம் தூசியாகப் பறந்தது. மிகுதி எவ்வளவு என்று எண்ண வேண்டிய சிரமமே எனக்கு இருக்கவில்லை.

நான் மட்டும் புதுவிதமான உடை அணிந்தால் போதுமா? அவளும் அப்படி அணிந்தால் தானே ஒத்துவரும்! அமெரிக்க நடிகைபோட்டிருந்ததுபோன்ற உடைகளை வாங்கிக் கொண்டு வீடுவந்து சேர்ந்தேன்.

வீடுவந்து சேர்ந்த நான் அவளுக்கென வாங்கிய உடைகளடங்கிய பார்சலை அவள் கையிற் கொடுத்தேன். சிரித்த முகத்துடன் பார்சலை விரித்த அவள் என்னை எரித்து விடுவது போல் பார்த்தாள்.

'இவை யாருக்கு' என்ருள். 'எல்லாம் உனக்குத்தான்' என்று ஆங்கிலத்தில் அடுக்கினேன்.

மறுகணம் பிரித்த பார்சலை வீசியெறிந்தாள். நல்லவேளை என் முகத்தைப் பார்க்காமலே எறிந்த படியால் என் முகம் தப்பியது.

'உங்களுக்கென்ன பைத்தியமா? கஞ்சிக்கும் வழியில்லாமல் ஊரில் எத்தனையோபேர் தவிக்கின்றனர். நீங்கள் இப்படிப் பாடுபட்டு எடுத்த பணத்தை ஊதாரித்தனமாகச் செலவழித்துவிட்டு வருகிறீர்களே' என்று சொல்லி விம்மி அழ ஆரம்பித்தாள்.

அவள் கூறிய வார்த்தைகளில் உண்மை இருக்கத்தான் செய்தது.

தேவையற்ற பொருள்களைக் காவிக்கொண்டு படலையைத் திறந்தேன், தியேட்டருக்குப் போகவல்ல. எல்லாவற்றையும் திருப்பிக் கொடுத்துவிட்டுப் பழைய மனிதனுக வாழ!


## யாழ்ப்பாணம்
# ஐக்கிய இலாப நிதி

— 1918-ஆம் ஆண்டு தாபிதமானது —

**வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.**

**இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 616313,00**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

**பங்குப்பணங்கட்டுமுறை**

மாதமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்பட வேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100-00 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்றுவரவு**

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒருவிகித வட்டியடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்**

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்**

கொழும்பிலுள்ள 'நாஷனல்' வங்கியிலும் 'இம்பீரியல்' வங்கியிலும், இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும்வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

**கடன்**

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகமாகக் கொடுக்கலாம்.

**இன்னும் வேண்டிய விபரங்களை**
**என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.**

**எஸ். கனகசபை**
சிருப்பர்

Std. 14.


## மலாயன் இந்தியர் காங்கிரஸ்

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

சுகமாக வாழ குடியிருப்பு நிலத்திட்டம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பல லட்சம் இந்தியர்களுக்குப் பிரஜாவுரிமை வழங்க ஏற்பாடு செய்திருக்கிறது" இப்படியாகச் சொல்லி வந்திருக்கிருர் ம. இ. கா. தலைவர் இதுநாள்வரை.

### இதைப் பாருங்களேன்

ஐக்கிய மலாய தேசீயக் கழகத்தார் (இம்னோ) தங்களுக்கென பிரமாண்டமான தலைமைக் காரியாலயம் அமைத்துக் கொண்டிருக்கிருர்கள். மலாயா சீனர் சங்கத்தார் இன்னும் அதைவிடப் பிரமாதமான கட்டடத்தை எழுப்பியிருக்கிருர்கள். ஆனுல், ம. இ. காவுக்குத் தலைமைக் காரியாலயம் எங்கிருக்கிறது என்ற கேள்வியை எழுப்பினுல் "தேடிப்பார்" என்ற நிலையிலிருக்கிறது. எங்கோ ஒரு மூலையில், பிறத்தியார் வீட்டு மாடியில் ஒரே ஒரு வாடகை அறை. சென்ற ஆண்டில் பெருமுயற்சி செய்து ஒரு மலைமீது "நேதாஜி மண்டபம்" என்று அத்திவாரக்கல் நாட்டியதாகப் பத்திரிகையில் செய்தி வெளிவந்ததே தவிர கட்டடம் வளர்ந்ததாகத் தெரியவில்லை. இதற்கிடையில் ஈராண்டுகள் முடிந்து விட்டன.

### மானம் காப்பவர்கள்

### நகரத்தார்கள்

"காட்டை நாடாக்கினேம்-மலாயாவைச் செல்வம் கொழிக்கும் சுவர்க்க பூமியாக்கினேம்" என்று சொல்லிப் பெருமைப்படும் நமக்கு, நல்லநாள்க் காலத்தில் நான்குபேர் கூடி, பொது நிகழ்ச்சி நடத்த நமக்கென்று ஓர் இடம் கிடையாது. அப்படிப்பட்ட விசேஷங்களுக்கு மாநகரசபை நகரமண்டபம், சீனர் மண்டபம் ஆகிய இடங்களுக்குக் கெஞ்ச வேண்டியிருக்கிறது. நல்ல வேளையாக, அக்காலத்தில் மலாயாவின் வளப்பத்திற்கு மூலதனம் தந்துதவிய நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் நல்லதொரு மண்டபத்தைக் கட்டிவைத்திருக்கிருர்கள். அது, சமயத்துக்குச் சமயம் ம. இ. கா. வருடாந்தத் தேர்தலிலிருந்து வேறு பல பொது நிகழ்ச்சிகளுக்கு இடம் தந்து, தமிழர்களின் மானம் காத்து வருகிறது.

### பணம் வேண்டாமா ?

"இந்தக் குறையைத் தீர்த்து விடுவோம்" என்றுதான் பிரதி வருடம் ம. இ. கா. தலைவர் பதவிக்கு வரத் தவிப்பவர்கள் கூவிக்கொள்ளுகிருர்கள். வந்த பிறகு, "பணம் வேண்டாமா?" பாட்டுப்பாடுகிருர்கள். இந்தியர்களிடையே, குறிப்பாகத்தமிழரிடையே, நிதி திரட்டுவது ஒரு பெரிய கஷ்டமான செயல் என்று சொல்ல முடியாது. தோட்டப் பாட்டாளிகளே முன்வந்து தென்கிழக்காசியாவிலே இதுநாள்வரை சாதிக்காதளவுக்கு மாபெரும் "தோட்ட மாளிகையை" பெட்டாலிங் ஜெயாவில் தோற்றுவித்திருக்கும் போது சகல வளமும் பெற்ற இந்தியர்கள் "நேதாஜி மண்டபம்" எழுப்ப நிதிதரவா முன்வரமாட்டார்கள்? எல்லாம் "மனமிருந்தால் மார்க்கமுண்டு".

### கெடா தெங்காத் தொகுதி

மலாயாவிலே — பொதுத் தேர்தலின்போது பின்போடப்பெற்றிருந்த கெடா தெங்காத் தொகுதித் தேர்தல் கடந்த செப்டம்பர் மாதம் 30ம் திகதி நடைபெற்றது. எதிர் பார்த்தபடியே, கூட்டணி சார்பில் நின்ற முன்னுள் கல்வி மந்திரி இஞ்சே கிர் ஜொகாரி வெற்றி பெற்ருர்.

இந்தத் தொகுதியோடு, கெடா மாகாணத்தில் நின்ற பதினுன்கு பேரும்-அதாவது-நூற்றுக்கு நூறு சத விகிதம் வெற்றியுடன் திரும்பினுர்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

* * *

### பண்டாவுக்குப் பிரார்த்தனை

இலங்கைப் பிரதமர் பண்டாரநாயக்கா, சமீபத்தில் சுட்டுக்கொல்லப்பட்டதை அறிந்து மலாயா அதிர்ச்சியடைந்தது. திரு. பண்டாவின் பிரேத அடக்க நாளன்று மலாயாவில் எல்லா அரசாங்க காரியாலயங்களும் தேசியக் கொடிகளைத் தாழப் பறக்கவிட்டு துக்கம் அனுஷ்டித்தன.

அன்று மாலை நடைபெற்ற அநுதாபக் கூட்டத்திற்கு, மலாயா பாராளுமன்றத்தில், இலங்கையரின் பிரதிநிதியாக மேல் சபையில் அங்கம் வகிக்கும் டத்தோ ஸேர் கிளப் துரைசிங்கம் தலைமை வகித்துப் பேசும்போது அவருடைய மறைவு தென்கிழக்காசியாவுக்கே ஈடு செய்ய முடியாத நஷ்டம் என்று எடுத்துரைத்தார்.

மலாயா பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான், பிரார்த்தனைக் கூட்டத்திற்கு வர இயலாமைக்கு வருத்தம் தெரிவித்து, அனுதாபச் செய்தியொன்றினை அனுப்பி வைத்தார்.

மலாயாவின் சுதந்திர தினத்துக்கு திரு. பண்டாரநாயக்கா மலாயாவுக்கு விஜயஞ் செய்திருந்தாரெனவும், அவரது திறமை, பேச்சுவன்மை, முற்போக்குக்கொள்கைகளைத்தாம் நேரிற் கண்டு வியந்ததாகவும் மலாயாப் பிரதமர் தமது பேச்சில் குறிப்பிட்டிருந்தார்.


இங்கே வெட்டவும்

**ஈழநாடு**
சிவன்கோவில் மேலை வீதி,
தபாற்பெட்டி எண். 49
யாழ்ப்பாணம் (இலங்கை)

ஈழநாடு வார இதழுக்கு என்னை ஒரு சந்தாதரராகச் சேர்த்துக் கொள்ளுமாறு வேண்டுகின்றேன். அதற்குரிய ஆண்டுச் சந்தா ரூபாய் பத்து (10/-) இதனுடன் மனிஓடர் / செக் மூலம் அனுப்பி வைக்கின்றேன்

..........................................
கையொப்பம்.

பெயர்: ..........................................

விலாசம்: ..........................................

இங்கே வெட்டவும்

அருள்வழி

# திருக் கோவிலும் மனக் கோவிலும்

## கனிந்த உள்ளத்துடன் இறைவனைப் போற்றுக

— ஸ்ரீ அனந்தராம தீட்சதர் —

வைதிகமான இந்துமதத்தில் வாக்கினால் பேசினால் புண்ணியம், நடந்தால் புண்ணியம், நல்லது செய்யவேண்டுமென்று நினைத்தால் புண்ணியம். செய்யும் காரியங்கள் எல்லாவற்றையும் புண்ணியமாகக் கூறுவது இந்துமதம். இருஷிகள் எல்லோருடைய தர்மங்களைப் பற்றியும் சொல்லியிருக்கிறார்கள். சகல ஜாதியினரும் ஒருவருக்கொருவர் அன்புடன் நடக்கவேண்டி அவை ஏற்பட்டவை. அன்பின் காரணமாக அந்த உதவிகளைச் செய்யவைத்தனர். பிராசீனமானமுறையில் அந்த அன்பை வளர்ப்பதைவிட்டு சட்டத்தால் அன்பை இரு உள்ளங்களிடையே ஏற்படுத்த முடியாது. ஒருவருக்காக ஒன்றைச் செய்வது சரியான பலனைக் கொடுக்காது. அன்பின் காரணமாகச் செய்வதே திருப்தியளிக்கும். வேலைக்காரனுக்கும் எஜமானனுக்கும் அன்பு, உறவு, ஒருவர் மற்றவருக்குஅன்புகாட்டவேண்டிய அவசியத்தை இந்துமதமே விளக்கியுள்ளது. இதுபோன்று கடவுளைப் பார்த்தால் புண்ணியம், நினைத்தால் புண்ணியம் என்று கூறும் வேறுமதம் ஏதாவது இருக்கிறதா என்பது எனக்குத் தெரியாது. கர்மங்களை ஒருவர் செய்கையில் ஏற்படும் தவறுகளுக்கு பகவானுடைய நாம ஜபமே பரிகாரம். இந்துமத காரியங்கள் மகரிஷிகளால் கண்டுபிடிக்கப்பட்டு அனுஷ்டானத்தில் வருகின்றன. மஹரிஷிகள் ஒரு குறிப்பிட்ட ஜாதியைச்சேர்ந்தவர்களென்றும், சூரியன் தோன்றுவதற்கு வெகுகாலத்திற்கு முன்னரேயே சிந்தித்து மஹரிஷிகளால் அளிக்கப்பட்ட வைதீக மதமிது. அன்றாடம் ஒவ்வொருவரும் அறிந்தோ, அறியாமலோ வாக்காலும் மனத்தாலும் செயலாலும் கோடிக்கணக்கான பாவங்களுக்கு வித்திடுகின்றனர்.

மகாபாபிகளின் நிழல் கூடப் படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். பாபிகளின் நிழல் பட்டால் என்ன பாதகம் என்று சிலர் கேட்கலாம். அப்படித்தான் என்னிடம் ஒரு டக்டரும் கேட்டார். புளிய மரம் போன்ற மரநிழலில் ஒருவன் சில தினங்கள் தொடர்ந்து இருப்பதால் அவனுக்கு ஏற்படும் பாதகத்தையும் வேப்பமர நிழலில் இருப்பதால் ஒருவனடையும் சுகத்தையும் எடுத்துக்கூறி விருட்சத்தின் நிழலுக்கே இந்த சக்தியிருந்தால் மனித நிழலுக்கு சக்தியிருக்காதா என்று கேட்டேன். டக்டரும் நான் கூறியது உண்மை என ஒப்புக் கொண்டார்.

பகவான் நாம ஜெபம் பக்தி மூலமாக ஞானத்தை அடைந்த பின்னரே மோட்சத்தை அடைய முடியும். நாம ஜெபம் என்பது இறைவனை உணர்ந்து செய்ய வேண்டும். உளம் கனிய இறைவனைப் போற்றுது நாம் ஜெபம் செய்வதால் பிரயோசனமில்லை. மேலும் பிரணவ மந்திரமான 'ஓம்கார' மந்திரத்தை தனியாகச் சொல்வதாலும் பயனில்லை. அதை வேறு மந்திரங்களுடன் சேர்த்துச் சொன்னாலே பலன் உண்டு. டக்டர் கொடுக்கும் பேதி மாத்திரையை அரைத்து உடம்பில் பூசிக் கொண்டு பேதியாகவில்லை யென்று கூறினால் மருந்தின்மீதோ டக்டர் மீதோ குற்றமாகுமா? அதைப் போல மந்திரங்களை எவ்வாறு சொல்ல வேண்டுமோ அவ்வாறு சொல்லாமல், பலன் கிடைக்கவில்லையென்று கூறினால் சரியாக அதை அனுஷ்டிக்காதவர் தானே தவறு செய்தவராவார்.

பகவானின் நாம ஜெபத்தை இடைவிடாமல் திரும்பத் திரும்ப செய்ய வேண்டுமென்றும், அப்படிச் செய்து வந்தால் ஏதோ ஒரு சமயம் மனம் குவிந்து ஒரு நாமாவானது உள்ளிருக்கும் சைதன்யத்துடன் தொடர்பு கொண்டு விடும்.

பிள்ளைக்குத் தகப்பன் சொத்துத் தேடி வைத்தது போல நமது மகரிஷிகள் நமக்கு விட்டுச் சென்றிருக்கும் பொக்கிஷத்தைப் போற்றிக் காத்து வர வேண்டும்.

# இலங்கையை வளஞ் செய்தோர் இந்தியர்

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

கத்தோலிக்கர் எங்கள் அரசியல் வாழ்வில் செல்வாக்கு ஈட்டுவதை நிறுத்தவேண்டுமானால் அவர்களுடைய கல்வி ஸ்தாபனங்களை விடச் சிறந்த ஸ்தாபனங்களை ஏற்படுத்த வேண்டும்.

### ஜனப் பெருக்கம்

கடைசியாக, இந்த ஜனப் பெருக்கப் பிரச்சினை. இதையும் சிலர் தேர்தல் காலங்களில் கிளப்பி விடுகிறார்கள். "ஏற்கனவே இலங்கையில் ஜனத்தொகை பெருகி வருகிறது.—ஆகையால் இந்தியர்களைக் கலைத்துவிட வேண்டு"மென்ற கோஷத்தை எழுப்புவார்கள். ஆனால் வறுமைக்கும் சனப் பெருக்கத்துக்கும் சம்பந்தமில்லையென்பதை நான் கூற விரும்புகிறேன். பெல்ஜியத்தில் ஒரு சதுர மைலுக்கு சராசரி 800 பேர் வசிக்கிறார்கள். பிரிட்டனில் சதுர மைலுக்கு 500 பேர்; ஒல்லாந்தில் 610; இத்தாலியில் 400; பிரான்சில் 200. இவையெல்லாம் பொதுவாக செல்வம் நிறைந்த நாடுகள் என்று கருதப்படுகின்றன. கீழ்த்தர, அபிவிருத்தியற்ற நாடுகள் என்று கூறப்படும் இந்தியாவில் இத்தொகை 250; பிலிப்பைன்ஸில் 175; இலங்கையில் ஏறத்தாழ 320. கைத்தொழில், பொருளாதார அபிவிருத்தியினால் இந்தப் பிரச்சினையை இலகுவில் தீர்த்து விடலாம்.

சாதி, சமயம், மொழி, ஜனப் பெருக்கம்—இந்தப் பிரச்சினைகள்யாவும்மேலோட்டமாகநாம் காணும் பிரச்சினைகள். ஆனால் எம்மைப் பீடித்துள்ள உண்மையான, படுமோசமான பிணி வறுமைதான். விவசாய அபிவிருத்தி, வர்த்தக அபிவிருத்தி, கைத்தொழில் அபிவிருத்தி முதலியவற்றால் வறுமையை ஒழித்துக் கட்டி விட்டோமானால் மேற்சொன்ன சகல பிரச்சினைகளும் தீர்ந்துவிடும்.

(முற்றும்)

# நாட்டின் சிக்கல்கள் தீர மனிதப் பண்பின் வளர்ச்சி அவசியம்

மதுரை காந்திக் கிராமத்திலுள்ள கிராம உயர் நிலைக் கல்வி நிலையத்தில் சமீபத்தில் பட்டமளிப்பு விழா பேருரை ஆற்றியபோது அமைச்சர் ஸ்ரீ மாலி தமது உரையில் கூறியதாவது:

நாட்டில் ஆன்மீக சக்தியை வளர்க்க வேண்டும். மனிதப் பண்பு முழுவளர்ச்சியடைந்தாலொழிய நாட்டின் சிக்கல்களைத் தீர்க்க அரசு மேற்கொள்ளும் வருமானத்தில் சமத்துவம், உற்பத்தியில் சமஉரிமை, மதுவிலக்கு போன்ற திட்டங்கள், அனைத்தும் பயனற்றதாகவே இருக்கும். பரம்பரை பரம்பரையாகப்பாடுபடுவதன்மூலமே இப்பணியைச் செய்து முடிக்கலாம். (முன்னிருந்ததைக்காட்டிலும்) நல்ல பண்புகளையும் மற்ற செல்வங்களையும் விட்டுச் செல்ல வேண்டும் என்பது ஒவ்வொரு பரம்பரையினரது முயற்சியாக இருக்க வேண்டும்.

ஆன்மீகத்திற்கும் நடைமுறை வேலைகளுக்குமிடையில் ஒற்றுமையும் உடன்பாடும் நிலவ வேண்டும். இளைஞர்களிடையே காணப்படும் காலித்தனம், கட்டுப்பாடின்மை ஆகியவை பரம்பரையாக நிலவி வரும் பண்புகளைப் பலவீனப்படுத்தும் ஒரு பெரும் நோய்க்கான அறிகுறிகளாக இருக்கின்றன.

சிலர் முன்வந்து சுயநலமின்றி சேவை செய்தால் இந்த நோய் போக்கடிக்கப்பட்டு நல்லபண்புகள் வளர வழி ஏற்படும்.

பரம்பரை பரம்பரையாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பழக்க வழக்கங்கள் மதிக்கப் படாத இந்த வேளையில் அப்பண்புகளை மீண்டும் தழைத்தோங்கச் செய்யவும் இளம் பரம்பரையினருக்குஒருபுதுநம்பிக்கையை ஏற்படுத்தவும் செய்யவேண்டிய தனிப் பொறுப்பு சமூக ஊழியர்கள், ஆசிரியர்கள் ஆகியோரைச் சார்ந்ததாகும்.

அந்த முறையில் கிராமங்களிலுள்ள கல்வி நிலையங்கள் பெரிய அளவில் சேவை செய்ய முடியும்.


கலாநிலையப் பதிப்பகம்




**தினக்குறிப்பு 1960**

எமது தினக்குறிப்புடன், மாணவர்களுக்கென பிரத்தியேகமான தினக்குறிப்பையும் வெளியிடுகின்றோம்.

எமது தினக்குறிப்பின் விலை **75** சதம்

விபரங்களுக்கு:- தினக்குறிப்பு 1960, த. பெ. எண் 49, யாழ்ப்பாணம்.

———— இங்கே வெட்டவும் ————

மனேஜர் :
கலாநிலையப் பதிப்பகம்
த. பெ. எண் : 49.
சிவன் கோவில் மேலவீதி,
யாழ்ப்பாணம், :: [இலங்கை.]

1960ஆம் ஆண்டு பொது/மாணவர்களுக்கான தினக்குறிப்பில் ............பிரதிகளை எமது பெயரில் பதிவு செய்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம். இத்துடன் முற்பணமாக ரூபா............ அனுப்பி வைத்துள்ளோம்.

எமது பெயரும் முகவரியும் பின்வருமாறு :

பெயர்:..........................................

முகவரி:..........................................

:..........................


# உலக அரசியலும் தனி மனிதனும்

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

கல்வியின்மையும், செல்வமின்மையுமுள்ள தேசங்களில் சுயநலம்பேணும் தலைவர்கள் ஆட்சியைக் கைப்பற்றி சர்வாதிகார அரசியலை நிலைபெறச் செய்கிறார்கள். இங்ஙனம் ஜனநாயகம் எனப்படும் மக்களாட்சி காலத்திற்கு ஒவ்வாததாகக் கருதப்படுகிறது.

ஆகவே இது ஜனநாயகத்தின் சோதனை மிகுந்த காலமாகும். ஜனநாயகம் தோல்வியுறுமானால் உலகில் தனிமனித சுதந்திரம் மறைந்துபோகும். காரணம், ஜனநாயகத்திலேயே தனிமனித சுதந்திரத்திற்கும் உரிமைக் கொண்டாட்டத்திற்கும் இடமிருக்கிறது. ஆனால் சர்வாதிகாரத்தில் இவை அர்த்தமற்ற வெற்றுரைகளாகக் கருதப்படுகின்றன. நாட்டின் பொது நன்மைக்கு உழைக்க மட்டுமே அங்கு உரிமை இருக்கிறது. எனவே, தனிமனித சுதந்திரத்தைப் பாதுகாக்க வல்ல மக்களாட்சி வெற்றி பெறச் செய்வதெங்ஙனம்?

பொது அறிவு வளர்ச்சி மூலம் அரசியல் கல்வியை மக்களிடத்தில் பரப்ப வேண்டும். பொருளாதார ஏற்றத்தாழ்வு குறைந்து சமூக ஒற்றுமை மலர வேண்டும். ஏதேச்சாதிகார, சர்வாதிகாரக் கொள்கைகளின் செல்வாக்கைத் தாக்குப்பிடிக்க ஜனநாயக அடிப்படைக் கொள்கைகளை நடைமுறைக்குக் கொண்டு வந்து அவற்றின் உயர்வை நிலைநாட்ட வேண்டும். அதாவது மனிதனின் சுதந்திர உரிமைகளை மதித்து அன்றாட அரசியலில் பங்கும் பொறுப்பும் அளித்தல் அவசியம். *

### தனிமனிதனின் பொறுப்பு

இதுவரை ஆராய்ந்தவற்றிலிருந்து தனிமனிதனைப் பொறுத்தவரையில் அரசியல் பொறுப்புக்களும் கடமைகளும் முன்னிருந்ததைவிட இப்பொழுது பெருகிவிட்டன என்பது புலனாகின்றது. ஒவ்வொருவருடைய சொந்த நாட்டு அரசியலுக்கும் உலக அரசியலுக்குமிடையில் இருந்த இடைவெளி மிகமிகச் சுருங்கிவிட்டது. உலகமுழுவதையும் ஒரு நாடாக மதித்து அரசியல் சிக்கல்களுக்குத் தீர்வுகாண வேண்டிய நிலை வேகமாக உருவாகி வருகிறது.

அடுத்ததாக உலகில் பரவலாக அங்கங்கு தெறித்துக் கிடக்கும் எதேச்சாதிகார, சர்வாதிகார முறைகள் பின்தங்கிய நாடுகளில் செல்வாக்கடைவதைத் தடுக்கும் மிகப் பெரிய பிரச்சினை இப்பொழுது தோன்றியிருக்கிறது. இது எதேச்சாதிகாரம், பாஸிசம் முதலியவற்றைக் கடுமையாக எதிர்த்துப் பிரசாரம் செய்வதனால் நிறைவேற்றிவிட முடியாது. ஜனநாயகத்தில் மக்களுக்கு மிகச் சக்திவாய்ந்த பொறுப்புக்கள் உண்டு. அவற்றை நிறைவேற்றக்கூடிய முறையில் பொது மக்களை உருவாக்க வேண்டும். இதுவே இன்று ஒவ்வொரு நாட்டையும், ஒவ்வொரு நாட்டுப் பிரஜையையும் எதிர்நோக்கியுள்ள பெரிய பிரச்சினையாகும். ஆகவே மக்களாட்சியிலும், தனிமனித சுதந்திரத்திலும் பற்றுடைய நாடுகளும் ஐக்கிய நாடுகள் சங்கமும் உலகில் ஜனநாயகம் நிலைக்கத் தகுந்த முறைகளில் உறுதியுடன் உழைக்க வேண்டும்.

* "The undoubted ascendency of authoritarian and totalitarian ideologies and forms of goverment which the democracies can counter only by a greater sense of purpose, diffusion of responsibilities and the activities for the ordinary citizen."

—Prof. W. Friedmann in "World Politics"


# காமன் கூத்து

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

மன்மதன் இன்னும் அனங்கனாக வாழ்கிறான் என்று ஸ்ரீ நேரு தாம் எழுதிய நூல் ஒன்றில் கூறியுள்ள போதிலும், அந்தக் கொள்கையை எதிர்ப்பவர்களும் ஆதரிப்பவர்களுமுண்டு. தென்னாட்டில் அவர்களை 'எரிந்த கட்சி, எரியாத கட்சி' என்று அழைப்பார்கள் ஆனால் சிறந்த பாடகர்கள் இல்லாதபடியினால் தோட்டப் பகுதிகளில் இவ்விரு கட்சிகளையும் முறையாகச் சித்திரித்து ஆடுபவர்களில்லை.

# "கல்யாண பரிசு"

வசந்தியும் பாஸ்கரும் பள்ளிக்கூடக் காதலர்கள். இவர்களின் நட்பையறியாத வசந்தியின் மூத்த சகோதரி கீதாவும் பாஸ்கரனைக் காதலிக்கிருள். போதாக் குறைக்கு அந்தச் செய்தியை அவள் வசந்தியிடம்




வெளியிட்டபோது வசந்திக்கு பேரிடி விழுந்ததுபோலாயிற்று. தன் பள்ளிக்கூடப் படிப்பின் நிமித்தம்சகலசுகங்களையும்தியாகம் செய்த சகோதரியின் ஆவலைப் பூர்த்தி செய்வதற்காக, வசந்தி தன் ஆழ்ந்த காதலைத் துறந்து,பாஸ்கரைத்தன் சகோதரிக்கு விவாகம் செய்துவைத்தாள். எல்லோரும் ஒரே வீட்டில் வசித்து வந்தபடியினுல் சமய சந்தர்ப்பங்கள் வசந்தி மீது கீதா சந்தேகம் கொள்ளும்படி செய்து விட்டன. இதைத் தாங்க முடியாமல் வசந்தி வீட்டைவிட்டு வெளியேறிச் செல்லும்போது ஓர் மோட்டார் விபத்தில் அகப்படுகிருள். மோட்டாரில் வந்த பெரியவர் அவளைத் தமது வீட்டுக்கு அழைத்துச் செல்கிருர். அவருடைய மகன் ரகு (ஏற்கனவே வசந்தியை அறிந்திருப்பவன்) அவள் மீது காதல் கொள்கிருன். ஆனுல் வசந்தியின் மனத்திலோ பாஸ்கரைத் தவிர வேறெவரும் குடிகொள்ள முடியவில்லை. இதற்கிடையில் கீதாவுக்கு ஓர் ஆண் குழந்தை பிறக்கிறது. வசந்தி கீதாவின் வீட்டைக் காலி செய்ததன் விளைவாக அவளுக்கும் பாஸ்கருக்குமிடையே முதலில் இருந்த காதலைப் பற்றியும், தனக்காகத் தான் அவள் தன் சொந்த காதலைத் தியாகம் செய்தாள் என்பதையும் அறிந்து கொண்ட கீதா துயரத்தால் நாளுக்கு நாள் மெலிந்து கடைசியில் ஒரு நாள் இவ்வுலகை விட்டுப் பிரிந்து விடுகிருள். ஆனுல் இந்தச் செய்தி வசந்தியின் காதுகளுக்கு எட்டவில்லை. ரகுவின் நல்ல குணத்தை முன்னிட்டு ஒருவாறு அவனை விவாகம் செய்யச் சம்மதிக்கிருள். பாஸ்கரின் நண்பன் சம்பந் தற்செயலாக ஒரு நாள் வசந்தியைக் காண நேர்ந்து இவ்விஷயத்தை அறிந்து பாஸ்கருக்கு தெரிவிக்கிருன். கல்யாணம் நடந்து கொண்டிருக்கிறது. பாஸ்கர் தன் குழந்தையைச் சுமந்து கொண்டு கல்யாண வீட்டிற்குள் நுழைகிருன். மணமகனும் மணமகளும் ஓம குண்டத்தைச் சுற்றி வருவதைக் கண்டதும், வசந்திக்கு ஒரு கடிதம் எழுதி அதை மகன் கையில் கொடுத்து, அவனைத் தனது கல்யாணப் பரிசாக வசந்தியிடம் அனுப்பி விட்டு வெளியே போய் விடுகிருன்,

## பட விமர்சனம்

ஜெமினி கணேசனும் சரோஜா தேவியும் முறையே பாஸ்கராகவும் வசந்தியாகவும் நடித்து ரசிகர்களின் ஆதரவைப் பெறுகின்ருர்கள். உதாரணமாக, வசந்தி பாஸ்கரிடம் சென்று தன் சகோதரியை மணக்கும்படி கேட்டபோது, அவர்களுடைய நடிப்பில், கண்களில் நீர் மல்கக் கூடிய அளவுக்கு உணர்ச்சி ததும்பியது. கல்யாண வீட்டில் தன் புதல்வனை கல்யாணப் பரிசாக அனுப்பும் போதும் கணேசனின் நடிப்பு தத்ரூபமாயிருந்தது. மற்றைய நடிக நடிகையர்களும் தத்தம் பாகங்களை நன்ருகத்தான் நடித்திருக்கிருர்கள். ஆனுல் பாஸ்கரின் நண்பன் சம்பந்தாக வரும் தங்கவேலு மட்டும் கொஞ்சம் அளவுக்கு மீறிவிட்டார்.

இதுவரை கதை வசனம் எழுதி வந்த ஸ்ரீதர் இந்தப் படத்தில் டைரக்டராகவும் தோன்றி தாம் இந்தப் புதிய துறையிலும் சமர்த்தர் என்பதை நிரூபித்து விட்டார். பின்னணிப் பாடகர்கள் ஏ. எம். ராஜாவும் சுசீலாவும் பாட்டுகளை இனிமையாகப் பாடியுள்ளார்கள். முக்கியமாக அவர்களின் 'உன்னைக் கண்டு நானுட' என்ற பாட்டு அற்புதமாய் அமைந்திருக்கிறது.

சகல அம்சங்களிலும் சிறப்புற்று விளங்கும் ஒரு நல்ல படமென்று பொதுவாகக் கூறிவிடலாம்.




வெற்றிகரமான 9-வது வாரம்!

எல்பின்ஸ்டன் (மருதானை) வின்ஸர் (யாழ்ப்பாணம்)

சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், ஓ. ஏ. கே. தேவர், கருணாநிதி, பத்மினி, ராகினி, வரலெட்சுமி, முத்துலெட்சுமி

நடித்த

வீரபாண்டிய

கட்டபொம்மன்

(முழுநீள டெக்னிக்கலர் படம்)

தமிழ்த்திரை வானிலே ஒளிவிடும் நட்சத்திரங்களை ஒருங்கே சந்திக்கும் அரிய வாய்ப்பு!
கலைத்துவம் செறிந்த காட்சிகளை உடனே கண்டானந்தியுங்கள்!!

வெகு விரைவில் வருகிறது!

சிலோன் தியேட்டர்ஸ் தாபனத்தாரின் தியேட்டர்களில்

ஏ. வி. எம்.

மாமியார் மெச்சிய மருமகள்

5-வது வாரம்! கெயிட்டி திரையில்

பாலையா, பண்டரிபாய், தங்கவேலு, ஈ. வி. சரோஜா நடித்த

மனைவியே மனிதனின் மாணிக்கம்

**சினிமா உலகம்**

# மந்திரவாதி

**பட விமர்சனம்**

நீலா புரொடக்ஷன்ஸ் அளிக்கும் 'மந்திரவாதி', சுவரொட்டிகளில் **'மந்திறவாதி'**யாக மாறிவிடுகின்றது. ஒருவேளை அதுவும் ஒரு மந்திர வித்தையோ, என்னவோ!

மந்திரஜால வித்தைகள் நிறைந்த படமாகவாவது இருக்கக்கூடுமென்ற நம்பிக்கையிலேயே நான் படத்துக்குச் சென்றிருந்தேன். ஆனால், அதிலும் ஏமாற்றமே!

கதையைக் கூறுவதற்கு முயற்சித்தால், நான் என்னை ஒரு மடையனாக்கி விடுவேன். அவ்வளவு குழப்பம் கதையில். ஊர், உறவினர் இல்லாத ஒரு மந்திரவாதிக்கும், நாட்டின் இராஜ குடும்பத்திற்கும் உள்ள தொடர்பைக் கண்டுபிடித்து விட்டால்—ஏன்? அவரே மந்திரவாதியாக விளங்கிவிடலாம்.

கதாநாயகனாகப் பிரேம் நஸீர் வருகிறார். அவரிடம் பெண்மை தோன்றுகிறதே தவிர, ஆண்மை அவ்வளவு தோன்றவில்லை. ஆனால், அப்படியிருந்தும், அவர் வில்லுடனும் வாளுடனும் காட்சியளிக்கிறார். அவருக்கு ஏன் இந்த வீண் சிரமமோ?

கதாநாயகியாக வருகிறார் மிஸ் குமாரி. அழகான முகவெட்டு. நடிப்பில் புதிதாகத் தோன்றினாலும், எதிர்காலத்தில் நன்றாகச் சோபிக்கக்கூடியவர் என்பதை விளக்கிவிடுகின்றார்.

மந்திரவாதியாகத் தோன்றுபவரின் நடிப்புத்தான் படத்தில் சிறந்த நடிப்பாகத் தென்படுகின்றது. படத்தின் நாமத்தைத் தாங்கும் அவரது பாத்திரத்தின் மூலமாவது, அவர் படத்தின் பெயரை ஓரளவுக்காவது காப்பாற்றத்தானே வேண்டும்?

ஆரம்ப நடனம் நன்றாகவிருக்கிறது. மற்றவை சாதாரணம். பாடல்களில் சில இனிக்கின்றன; சில சோதிக்கின்றன. ஒலி, ஒளிப்பதிவு இரண்டுமே படத்தின் தரத்தை உயர்த்த உதவியதாகத் தெரியவில்லை.

வசனம் இளங்கோவினுடையது என்பதை நம்புவது கஷ்டம்.

தமிழ்ப் படவுலகில் 'மந்திரவாதி' போன்ற படங்கள் மலியத் தொடங்கிவிட்டால், தமிழ்த் திரைஉலகின் கதி அதோகதிதான்!

—மின்மினி

# பார்த்திபன் கனவு

**நாடக விமர்சனம்**

மட்டக்களப்புப் பகுதியில் நாடகங்கள் பாலைவனப் பசுந்தரைகளைப் போன்று ஒறுப்பானவை. நாடகம் பார்க்க வேண்டுமென்ற தாகத்தைத் தணித்து, கலைத்தொண்டு செய்வதில் வின்ஸன்ட் மகளிர் கல்லூரி முன்னணியில் நிற்கிறது. பாரதிதாசரின் 'பாண்டியன் பரிசு', சோமுவின் 'கடல் கண்ட கனவு' ஆகியவற்றை மேடையேற்றிய பெருமையும் அவர்களுடையதே. நாடகத் துறையில் தனியே ஒரு பாரம்பரியத்தை ஏற்படுத்தியுள்ள அவர்கள், சமீபத்தில் 'கல்கி'யின் பார்த்திபன் கனவை அரங்கேற்றியிருக்கிறார்கள். அவர்களுடைய துணிவைப் பாராட்டத்தான் வேண்டும்.

மாமல்லபுரத்துச் சிற்பங்களையும், பல்வேறு குகை ஓவியங்களையும் பார்த்த 'கல்கி' கண்ட கனவுகளின் எழுச்சிகள் தான், 'பார்த்திபன் கனவு' 'சிவகாமியின் சபதம்' ஆகிய அமர இலக்கியங்கள். இந்த நவீனங்களை நாடகமாக்குவது மிகக் கடினமான வேலை. சிறந்த கற்பனை வளமும், சரித்திரப் புலமையும், தமிழறிவும், இதன் நாடகப் பிரதியை அமைக்கத் துணிபவருக்கு அவசியமிருக்க வேண்டும்! 'பார்த்திபன் கனவு' என்ற நாடகம், அவர்கள் அளித்துள்ள முன்னைய நாடகங்களின் தரத்திற்கு அமையவில்லையாயின், அந்தப்பழியை நாடகப் பிரதியைத் தயாரித்தவரும், அதனை இயக்கியவருந்தான் முற்று முழுக்கச் சுமக்க வேண்டும்!

**நிறைகள் சில:**

✧ மேடைக் கூச்சம் கொஞ்சமுமில்லாது மாணவிகள் சிறப்பாக நடித்திருக்கிறார்கள். முக்கியமாக நரசிம்மவர்ம பல்லவராக நடிக்கும் சோராவும், குந்தவியாக நடிக்கும் சாந்தியும் பிரமாதமாக நடித்துள்ளனர். பார்த்திபன், பொன்னன், வள்ளி, அருள்மொழி ராணி ஆகிய பாத்திரங்களில் தோன்றியவர்களும் தத்தம் பாத்திரங்கள் சோடை போகாமல் நடித்திருக்கின்றனர். தோழிகளாகவும், வெண்சாமரை வீசுவோராகவும் 'பேசாமடந்தை'களாகத் தோன்றும் பாத்திரங்களின் முகங்களிலும் கலை சொட்டுகிறது! ஆனால் விக்கிரமனை நடிப்பவர், நடிப்பை மேடைப்பேச்சு என்று தவறுதலாக நினைத்திருக்கிறார். மாரப்பபூபதி வில்லன் சிரிப்புச் சிரிப்பதாக நினைத்து நமக்கு 'வேப்பெண்ணெய்' வழங்குகிறார்.

✧ மிகத்தரமான பாடல்கள் நாடகத்தில் இடம்பெற்றிருந்தன. சிறப்பாக, குந்தவி பாடும் இரண்டு பாடல்களையும் இனிமைக்கும், இசை அமைப்பிற்கும் எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

✧ பாத்திரங்களுக்கேற்ற உடையலங்காரம் கவர்ச்சிகரமாக அமைந்திருந்தது.

✧ காலதாமதமின்றிக் காட்சிகளை நகர்த்தினார்கள். மிகச் சுறுசுறுப்பான மேடை மேற்பார்வை இருந்திருக்கவேண்டுமென்பதற்கு இது நல்ல எடுத்துக்காட்டு.

**சில குறைபாடுகள்:**

✧ நாடகத்தின் வீழ்ச்சிக்கு முதல் காரணகர்த்தர் நாடகப் பிரதி அமைத்தவரே! 'கல்கி'யின் கதையை வைக்கோற் போரில் தொலைத்துவிட்ட ஊசியைத் தேடும் பிரயத்தனத்துடன் தேட வேண்டியிருக்கின்றது. நாடகம் (நடனம், பாட்டுகள் நீங்கலாக) 50 நிமிட நேரமே நடைபெறுகிறது. இது ஓரங்க நாடகமொன்றினை மேடையிலேற்றும் நேரம். இதன் காரணமாக கபால பைரவராக வரும் ஒற்றைக் கையிழந்த நீலகேசியையும், வாதாபியை ஜெயித்துச் சிவதொண்டில் இறங்கிய சிறுத்தொண்டரையும், ஊமையாக நடித்து இரத்தின வியாபாரியாக வரும் விக்ரமனை ஏமாற்றும் குள்ளனையும், நாம் மேடையில் சந்திக்கவில்லை.

50 நிமிட நாடகத்திற்கு 5 பாடல்களையும், நான்கு நடனங்களையும் சேர்த்து, நாடகத்தைத் 'தண்ணீர்ப்பா'லாக்கியிருக்கிறார்கள்.

**முடிவாக:**

நல்ல கனவு; நல்லமுயற்சி. மாணவிகளுக்கு நிரம்பிய ஆற்றலிருக்கிறது. நாடகப் பிரதி அமைப்பிலும், டைரக்ஷனிலும், காட்சி, உடை, ஒளி, அரங்க அமைப்புகளிலும் நாடகத்தைப் பழக்கும் ஆசிரியைகள் சிரத்தை எடுப்பார்களேயானால், இந்த மாணவிகளைக் கொண்டு பார்த்திபன் கனவை மட்டுமல்ல, சிவகாமியின் சபதத்தையும், பொன்னியின் செல்வனையும் நாடகமேடையில் அரங்கேற்ற முடியுமென்ற நம்பிக்கை வீண்போகாது.

—இரசிகன்

## பாதுகாப்புச் சபையில் இலங்கைக்கு அங்கத்துவம்

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதுவே முதல்தடவையாகும். 20ஆந் திகதி புதிய பொதுமக்கள் சபை கூடும்போது புதிய சபாநாயகரும், உப சபாநாயகரும் தெரிவுசெய்யப்படுவார்கள். 27ஆந் திகதி சிம்மாசனப் பிரசங்கம் வாசிக்கப்படும்.

**பெருந்தலைவர் மாநாடு**

ஜனாதிபதி ஐசனோவர் அடுத்தவருடம் வசந்தகாலத்தில் ருஷியாவுக்கு விஜயம் செய்வதற்கு முன் பெருந்தலைவர் மாநாடு நடைபெறலாம் என ஐக்கிய அமெரிக்க அரசாங்க மந்திரியின் காரியாலயத்தைச் சேர்ந்த ஒரு அதிகாரி கூறியிருக்கிறார். உலகில் சமாதானம் நிலை பெறுவதற்குரிய சூழ்நிலை உருவாகியிருப்பதாகவும் ஏகாதிபத்திய வல்லரசுகள் போரில் இறங்குவார்களானால் முற்றாக அழிந்து விடுவார்கள் என்றும் ருஷியப் பிரதமர் குருஷேவ் கூறியிருக்கிறார்:

**ஈராக் பிரதமரைக் கொல்ல முயற்சி**

ஈராக் பிரதம மந்திரி, மேஜர் ஜெனரல் அப்துல் கரிம் கசிம் என்பவரைத் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்ய கடந்த 7-ந் திகதி நடைபெற்ற முயற்சி பலிக்கவில்லை. ஒரு புயத்தில் காய மேற்பட்டு இப்போது குணமடைந்து வருகிறார். இவர் காரில் செல்லும் போது இனந் தெரியாத ஒருவரால் சுடப்பட்டார். தலைநகராகிய பாக்தாத்தில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஜெனரல் கசிம் ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேறும் தினம் ஈராக்கில் தேசிய தினமாகக் கொண்டாடப்படுமாம். ஜெனரல் கசிம் 1958 ஜுலை மாதப் புரட்சியின் பின் பிரதம மந்திரியாக இருந்து வருகிறார். சென்றவாரம் நடைபெற்ற கொலை முயற்சி குறித்து விசாரணை செய்வதற்கு ஒரு குழு நியமிக்கப்பட்டிருக்கிறது.

**சைப்பிரஸ்**

அதி மேற்றிராணியார் மக்காரியோஸுக்கும் முன்னாள் எயோக்கா இயக்கத் தலைவராகிய ஜெனரல் கிறிவாஸுக்கும் இடையே அதென்ஸ் நகரில் நிகழ்ந்த பேச்சு வார்த்தைகளில் இருவரும் தத்தம் தப்பபிப்பிராயங்களைத் தீர்த்து, சைப்பிரஸின் எதிர்காலம் குறித்து உடன்பாட்டிற்கு வந்திருக்கின்றனர்.

**லாவொஸ்**

ஐக்கிய நாடுகள் தாபன பாதுகாப்பு சபையின் உபகுழுவினர் லாவொஸில் தமது வேலைகளை முடித்துக் கொண்டு சென்ற செவ்வாய்க்கிழமை நியூயோர்க் நகருக்குப் புறப்பட்டனர். அவர்களுடன் லாவொஸில் கடமையாற்றிய சில உத்தியோகத்தர்கள் மேலும் விபரங்களைச் சேகரிப்பதற்காக தொடர்ந்து லாவொஸில் தங்கியிருக்கின்றனர். உபகுழுவினரின் அறிக்கை பாதுகாப்பு சபையில் ஆராயப்பட்டு லாவொஸில் அமைதியை நிலைநாட்டுவதற்கு அடுத்த நடவடிக்கை பற்றி முடிவு செய்யப்படும்.

**பாதுகாப்பு சபையில் இலங்கை**

எதிர் பார்க்கப்பட்ட வண்ணம் இலங்கை ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் ஒரு உறுப்பு நாடாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறது. இலங்கை 1960, 1961 ஆகிய ஆண்டுகளுக்கு அங்கம் வகிக்கும். எக்குவேடோரும் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறது. மூன்றாவது வெற்றிடத்திற்கு துருக்கியும் போலந்தும் போட்டியிடுகின்றன.

## இந்தியா

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெளி நாட்டுக் கொள்கையைத் தொடர்ந்து கடைப் பிடித்து வரும் எனவும் கூறியுள்ளார்.

**பர்மாவின் பிரதமர்**

இந்தியாவுக்குச் சென்ற வாரம் விஜயம் செய்த பர்மாவின் பிரதமர், ஜெனரல் நீ வின் இருநாட்கள் புதுடில்லியில் தங்கி மக்மாஹன் கோட்டு எல்லையையும், சீன எல்லையையும் குறித்து பிரதமர் நேருவுடன் ஆலோசனைகள் நடாத்திவிட்டுச் சென்ற சனிக்கிழமை தாயகம் திரும்பியிருக்கிறார்.

**மேற்கு வங்காளம்**

மேற்கு வங்காளத்தில் வெள்ளத்தினாலும் புயலினாலும் பாதிக்கப்பட்டிருக்கும் இடங்களுக்கு விமானங்கள் மூலம் உணவு, உடை முதலியன வழங்கப்படுகின்றன. இறந்தவரின் எண்ணிக்கை 25 என அரசாங்கம் கூறுகின்றது; 54 என ஏனைய செய்திகள் கூறுகின்றன.

**பிரதமர் நேரு**

ஆந்திர இராச்சியத்தில் நான்கு நாட்கள் சுற்றுப் பிரயாணம் செய்வதற்காகப் பிரதமர் நேரு சனிக்கிழமை புறப்பட்டார்.

**இந்தியா - பாகிஸ்தான் மாநாடு**

இந்தியா - பாகிஸ்தான் எல்லைத் தகராறுகளைக் கலந்தாலோசனை செய்வதற்காக இரு நாடுகளின் மந்திரிகள் தலைமையில் கூட்டப்பட்ட மாநாடு சென்ற வியாழக்கிழமை புதுடில்லியில் ஆரம்பமாகியிருக்கிறது. நான்கு நாட்களுக்குப் பின் இம் மாநாடு கிழக்குப் பாகிஸ்தானின் தலைநகராகிய டக்காவில் நடைபெறும்.

இந்தியா - பாகிஸ்தான் பிரிவினைகால நிதிப் பங்கீட்டுத் தகராறு பற்றி ஆலோசனை செய்வதற்காக ஒரு மாநாடு சென்ற வியாழக்கிழமை கராச்சியில் ஆரம்பமாகியிருக்கிறது.

## ஒரு நடிகனுக்கு அமைய வேண்டிய பண்புகள்

**சேர் லோறன்ஸ் ஒலிவியர்**

(சென்ற வாரத் தொடர்ச்சி)

நடிகர்கள் தங்கள்பாகத்தை பேசுமுன், அதை நன்றாகப் படிக்க வேண்டும். சிலருக்கு இது கஷ்டமாகவிருக்கிறது. என்னைப் பொறுத்தவரை, நான் எனது வசனங்களை இலகுவில் மனனம் செய்துவிடுவேன். ஆனால், நாடகம் முடிந்ததும், வசனத்தையும் மறந்துவிடுவேன். அன்றொரு நாள் மாலை எனது நண்பரொருவருடன் பேசிக் கொண்டிருக்கையில், அவர் என்னுடைய நாடகமொன்றிலிருந்து வசனங்களைப் பொழிந்து தள்ளினார். நான் அவற்றை நினைவில் வைத்திருக்கக்கூடும் என்பதே அவருடைய எண்ணம் போலும். ஆனால், எனக்கோ அவை நினைவிலேயே இல்லை!

நாடகத் துறையின் வளர்ச்சி பற்றி நான் அதிகார பூர்வமான முறையில் எதுவும் கூற விரும்பவில்லை. தர்க்கரீதியான மனிதனாக நான் தோற்றமளிக்க விரும்பவில்லை. நடிப்புக் கலையில் செயல் முறையில் ஈடுபடக் கூடிய அம்சங்களை அறியவே நான் பெரிதும் முயற்சித்து வந்துள்ளேன். ஆனால், இங்கு நான் ஒரு அபிப்பிராயத்தைக் கூறிவிட விரும்புகிறேன். ஏறத்தாழ நூறுவருடங்களுக்கு முன்னர், எமது நாடகங்களில் பங்கு பற்றிய நடிகர்கள் எவ்வித கூச்சமுமின்றித் தமது உணர்ச்சிகளை அப்படி அப்படியே வெளிக்காட்டத் தயங்கவில்லை. அவர்களுடைய நடிப்பு உணர்ச்சியின் தூண்டுதலாக விருந்ததேயன்றி, சிந்தனையின் பின்னர் பிறந்த நடிப்பாக அமையவில்லை.

1840-ஆம் ஆண்டுவரை எமது நாடகக் கொட்டகைகளில் இந்தவிதமான நடிப்பே மேலோங்கி நின்றது. ஆனால், அதன் பின்னர், ஒரு புதுவிதமான நடிகர் மேடையில் தோன்றினார். அவர்தான் வில்லியம் சாள்ஸ் மக்றெடி என்பவர். இன்றைய நடிகனின் முன்னோடியாக விளங்கியவர் இவர்தான். தனது உணர்ச்சிகளின் மூலம் தனது சொந்த மனப்பான்மையை மாத்திரம் பிரதிபலிப்பது தான் நடிப்பு என்பதை ஏற்றுக் கொள்ளாதவர். கணத்துக்குக் கணம்மாறும்உணர்ச்சிகளில் அவர் நம்பிக்கை வைக்கவில்லை; ஆழ்ந்த சிந்தனையிலும், ஆராய்ச்சியிலுமே அவர் நம்பிக்கை வைத்திருந்தார். நாடகத்தைப் பற்றி அவரது மனம் சதா சிந்தனையிலும், எண்ணப் போராட்டங்களிலுமே லயித்திருக்கும். நாடகத்தில் வரும் ஒவ்வொரு அங்கத்தையும் அவர் ஆற அமர அலசிப் பார்த்த பின்னரே, நாடகத்தைத் தொடங்குவார். அல்லாவிடில், நாடகத்தில் தோன்றும் வெவ்வேறு அரிய கட்டங்களைச் சமனாக்க முடியாது.

இன்றைய நடிகன், மக்றெடி அவர்களின் உதாரணத்தையே அதிகமாகப் பின் பற்றுகிறான். இதன் காரணமாகவே, இப்போதைய நடிகர்கள் நாடகம் முழுவதுமே நன்றாக நடித்துவிடுகிறார்கள். அவர்கள் ஐம்பது வயதாகு முன்னரே, குடியினால் இறந்து விடுவதில்லை. பல்கலைக்கழகப் பட்டமொன்றுக்குப் படிப்பதுபோல் படிக்க வேண்டியதன் தேவையை நடிகர்கள் நன்கு உணர்ந்து வருகிறார்கள்.

உதாரணமாக, நான் ஷேக்ஸ்பியரின் நாடகப் பாத்திரங்களில் ஒன்றில் தோன்றுவதாக வைத்துக்கொள்ளுங்கள். நான், அந்தப்பாத்திரத்தைப் பற்றிய, நூலாசிரியர்களின் வெவ்வேறு கருத்துக்களையும், தேர்ந்தெடுத்துப் படிப்பேன். அவர்கள் கூறுவதையெல்லாம் மனத்தில் எடுத்துக்கொள்வேன். அத்துடன், அப்பாத்திரத்தின் தனிப்பட்ட சில செயல்களையும் அறிந்துகொள்ள முயற்சிப்பேன். இந்த விதமான ஆழ்ந்த படிப்பு நடிகர்களுக்கு அவசிய தேவையாகும். (முற்றும்)

# இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

**கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளித்து உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் ஓர் அரிய பரிசை இப்பொழுது சினிமாஸ் லிமிடெட் தாபனத்தார் சினிமா ரசிகர்களுக்கு அளிக்கின்றனர்.**

நீங்களும் அப்பரிசைப் பெற்று விட்டீர்களா?
இல்லையேல் விரைந்து செல்லுங்கள்!!



**கிங்ஸ்லி - பிளாஸா - நவா** (கொழும்பு) **வெலிங்டன் - மனோஹரா** (யாழ்ப்பாணம்)

**விஜயா** (மட்டக்களப்பு) **வெம்பிளி** (கண்டி) **ஸ்ரீகிருஷ்ண** (திருக்கோணமலை) **அயின்** (மன்னார்)

உள்ளத்தை உருக்கும் **கதை** மட்டுமல்ல....
நெஞ்சையே கொள்ளை கொள்ளும் **காதல்**
நினைத்து நினைத்து சிரிக்க வைக்கும் **ஹாஸ்யம்**
இவையனைத்தும் கொண்டதுதான்......

நடிகர்கள்:

**ஜெமினி கணேசன்**
**கே. ஏ. தங்கவேலு**
**ஏ. நாகேஸ்வர ராவ்**
**எம். என். நம்பியார்**
**பி. சரோஜாதேவி**
**விஜயகுமாரி**
**எம். சரோஜா**

மற்றும் பலர்

**வீனஸ் பிக்சர்ஸ்**

# கல்யாண பரிசு

கதை, வசனம்
டைரக்ஷன்
**ஸ்ரீதர்**

கல்யாணம் செய்வது ஒருவர்!


பரிசு பெறுவது இன்னொருவர்!

ஆனல்

இவை இரண்டையும் ஒன்ருகப் பெறுபவர்?

வேறு யாராக இருக்கலாம்?

நீங்கள்தான்!




இப்பத்திரிகை யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கலாநிலையப் பதிப்பகத்தில் 'ஈழநாடு' பத்திரிகையின் சொந்தக்காரருக்காக பாலசுப்பிரமணியம் சிவானந்தன் அவர்களால் அச்சிடப்பெற்று, எஸ். எம். யோசவ் வில்பிறட் அவர்களால் 1959-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 17-ந் திகதி வெளியிடப்பெற்றது.